


மாதப் பத்திரிகை

பொங்கல் வெளியீடு

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

பிரமாதி வருஷம் — தைப் பகுதி

**15—1—1940.**



# ஒரு விண்ணப்பம்.

N211,N38
31HO

சென்ற மாதப் பகுதி 'சில்பஸ்ரீ'யின் முதல் வருஷத்தைப் பூர்த்தி செய்வது. புகழோடு தோன்றிய போதிலும், கேவலம் புகழுக்காகவோ, பொருளுக்காகவோ 'சில்பஸ்ரீ' நடத்தப் படவில்லை என்பதை அன்பர்கள் அறிவார்கள். 'சில்பஸ்ரீ' இயற்றிய தமிழ்த் தொண்டை நாம் பாராட்டுவதும் உசிதமன்று. குறைந்தபக்ஷம் ஐந்நூறு அபிமானிகள் 'சில்பஸ்ரீ'யை ஆதரித்தால், 'சில்பஸ்ரீ' நீடித்து உழைக்க இயலும். தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், புத்தகசாலைகள், சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவே போதுமானது. ஆனால், இதுவரை, ஐந்நூறு அபிமானிகளேனும் கிட்டவில்லை என்பதை இச்சமயம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரையும் தலைக்குப் பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்குமாறு பிரார்த்திக்கிறோம். பங்குனிக்குள் சந்தாதாரர்கள் கிடைக்காவிடில், எப்போது கிடைக்கிறார்களோ அதுவரை, 'சில்பஸ்ரீ' நிறுத்திவைக்கப்படும்.

அப்படி நிறுத்தாமல், தொடர்ச்சியாகவே நடைபெறுமாறு தமிழன்பர்கள் உதவுவார்களாக.

# விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

15 JAN 1940

## கவிதா விமர்சம்


1. நீராட்டம் ... வே. திருப்பதி நாயுடு ... 1
2. கண்ணனும் கோபிகைகளும் ... S. சுந்தரராஜன் (சரித்திர ஆராய்ச்சி மாணவன்) ... 3
3. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.. ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் ... 8
4. ஆறுமுக நாவலர் ... 'ஜனக குமாரி' ... 11


## புதுக்கல்பனைகள்.


1. கடிகாரம் .... 'கை. சு. வே.' ... 13
2. செந்நெறி அல்லது சிந்தையின் நிறைவு ... ஊ. சா. வேங்கடராமையர் ... 16
3. சந்திரகுப்தன் ... K. வரதாச்சாரி, B.A., B.L, ... 17
4. உத்தரபூமி—பதுமைகளின் ஓய்வு நேரம். 'வேர்க்கல்லி' ... 33
5. பீமனின் சந்திப்பு ... 'குழற்கோவலன்' ... 39


## கீதப் பகுதி

N๑๑๖๒N38
3140


1. மாரிமுத்துப் பிள்ளை .... பண்டித ச. சோமசுந்தர தேசிகர் ... 47
2. சங்கீத கட்டுக்கதைகள் ... 'வில்லன்' ... 50


## சிற்பப் பகுதி


1. சோளஸிம்ஹபுரம் ... ஸ்ரீமதி கே. எம். ஸௌந்தரவல்லி அம்மாள் ... 52


## அனுஷ்டானப் பகுதி.


1. திருவாதிரை ... டாக்டர் வே. ராகவன் ... 55


## மொழிபெயர்ப்புப் பகுதி


1. கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் .... 60


## காலஞ்சென்ற நண்பர் ஸ்ரீ சோமசுந்தர தேசிகர்


ஸ்ரீ சோமசுந்தர தேசிகர் ... 64

# அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

---

## சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி விலை அணா 4.

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. 3.



# கவிதா விமர்சம்.

## நீராட்டம்

(வே. திருப்பதி நாயுடு, இடிகரை.)

நமது பாரதநாடு உஷ்ணப் பிரதேசமானதால் நீராடுதல் தேக சௌக்கியத்துக்கு காற்றுக்கு அடுத்த சுகாதாரமாகிறது. ஆனால் நமது முன்னோர்கள் நீராடுதலை கர்மத்திற்கு முதற்படியாகக்கொண்டு, பகவத் பக்தியோடு இணைத்து, தொன்றுதொட்டு திருவிழாக்களாகவும் கொண்டாடி வந்தார்கள். பிரதி மாதத்திலும் திருக்கோயில்களில் திருமஞ்சனம், அபிஷேகம் முதலிய விழாக்களிருப்பினும், தனுர்மாதமே அதற்குத்தக்கதாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனெனில், நமது சாஸ்திரங்களில் மனிதருக்கு ஒருவருஷமானால் தேவர்களுக்கு ஒருநாளாக கணக்கிட்டிருக்கிறார்கள். அதில் தக்ஷிணாயனம் இரவாகவும், உத்தராயணம் பகலாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தனுர்மாதம் தக்ஷிணாயனத்தின் இறுதியாதலால் தேவர்களுக்கு பிராதக்காலமாகிறது. பிரதிதினத்திலும் பிராதக்காலமே விசேஷ முகூர்த்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனென்றால், பிராதக்காலத்தில் வாதபித்த சிலேஷ்ம நாடிகள் சமப்பட்டு எல்லா ஜீவராசிகளுக்கும் புத்தி நுட்பமும் உற்சாகமும் உண்டாவதாக சுருதி யுக்தி அனுபவங்களினால் அறிகிறோம். ஆகையினால், மார்கழி மாதம் தேவர்களுக்கு பிராதக்காலமானதினால் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. அதனாலேதான் கிருஷ்ணபரமாத்மா கீதையில் மாதங்களில் மார்கழிமாதம் நானே ஆகிறேன் என்று சொன்னார். பூர்வத்தில், இந் நீராடுவிழாவை, ஆயர்பாடியிலுள்ள கோபிகாமணிகள் கிருஷ்ண சம்சிலேசத்தை அடைதற்பொருட்டு ஜலக்கிரீடை செய்து அடைந்தனராதலால், அதுமுதற்கொண்டு இதனை நம் பாரதநாட்டினர் அனைவரும் கொண்டாடலாயினர் என்ப.

ஆயர்பாடியிலுள்ள ஐந்து லக்ஷம் குடிப் பெண்களாகிய கோபிகள் ராமாவதாரத்தில் ரிஷிகளாயிருந்தனரென்றும், ராகவனது திருமேனியழகில் ஈடுபட்டு, (ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்) என்றபடி, ஸ்ரீராம சம்சிலேசத்தை விரும்ப, ராகவன் ‘அடுத்த அவதாரத்தில் அங்ஙனம் ஆகுக’வென ஆக்ஞாபித்தமையால், அவ்விருடிகளே ஆயர்மடவாராய் அவதரித்தனரென புராணம் கூறும். அங்ஙனம் பிறந்த ஆயர்சிறுமிகள் சிறுபருவம் முதற்கொண்டே கண்ணபிரானோடு ஒக்க விளையாடு

தலைக் கண்ட யாதவர்கள் 'தங்கள் பெண்கள் பேதைப்பருவம் நீங்கின், கண்ணன் அவர்களைக் கெடுத்துவிடுவான்' என எண்ணி ஒவ்வொருவரும் தத்தம் இல்லங்களில் நிலவரைகளை உண்டாக்கி, அப்பெண்மணிகளை அங்கிலவரைகளில் வைத்து வெளிவராமற் காத்து வந்தனர். இங்ஙனம் சின்னாட் சென்றபின், ஆயர்பாடியில் மழையின்றிப் பயிர்கள் சாவியாகிவிடலும், மழைக்கடவுளாகிய இந்திரனுக்கு நோன்பு நோற்கப் பெண்கள் எல்லாரையும் வெளியேவிட்டு, அந்நோன்புக்கு தலைமை வகித்து செவ்வனே நடத்திக்கொடுக்கும்படி தமது அரசகுமாரனாகிய கண்ணனை வேண்டவும், கண்ணன் முதலில் தான் இசையாததுபோல் நடித்து, பின் தம் தாய்தந்தையர் சொற்படி, நடக்க இசைந்தான். அவ் வாயர்மடந்தையர் இவ்வமயத்தைத் தங்கள் கண்ணனோடுகூடி தங்கள் காதலைத் தீர்த்துக்கொள்ளவும், ஜலக்கிரீடை, ராசக்கிரீடை முதலிய கிரீடைகள் செய்யவும் நோன்பு நோற்றனர். இந்நோன்பு மார்கழி மாதத்து நிகழ்ந்ததாக ஸ்ரீமஹாபாகவதம் ஒன்பதினாயிரத்தில் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. அக்கவிகள் வருமாறு :—

ஸ்ரீமஹாபாகவதம் கூறைகெள்படலம்.

1. கார்காலங்கழிய வுலகங்களெல்லாம்
கதிரவன்றன் அவிர்பரந்துகாட்சியெய்தப்
பாராரும் பொழில்களெல்லாம் வயங்க வாயர்
பதி மாதரெண்ணிலர்கள்பரிவினோடும்
தாராரும் குழலசைய ஆரமாடத்
தன மிலங்க நதிக்கரையில் தனுர்மாதத்தில்
நீராட லுவந்து வந்து மருங்கு நோவ
நெருங்கினர்கள் நிறைகனகக் கொம்பு
போல்வர்

2. வாச மிகு காலே கங்க கமழவேதான்
வந்தெழில்கொள் பாளிதங்கள் கரைமேல்
வைத்தே
ஆசில் வதனத்திருகண்ணின் வாயினழ
கினினும் அரவிந்தங்கழுநீராம்பல்
மாசில் அயத்துள்நிவந்துமறைவ போல
மடந்தையர்கள் விழுந்தெழுந்து குடைய
நீரின்
ஓசையுறு மார்கழி நீராடினார்கள்
வுயர்ந்தெழுந்த வளியினங்கள் பாடியாட
அனங்கன் மனந்தடுமாறித்திகைப்ப வானின்
அரம்பையர்கள் நாணவுயர் அண்டர்மாதர்
இனங்கன் விழுவெழுவர் கையா லிலங்து
மலர்பறித்து யெறிந்தேயெறிவர் தூய
தனங்களிணை வயங்க இடை துவளவில்லார்
தாளநகையெழக்குழல்தான் தன்னிற் சுற்ற
மனங்களியுங் களிப்பினோடு தினமு மெய்தி
மார்கழி நீராடியவர் மகிழும் நாளின்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் மாரிகாலம் எனப்படும். இம்மாதங்களில் சூரியகிரணங்களை அநேகமாய் மேகங்கள் மறைத்துக்கொண்டேயிருக்கும். அம்மாரிகாலம் கழிந்தவுடன் சூரியன் தன்கிரணங்களை உலகெல்லாம் பரப்பிப் பசிய பயிர்களின்மேல் தன் கடாட்சத்தை வீசுவதால், எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலெனத் தோன்றும். தடாகங்களிலும், ஆறுகளிலும் ஜலம் நிறைந்திருக்கும். இதுசமயம் ஆயர்பாடியிலுள்ள மங்கையர் எல்லோரும் மிக்க குதூகலத்தோடு பூக்கள் அணிந்த கூந்தல் அசையவும், தனபாரங்களின்மேல் அணிந்திருக்கும் முத்து ஆரங்கள், ரத்ன ஆரங்கள் பிரகாசிக்கவும், பொன்மயமான நிறத்தையுடையவர்களான அம்மாதர் மென்மையாலும் இளமையாலும் தங்கள் இடைகள் துவளும்படி கூட்டமாகவந்து மார்கழி மாதத்து விடியற்காலையில் நீராட யமுனையாற்றங்கரைக்கு வந்து நெருங்கினர். அப்படி வந்த மங்கையர் யாவரும் தாங்கள் பூசிக்கொண்டிருந்த சந்தனக் குழம்பு முதலான வாசனை தங்கியவாய் தாங்கள் அணிந்திருந்த அழகிய ஆடைகளைக் களைந்து, கரைமேல் வைத்துவிட்டு, ஸ்நானம் பண்ணினதானது, தாமரைப் புஷ்பங்களும், செங்கழுநீர் புஷ்பங்களும், குமுதம் அல்லி முதலிய மலர்களும் ஜலத்தின் கீழே போவதும் மேலே வருவதும்போல் இருந்தனவாம். ஏனெனில், அவர்களது கண்கள், மூக்கு, செவி, வாய் முதலியன அம்மலர்களை ஒத்திருந்தமையால், வண்டினங்கள் இவைகளில் உட்கார வருவனவும், இவர்கள் நீராடும்போது உண்டாகிற சப்தத்தினால் மேலே எழுந்து ஆடுவனவுமாய் இருந்தன. இங்ஙனம் கோபிகா ரமணிகள் ஆனந்த மிகுதியால் ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டும், மலர் பறித்து ஒருவர்மேல் ஒருவர் எறிந்து கொண்டும் நீர் விளையாடுதலைக் கண்ட மன்மதன் இவர்களுக்கு காமோபேக்ஷ

உண்டாக்கக் கருதி யுத்தசன்னத்தனாய் கரும்பு வில்லை எடுத்து புஷ்பபாணங்களைத் தொடுக்க ஆரம்பித்தான்; அவனால் முடியவில்லை. ஏனெனில், அவர்கள் கூட்டம் அதிகம். பதினாயிரத்து நூறுபேர்; ஏககாலத்தில் எல்லோர்மேலும்பாணம் தொடுப்பது ஒருவனால் சாத்தியமில்லை; அதனால் மனந்தடுமாறினான். இன்னும் ஒரு அர்த்தம்: அந்த கோபிகளுடைய மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களிலேயும் கிருஷ்ணபரமாத்மாவே நிறைந்திருந்ததினால், தன் தந்தைக்கு ஏதாவது கோபமுண்டாகுமோ என மனந்தடுமாறினான் எனினும் அமையும். மற்றும் தேவலோகத்து மாதர்களாகிய அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலியோர் நீராட வந்தவர்கள் இந்தக் கோபிகைகளைப் பார்த்து வெட்கமடைந்து நின்றனர்களாம். ஏனெனில், அத் தேவமாதர் சவுந்தரியத்திலும், தேஜஸிலும் தங்களுக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லையென கர்விதராய் இருந்தமையால், இவ் வாயர்மங்கையரைப் பார்த்து அழகிலும் பிரகாசத்திலும் தங்களை வெல்லும்படி இருந்தமையால், நாணினர் என்ப. இங்ஙனம் கோபஸ்திரீகள் கண்ணபிரானையே சதா நினைத்து, நீராடி நோன்பு நோற்று, இம்மை மறுமைப் பயன்கள் எய்தினர்கள். இக்கவிகளுக்கு இன்னும் விசேஷ உரை உண்டு; விரிவஞ்சி விடுத்தனம்.

# கண்ணனும் கோபிகைகளும்.

(சரித்திர ஆராய்ச்சி மாணவன்.)

[நம்மாழ்வார், பகவானைக் கண்ணனாகவும், தன்னையொரு கோபிகையாகவும் பாவித்து, நெடுநாள் அவன் பிரிவாலே நோவுபட்டுப் பிறகு தூதுவிட்டு, அவன் வரும் சின்னங்கள் தோன்றினவாறே, அவன் வந்தாலும் மறுபடியும் விச்லேஷம் வரும் என்று நிச்சயித்து, தற்காலம் கூடி பிறகு துக்கம் அனுபவிப்பதைவிட அவனைப் பார்க்காமலிருப்பதே உசிதம் என்று தேறி, தன்னுடைய தோழிகளுடன் மனோஹரமானதொரு உத்தியானத்திலே, அவன் கிட்டவொண்ணாதபடி இருந்த இருப்பைப் பேசுகிறார். இப்படித் தன்னைப் பிரிந்தவள் நோவுபடுதலைக் கண்டு, கண்ணன் மனம் பதறி, இவளிருப்பிடத்திற்குத் துரிதமாகச் சென்று, அவளுடைய கோபத்தைக் கண்டு அஞ்சி, அவளுடைய தோழிகளைப் புருஷகாரமாகக்கொண்டு அவளை அடையப்பார்த்து, அவர்களும் முகம் கொடுக்காமையாலே, அவளுடைய விளையாட்டுச் சாமான்களை எடுக்கிறான். அவள் அதைக்கண்டு பொறாதே எடுக்க வேண்டாமென்று அவனை தடுக்க, அதன்மூலமாக அவர்களுக்குள் சிறிது ஊடல் விவாதம் தொடங்க, பிறகு இருவரும் கூடுகிறார்கள். இவ் வேடிக்கைப் பேச்சை நம்மாழ்வார் அனுபவித்தவாறு, திருவாய்மொழியின் வ்யாக்யாதாவான வடக்குத் திருவீதிப்பிள்ளையையனுசரித்து இது எழுதப்பட்டிருக்கிறது.]

[கண்ணன் துரிதமாக வந்து ஸ்வாதீனத்தோடு பந்தைவும் கழலையும் எடுக்கிறான்.]

கோபிகை:—கண்ணா! வா! நீ எடுக்கிற இவைகளெல்லாம் நீ நினைக்கிறவர்களதன்று; உனக்கு உபேக்ஷமான எங்களது. இவற்றைத் தந்துவிட்டு, உன் பிரியைகள் பக்கல் போ.

கண்ணன் :—இதுவென்ன புதுமை! அவர்கள் யார்?

கோ :—அவர்கள்தான் உன் அருளைச் சூடின பிரியைகள்.

க :—அவர்கள்தான் இங்கில்லையே!

கோ :—அப்படியா! நீ அவர்களுடன் சேர்ந்திருந்ததை அங்கில்லாதிருந்தும் நான் அறியவில்லையா? அப்படியே அவர்களுக்கும் தெரிந்துவிடும். செய்யத்தகாததைச் செய்து அதையும் மறைக்கிறாய்; இது சரியில்லை.

க :— மறைத்தால் என்ன?

கோ:—எனக்கு பயமாயிருக்கிறது இங்கே சற்றுக் காலதாமதமானாற்கூட, உன் பிரியைகளைக் காணாமல் நீ துடியாய்த் துடிப்பாய். அதைப் பார்க்க எனக்கு சகியாது!

க :—என்னோடுதான் உனக்கு ஒரு உறவும் இல்லையே; துடிப்பானேன்?

கோ :—கலந்து பிரிதல், துடிப்புக்காணுதல் —இவைகளை எல்லாம் செய்யக்கூடியவன் நீ. பிறர் அனர்த்தம் கண்டு நாங்கள் ஒருக்ஷணம் கூட பொறுக்கமாட்டோம். பிறரனர்த்தம் காணுதல் என்பது உன்னைப்போல் எங்களுக்கும் பொழுதுபோக்கன்று.

க :—ஏன் இப்படி என்மேல் பழி அடுக்கிக்கொண்டே போகிறாய்? உன்னையொழிய எனக்கு வேறு பிரியைகளும் உண்டோ?

கோ :—அது பொய்.

க :—நான் யாரிடமாவது பொய் செய்ததுண்டா?

கோ :—நீ யாரிடத்திலாவது மெய் செய்திருக்கிறாயா? சொல்.

க :—உண்ணாமலும், உறங்காமலும், ஒலி கடலை ஊடறுத்துச்சென்று ஒருத்திக்காக இலங்கையை அழித்ததும் பொய்யா?

கோ :—அதைத்தான் நீ வேண்டுமென்று செய்தாயா என்ன? ஒருதுறையில் ஒரு மெய்யேனும் பறிமாறுவிடில் நமக்கு மேலுள்ளதெல்லாம் அகப்படாதென்று செய்தாய். அபலைகளை அகப்படுத்திக்கொள்ளச் செய்த சூது அல்லவா இது.

க :—அழகிது! ஒவ்வொரு துறைக்கும் ஒரு மெய்யுண்டென்றாயே; அதைத்தான் இங்கே செய்ததாகக் கொள்ளேன்.

கோ :—சரிதான். உன் சுண்டாயமெல்லாம் எனக்குத் தெரியும்.

க :—தெரிந்தென்ன? தெரியாவிடிலென்ன?

கோ :—உன் கிருத்திரிமங்களைக்கொண்டு இங்கு என்னிடம் ஒன்றும் செய்யமுடியாது. அபூர்வைகளான உன் ஸ்திரீகள் பக்கல் போ.

க :—சரி, போகிறேன். (பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டு போகின்றான்).

கோ :—நீ எங்கே செய்ய வேண்டுவதை இங்கே செய்கிறாய்! அவைகள் நீ நினைக்கிறவர்களதன்று; என்னுடையது.

க :—அதுதான் எனக்குத் தெரியுமே.

கோ :—சரிதான், அவைகளைக் கொடுத்துவிட்டுப்போ.

க :—நான் தருவேனோ? இவைகள்தானே எனக்கு வேண்டும்.

கோ :—நீ 'முதலி' இல்லையா? எங்கு சென்றாலும் உனக்குப் பந்தும் கழலும் கிடையாவோ? (கண்ணன் திரும்பிப் பார்த்து, இவளை உற்று நோக்குகிறான்)

கோ :—ஏன் நிற்கிறாய்? அவைகளைக் கொடுத்துவிட்டுப் போ.

க :—சரி, போகிறேன். (அவன் சற்று கிட்ட நெருங்குகிறான்).

கோ:—உறவுடையவன்போல் கிட்ட வாராதே. சற்று தூரவே நின்று எங்கள் புடவைமேலேபடாமல் போ. அற்பரான எளியர்கள் செய்வதை முதலியான நீ செய்யலாமோ? (அவள் அவனுடைய முகத்தைப் பார்த்துக் கண்ணழகில் ஈடுபடுகிறாள்).

க :—என்னுடைய அழகில் ஈடுபட்டு, என்னோடு உறவில்லை என்கிறாயே! இது எப்படிப் பொருந்தும்?

கோ :—நாங்கள் உன்னை அனுபவிக்கும் உறவையுடையவர்களல்லோம்; உன் அழகைக் கண்டு உருகி தேகக்கட்டு அழிந்து உருக்குலைய வேயி பிறந்தோம்.

க :—நீங்கள் யாராகவேண்டுமானாலும் இருங்கள்! அதுகிடக்கட்டும், இதென்ன ஒரு மயிர் முடி இருக்கிறதே!

கோ :—போலி வஸ்துவைக்கண்டு பிரமிக்கும்படி உன்னை யார் பண்ணிவிட்டார்கள்!

க :—வெகு சாமர்த்தியமாகப் பேசுகிறாயே! அப்படிக்கூட சிலர் உண்டா!

கோ :—உனக்கு இப்படி சித்தப்பிரமை உண்டாகும்படி செய்யவல்லை மயிர்முடியையுள்ள பிரியைகள் யாரோ, அவர்களிடம் போய்ச்சேர்.

க :—அப்படியே செய்கிறேன்; அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் வருந்தனையுமாவது இங்கேயிருக்கிறேனே.

கோ :—உன் துன்பம் முடிவதற்கு வழி சொல்லட்டுமா?

க :—அதென்ன? சொல்லேன்.

கோ :—உன்னுடைய புல்லாங்குழலை ஊதி, அவ்வோசையின் சமிக்ஞையால் அவர்களை அழைத்துக்கொள்.

க :—'பெண்களைக் கூப்பிடக் குழலூதுகிறான்' என்று என்னைப் பழிப்பார்கள்; அது சரியன்று.

கோ :—அதற்கும் ஒரு உபாயம் சொல்லுகிறேன். நீ மேய்க்கும் பசுக்களைத் தூரப் போகவிட்டு, அவைகளைக் கூப்பிடும் பாவனையாகக் குழலை ஊது; அப்பொழுது பழிவராது. (கண்ணன் குழலை ஊதுகிறான்)என்ன என்ன! ஒன்றைச் சொன்னால் ஒன்றைச்செய்வாரோ? உன் பிரியைகள் திரளுகைக்காக, நீர்வாய்ப்பான நிலங்களிலே போயிருந்து குழலூது.

க :—'போய்க்குழலூது' என்று நீ சொல்லுவானேன்! குழலூதுகை எங்கள் சாதித்தொழில் அல்லவா? அதைப்போய் நீ தப்பர்த்தம் செய்கிறாயே.

கோ :—உன் பொய் எங்களிடம் விலை செல்லாது; உன் பொய்யில் புதியது உண்டறியாத அபூர்வைகளிடையே செப்பு.

க :—உன்னைத்தவிர வேறு அறிவேனா?

(கண்ணன் தன்னைக் குறித்துச் சொல்லும் வார்த்தையில் விக்ருதையாகிறாள்.)

கோ :—(அவன் அழகைக் கண்டு) நாங்கள் முன்பு ஒருநாளும் உன்னுடைய இச்செவ்வியைக் கண்டறியோமே!

க :—அது கிடக்கட்டும். இதோ, இந்தத் தோளழகைப் பார். (அவளுடைய தோளைச் சுட்டிக் காட்டுகிறான்).

கோ :—உன்னை பிரமிக்கப்பண்ணும் தோளுடைய எவளை நினைத்துக்கொண்டு பிதற்றுகிறாய்?

க :—எனக்கு, அப்படிக்கூட, வேறு யாரேனும் உண்டோ?

கோ :—இந்த மாயமெல்லாம் என்னிடம் வேண்டாம்.

க :—இப்படி நீ கோபிக்கலாமோ? நான் ஸ்வதந்திரனா? பசுக்களின் பின்னே போகவேண்டாமோ? பசுக்களின் ரக்ஷணார்த்தமாகப் போகவேண்டுகையாலே, சற்று கால தாமதமாயிற்று; நான் வேறு என்ன சொல்லட்டும்!

கோ :—சிறிய வடிவைக்கொண்டு சகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து, சிறிய ஆலந்தளிரில் கண்வளர்ந்தாய். இப்படி அகடிதங்களைச் செய்யவல்லமையுள்ள நீ 'பசு மேய்க்கப்போனேன்' என்று கேட்டார்க்கு அஸத்யத்தைச் 'ஸத்யம்' போல் சொல்லுதல் நியாயமோ?

க :—நான் ஒரு அரைக்ஷணம் தாழ்த்து வந்ததற்காக 'அஸத்யன்' என்று பட்டம் கட்டிவிட்டாய். அஸத்யனாயிருப்பின், யாவருக்கும் தெரிந்துவிடாதா?

கோ :—உன்னுடைய கிருத்ருமங்களை பிரம் மாவுட்பட தேவர்களும் அறியார்கள். இப் படி ஒருவருக்கும் நிலமல்லாததை அபலை களான நாங்கள் எவ்விதம் அறியக்கூடும்?

க :—அது கிடக்கட்டும். நான் பசு மேய்க் கப்போனது அஸத்யமா, சொல்?

கோ :—பெண்களுடைய நோக்கிலே அகப் பட்டு அவர்களைவிட்டுப் போகமாட்டாதே நின் ரும், பசு மேய்ப்பது?

க :—'காட்டில் உன் வயிறும் நிறைத்து, பசுக்களின் வயிற்றையும் நிறைத்துக்கொண்டு வா' என்றுதானே தாய் தகப்பனர் சொன் ஞர்கள். இன்னவிடத்தில் நின்றுமேய் என்று பிரதேச நிர்ணயம் பண்ணவில்லையே.

கோ :—கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரு துரும்புகூட இல்லாமல், பெண்கள் விளையாடு கிற மணற்குன்றுகளிலேதான் பசு மேய்க்க வேண்டும் போலும்! என்னை நீ நெருங்கவேண் டாம், போ.

க :—செய்யத்தகாததைச் செய்தேனென் றும், பொய்யை மெய்யாக்கினேனென்றும் என்னை க்ருத்ரிமனுக்குவது உனக்குத் தகுமா?

கோ :—மனச்சாக்ஷி உள்ளவன் இப்படிக் கூறுவது அடுக்குமா? பொய்யன் என்பதற்கு உன்னையன்றி வேறு சாக்ஷி வேணுமா?

க :—இவ்வாறு வெறும் பேச்சால் என்ன பயன்? ஒரு சாக்ஷி காட்டி என்னைப் பொய் யன் என்று நிரூபி, பார்க்கலாம்.

கோ :—அப்படிக்கேள், சொல்லுகிறேன்; ஜயத்திரத வதத்தினின்று 'பகலை இரவாக்க வேண்டு'மென்று ஒரு க்ருத்ரிமத்திலே துணிய, அதற்குப் பேருதவி செய்த உன் திருவாழி யையே கேள், சொல்லும். (கண்ணன் விழிக் கிருன்).

க:—சரி, வகையாய் அகப்பட்டுக்கொண் டாய்; போனதுபோகட்டும். உனக்கு ஒரு ஹிதம் சொல்லுகிறேன்! கலங்கின உன்னைத் தெளிவிக்கிறேன்.

க :—இனிமைப் பேச்சுக்கூட உன்னிடம் உண்டோ?

கோ :—போலியைக் கண்டு பிச்சேறுகின்ற தேன்மொழியர்கள் வாடாமே, அவர்கள் பக் கல் போ. உனக்கும் ஆறுதலாயிருக்கும், அவர்களுக்கும் சந்தோஷமாயிருக்கும்.

(முகத்தைத் திருப்பிக்கொள்கிருள்)

க :—உன் பேச்சைவிட, அவர் வார்த்தை கள் எனக்கு சிலாக்கியமாகுமோ? (அவளு டைய பூவையும் கிளியையும் கொண்டாடு கிருன்).

கோ :—இவைகள் எங்களுடைமை ; நீ நினைக்கிறவர்களதல்ல; கலங்கின உனக்கு தெளிய வார்த்தை சொல்வோர்களும் நாங்கள் அன்று; என் கிளியோடு கொஞ்சா தே. (அவள் பேசியதைச் சட்டை செய்யாமல் மரப்பொம்மையை எடுக்கிருன்). இதுவும் உன் பிரியைகளதன்று; இதை எடுப்பதால் உன க்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. (பொம் மையை எடுக்கவொட்டாமல், கையால் கெட்டி யாய்ப் பிடித்துக்கொள்கிருள்). அதை எடுக்க எங்களனுமதி வேண்டாவோ உனக்கு?

க :—எனக்கும் நிவாரகருண்டா? நான் எப் படி வேண்டுமானலும் செய்யலாமல்லவா?

கோ :—உன் செய்கையால் ஒரு பயனு மில்லை; இவைகளை நீ கொண்டுபோகையால், தங்களதல்லாமையாலே உன் பிரியைகள் உன்னை முகமெடுத்தூக்கூட பார்க்கமாட்டார் கள்.

க :—இவைகளை எடுப்பதால் எனக்கு வேறு பிரயோஜனமில்லைதான்; ஆனல் அதை எடுப் பதே எனக்கு பிரயோஜனம். எங்கேனும் பிரயோஜனத்துக்கு ஒரு பிரயோஜனம் உண் டோ?

கோ :—இப்பொய்களுக்கெல்லாம் நாங்கள் பழையோமல்லவோ? அப்படியிருக்க எங்களி டமேயா திரும்பத்திரும்ப பொய் உரைப்பது. நீ சொல்லும் பொய்யையெல்லாம் 'மெய்' யென்றிருப்பாரிடம் போய்ச்சொல்.

க :—(இரண்டடி கிட்ட நெருங்கி) அப்படி யானல் அங்கு போகும் வழிகளும், போன பின் செய்யும் படிகளும் எல்லாம் சொல்லு. கேட்டுத் தெரிந்துகொண்டாவது போகிறேன்.

கோ :—சற்று விலகி நின்றே பேசும்; கழகம் ஏறவேண்டாம், நம்பீ!

க :—கிட்ட வரக்கூடாதபடி நான் அப்படி என்ன தவறு செய்துவிட்டேன்?

கோ :—உமக்கும் நமக்கும் தாரதம்மியம் வெகுவாக இருக்கிறது. முதலிகளாயிருக்கும் உமக்கு எளியர்களான நாங்களிருக்குமிடம் வரப்போகுமோ?

க :—நான் முதலியானாலும் ஆகிறேன், பயிலியானாலும் ஆகிறேன். என்னை உனக்குத் தெரியாதா என்ன? 'தீமை செய்யும் சிரீதரன்' என்றல்லவா என்னைச் சொல்லுவார்கள். ஆகையால் நாலிரண்டு பெண்களிருந்தவிடமெல்லாம் தீம்பு செய்கை என் ஸ்வரூபமல்லவா?

கோ :—உம் பேச்சு அறியாமையைத் தெரிவிக்கின்றது. தீமை செய்வார்க்கும் ஒரு பிராப்தி வேண்டாவோ? (கண்ணன் அப்படியும் கேட்காமல் அவள் கையிருந்த பொம்மையைப் பிடுங்க யத்தனித்தான்) எங்கள் கையிலிருந்து பாவையைப் பறிப்பது தர்மமல்லவே; செய்யத்தகாததையல்லவா செய்கிறாய்.

க :—செய்யக்கடவதற்கும், செய்யக்கடவதல்லாததற்கும் வரம்பு கட்டுவது நானல்லவா?

கோ :—நீர் ஸர்வலோக நாதராயினும், ஸர்வ குணக்ஞராயினும், பிழை பிழைதான்.

க :—வெகு குணக்ஞனை எனக்கு ஏதோ ஒரு தோஷம் தென்பட்டால், அதுவும் மறைபடாதோ?

கோ :—சந்திரனுக்குமல்லவா மறு மறைபடுவதில்லை. குணம் பிரகாசிக்கும்போது குணஹானியும் பிரகாசிக்கும்.

(கண்ணன் பதில் சொல்ல வகைதெரியாததால், பிறர்க்குச் சொல்லவொண்ணாத சில சிருங்கார வார்த்தைகளை இவள் காதில் மெல்லச் சொல்கிறான்).

கோ :—நினைக்கவும்கூடக் கூசவேண்டும் நெஞ்சறிந்த வார்த்தையைச்சொல்லி ஏன்விளையாடுகிறாய்? உனக்கு எங்களோடு விளையாட முறை உண்டோ?

க :—எனக்கு விளையாட முறையில்லாதார் யார் இருக்கிறார் இப்பூமியில்?

கோ :—நெஞ்சிலில்லாததைச் சொல்வதால் உனக்கென்ன பிரயோஜனமுண்டு? என் பந்துக்கள் கேட்டால், மிகவும் தவறாய் முடியும்; உன்னோடு சேர்க்கையுண்டு என்பதை இதுகாறும் என் தமையன்மார் உணரார்கள்.

க :—அவர்கள்தான் இங்கில்லையே.

கோ :—ஆனால் முதலில் தெரியாவிட்டாலும், ஒருநாளல்லது ஒருநாள் அறிவார்கள்.

க :—அப்படி அறிந்தால் என்ன?

கோ :—முதுகில் குத்தும், தடியால் பூசையும் விழும். (சகிகள் பக்கம் திரும்பி) தோழிமார்களே! நாம் போவோம் வாருங்கள். (போக முயலுகிறாள்; கண்ணன் அவர்களை இடைமறிக்கிறான்). ஏ ஞானமூர்த்தியே! உன் முகம் பார்த்து அனுபவிக்கப் பெறுமையாலே துவண்டு, வழியை வளைக்கையாலே தோழிகளோடு விளையாட முடியாமல் இடையூறு விளைவிக்கிறாய். நீயும் நாங்களும் இவ்வாறு இருக்கக்கண்டால், யாரேனும் உகவாதவர் என்ன சொல்வார்கள்? (தோழிகள் பக்கம் திரும்பி) நாம் சிற்றில் கட்டி விளையாடுவோம், வாருங்கள். (கண்ணனைக் கவனிக்காமல் சிற்றில் கட்டி, சிறு சோறு அட்டி விளையாடினார்கள்; கண்ணன் தன் கால்களால் சிற்றிலைச் சிதைக்கிறான்.) என் நெஞ்சை உன் தாமரைத்தடங்கண் விழிகளால் வலைப்படுத்தி நீ எங்கள் சிற்றிலை அழித்தாய். ஆனால் நீ யழித்தது சிற்றிலையன்று; எங்கள் அகவாயையும் அழித்தாய்; சிற்றிலோடு சிந்தையையும் சிதைத்தாய்; எங்கள் விளையாட்டால் ப்ரீதனாய் உன் முகவொளி திகழுமாறு முறுவல்செய்து நிற்கிறாய்; காலால் அழித்தது சிற்றிலையன்று; எங்கள் நெஞ்சையும் அறத்தையும் அழித்து ஹர்ஷனாய்த் திகழ்கிறாய்; ஆனால் உன் சாமர்த்தியத்திற்கு இது ஒரு ஏற்றமோ? இவ் வாயர்குலத்தை ரக்ஷிக்கத் தோன்றிய உன்னால் எங்களுக்கு எப்போதும் துன்பமே! (பின்னும் பலவாறாக ஸ்துதி செய்து மனக்களிப்படைகிறாள்).

# துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

(திருச்சி ஸ்ரீமதி. டி. எஸ். ஜானகி அம்மாள்.)

நம் தமிழ்த்தாயின் அருந்தவப்புதல்வரும், செந்தமிழ்க் கடல் கடக்கத் திகைப்போர்க்கு ஓர் கலங்கரை விளக்கமும், உத்தமக் கவிகட்கு ஓர் கட்டளையுமாயும் விளங்குபவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காஞ்சிபுரத்தில் குமாரசாமி தேசிகர் என்பவருக்குப் புத்திரராய் அவதரித்தவர்; தொண்டைமண்டல வேளாளர்; சைவசமயத்தினர்; வேலைய சுவாமிகள், கருணைப்பிரகாச சுவாமிகள் என்ற இருவருக்கும் மூத்தவர். இவருக்கு ஞானம்பிகை என்ற ஒரு தங்கையும் இருந்தார். இவரது பெற்றோரும், தங்கையாரும் கல்வியில் வல்லவர்கள். இவர் தாதையாரும் புலவர்; எனவே வழி வழி வந்த புலவர் மரபு இவர் மரபு.

"கயல் வாய்த்த கண்ணி உலகீன்ற
வல்லி பங்கா உனது
செயல் வாய்த்த அன்பர்க்கும்
அல்லாதவர்க்கும் சிரிப்பல்லவோ
இயல் வாய்த்த எந்தைக்கு
யான் வாய்த்ததும் இங்கேன்றனக்கு
வயல் வாய்த்ததும் மனை
வாய்த்ததும் மைந்தர்கள் வாய்த்ததுமே"

என்பது இவர் தந்தையார் பாடல்.

சிவப்பிரகாச சுவாமிகள் இளமையில் நன்கு கல்வி பயிற்றப்பட்டார். இவர் உயர்ந்த நூற்படிப்பில் நாட்டங்கொண்டு, கலைகளின் கருணை வாய்ந்து கவிபாடுதலில் சிறந்து விளங்கினர். கனிட்டர்களான வேலைய சுவாமிகள் கருணைப்பிரகாச சுவாமிகள் இருவரும் தென்னாடு சேர்ந்து, திருநெல்வேலிக்கருகிலுள்ள சிந்துபூந்துறையில் வதிந்த வெள்ளியம்பலத்தம்பிரான் அவர்களிடம் பஞ்ச இலக்கணம் பயின்றார்கள். வெள்ளியம்பலத்தம்பிரான் சிவப்பிரகாச சுவாமிகளின் திருமுகப் பொலிவு கண்டு இறும்பூதெய்தி உங்களுக்கு யாது வேண்டுமென்றார். ஐவகை இலக்கணமும் அறிய அதிகஆவல் என்று பதிலளித்தார். அப்போது தம்பிரானவர்கள் "கு என்று தொடங்கி கு என்று முடியவும், நடுவில் ஊருடையான் என்பது வரவும் ஒரு வெண்பா பாடு" என்று கட்டளையிட்டனர். மிக இனிய பாவைச் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றினர். அது பின்வருமாறு:—

குடக்கோடு வானெயிறு
கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி
வார்க்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத்
தில்லை தோண்மேற் கொள்ளல்
ஊருடையான் னென்னு மூலகு

அரிய நூல்களை வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பாடங்கேட்டு தனக்கு ஒப்பாருமிக்காருமின்றி அறிஞர்சிகாமணியாய்ச் சிவப்பிரகாசர் பிரகாசித்தார். துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியாரவர்கள் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு வேண்டுமட்டும் பொன்னளித்துக் கலைத்துறை காண உதவி வந்தார். ஆனால் சிவப்பிரகாசர் முந்நூற்றிருபதும் செம்பொன் குருதக்ஷிணையாக நல்கியபோது தம்பிரான் மகிழாது, திருச்செந்தூரில் ஒரு புலவர் தம்பிரானை மதியாது இறுமாப்புக்கொண்டு இகழ்ந்தாரென்றும் அவரை வென்று வருவதே தமக்குப் பெருங்காணிக்கையாகும் என்றும் பகன்றார். தமது குருவின் கட்டளைப்படி திருச்செந்தில்மாநகரம் சென்று ஆங்கு புலவருடன் வாதித்து 'இருவேமும் நீரோட்டயமகமாக, கந்தவேள்மீது முப்பது பாடல் கொண்டதொரு அந்தாதி பாடுவோம்; தோற்றவர் வெற்றி பெற்றவர்க்கு அடிமை" எனவும், அப்புலவரும் அதற்கிணங்கிப்பின் பாடமுடியாமல் திகைத்தார். சிவப்பிரகாசர் நீரோட்டக யமகவந்தாதி முப்பதும் பாடி முடித்து வெற்றித் துவசம் நாட்டி, அப்புலவரை அடிமையாக்கி, வெள்ளியம்பலத் தம்பிரானிடம் சேர்த்தார்.

சிவப்பிரகாச சுவாமிகள் கவிகளெல்லாம் புதுக்கற்பனை வாய்ந்தவைகளாய்ச் சொந்த அறிவின் திறத்தையும், ஒன்றன் ஏற்றத்தாழ்வுகளை நோக்கிச் சீர்தூக்கும் ஆராய்ச்சித் திறத்தையும்பெற்று விளங்குபவை. வடவேங்கடம், தென்குமரி, குணகுட கடல்கள் ஆகவுள்ள

அகப்பாட்டெல்லையும் இதற்கப்பாற்பட்ட புறப்பாட்டெல்லையாய பிறதேயங்களும் ஆகிய தமிழ் வழங்கும் நிலமெல்லாம் உலாவிவரும் பெரும் புகழுடையவராய் விளங்கினர். சிவப்பிரகாச சுவாமிகள் பல சிவஸ்தல யாத்திரை செய்தவர்.

## நூல்கள்.

சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய நூல்கள் முப்பத்தைந்து என்ப. சோணசைலமாலை, இஷ்டலிங்க அபிஷேகமாலை, கைத்தலமாலை, பழமலை அந்தாதி, வேதாந்த சூடாமணி, நன்னெறி, கூவப்புராணம், நால்வர் நான்மணிமாலை, கைத்தலமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, வெங்கைக் கலம்பகம், நக்கீரச் சருக்கம், கண்ணப்ப சருக்கம், (திருக்காவப் புராணம்) முதலியன. சிவப்பிரகாசசுவாமிகளின் கவித்துவம், ஆராய்ச்சித்திறம், சிவபக்தி முதலிய அருநலங் காட்டும் பெற்றியன. ஈண்டு சிற்சில் பாடல்களைக் காட்டுவாம்.

## பழமலை அந்தாதி.

தெய்வ சிகாமணியே மணி
  கூட்லிற் சென்று விற்ற
மெய்வ சிகாமணி கண்டா
  பழமலை வித்தக மீன்
நெய்வ சிகாமணி மாவெனுங்
  கண்ணியை நெஞ்சகத்து
பைவ சிகாமணி னேவா
  தெனை யின்பவாழ்வளித்தே.

(சிகாமணி—முடிமணி; கூடல்—மதுரை; வசிகா—வாணிகனே; காமணி மா எனும்—காவினுள்ள அழகிய மாம்பிஞ்சின் பிளவும் என்னும்; வசி—இரு; கா—பாதுகா; மணில்—பூமியில்.)

## வெங்கை கோவை.

பொய்ம்மே வுரு புனங் காவலர்
  யாங்கள் புனநடுவே
வம்மே வுறுமது காப்பவ
  ளீவளை சூழ்வ தெம்மூர்
நம்மே லருள் வைத் தனிப்பார்
  திருவெங்கை நாட்டிலுள்ளார்
தும்மேல் வருமவளை செய்காட்டுவே
  தொண் துலோத்துங்கனே.

(புனநடுவே வம்மே வுறுமது—புவனம்; தும் மேல் வரும் வளை—குவளை; வ—வகரம்.)

சிவப்பிரகாச சுவாமிகள் சைவசமயப் பரமாசாரிய மூர்த்திகளாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசக மூர்த்திகளையும், அவர்தம் அருளிச்செயல்களாகிய தேவார திருவாசகங்களையும் பாராட்டியிருக்கிறார் என்பது ஈண்டு கவனிக்கத்தக்கதாகும். சோணசைலமாலையில், "கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்து வெண்ணீற்றுப் புண்டரக் குறிசேர், நுதலோடும் நினையான் பூசனை புரியுமாறருளாய்" என்பது.

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர் தேவெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள் வேடங்களே

என்னும் திருஞான சம்பந்தர் தேவாரக் கருத்தைக் காட்டுகின்றது.

"விரை விடை யிவரும் நினைப் பிறவாமை வேண்டுநர் வேண்டுக; மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும் பிறவியே வேண்டுவன் தமியேன்" என்பது,

"குனித்த புருவமும் கோவ்வைச்
  செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளப்போன்
  மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
  பாதமும் காணப்பெற்றல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
  யிந்தமாநிலத்தே"

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

"குன்று தோறுடுங்குமரனே யெனவுங் கொடுஞ் சிலைமதன வேளெனவும், புன்றொழின் மனிதர்ப் புகழ்ந்து பாழ்க்கிறைக்கும் புலமை தீர்த்தெனக் கருள்புரிவாய்" என்பது,

"தையலாருக்கோர் காமனேசால நலவழகு
டையையனே
கையுலாவிய வேலனே யென்று கழறினுங்
கோடுப்பாரிலை
பொய்கை வாவியின் மேதிபாய்புக லூரைப்
பாடுமின் புலவீர்காள்
ஐயனும்ம நலகமாள்வதற் கியாதுமையுற
வில்லையே"

என்னும் சுந்தரமூர்த்திகளின் தேவாரக் கருத்தைக் காட்டுகின்றது.

பக்திப் பெருங்காற்றி லாடிப் பரம் பொருளாகிய சிவபெருமானைப் பணிந்தவரே சீரியோர் என்பதைப் பின்வரும் பாடலில் சிவப்பிரகாசர் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்:

சடனிற வண்ணன் கண்ணெனன் றிடந்து
மவறச்சிலம் பரற்றும் மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர் கோதைச்
சுரிகுழற் கருங்கட் மனைவியை யளித்தும்
அரு மக னறும் பூங் கருமயிருதவியும்
நென் குளிவாரி யின்னமு தருத்தியுங்
கோவண ரோர் தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டியரிவாள் ஊட்டி யரிந்தும்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும்
மொய்ம் மலர்க் கோதை கைமலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக் கொளுமாதர் மூக்கினை யரிந்தும்
பண்டைநாள் ஒரு சிலர் தொண்டராயினர்

என்று.

இப்பொன்னுரைப் பாடலின் பொருளை யாவரும் எளிதில் அறிவர். பரம்பொருளாகிய சிவபெருமானின் அடிமலரைச் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றுதலைத் தமிழக மக்கள் பின்பற்றிப் பேறு பெறுவார்களாக.

சிவப்பிரகாச சுவாமிகள் தனது தம்பிமாரான வேலைய சுவாமிகளுக்கும், கருணைப்பிரகாச சுவாமிகளுக்கும் விவாகஞ்செய்து வைத்தார். சகோதரியான ஞானம்பிகையைச் சாந்தலிங்க ஸ்வாமிகளுக்கு விவாகஞ்செய்து கொடுத்தார். துறவற நெறியிற் பிறழாது தனது வாழ்நாளைக்கழித்து முப்பத்திரண்டாம் வயதில் நிரதிசயானந்தப் பெருவாழ்வெய்தினார். பரசிவத்திற் கலந்தருளிய இச்சிவாநுபூதிச் செல்வாது கீர்த்தி என்றென்றும் விளங்கும் பான்மையைச் சிறுரும் பிறரும் சிந்தித்து வந்தித்துச் செந்தமிழ்த் தாய்க்கும் சில்பஸ்ரீக்கும் சிறப்புச் செய்வார்களாக. தமிழ்த்தாய் வாழ்க!

# ஆறுமுக நாவலர்.

'ஜனககுமாரி'

ஆறுமுக நாவலர், தமிழுலகத்திலே தமிழையும் சைவசமயத்தையும் வளர்த்த பெரியார்களுள் ஒருவர். அவரளவு சிறந்தவர் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில், தமிழ் நாட்டில் ஒருவரும் இருந்திலரென்று ஒருதலையாகச் சொல்லலாம். அவ்வளவு சிறந்தார் ஒருவருடைய பிறப்பு வளர்ப்புகளையும் சொற் செயல்களையும் அறிவது யாவர்க்கும் பெரும் பயன் தருமென்பதில் சந்தேகமில்லை.

ஆறுமுக நாவலர் இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே வேளாளர் குலத்திலே சகவருஷம் (1745-க்குச் சரியான சித்ரபானு வருஷம் மார்கழி மாதம் 5-ம் தேதி (18–12–1822) புதன்கிழமை பிறந்தனர். இவர் தந்தை பெயர் கந்தப்பபிள்ளை; தாயார் பெயர் சிவகாமியம்மை. அவர் உரிய வயதில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, முதலில் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்தும், பின்னர் வேலாயுத முதலியார் என்பவரிடத்தும், அதன்பின்னர்ச் சரவணமுத்துப்புலவர் என்பவரிட்த்தும் தமிழ் கற்றுக்கொண்டனர். ஜயவருஷம் (1834) அஃதாவது தமக்குப் பன்னிரண்டாம் வயதில், பீட்டர் பெர்சீவல் (Peter Percival) துரையின் ஆங்கில வித்தியாசாலைக்கு ஆங்கிலம் கற்கச்சென்றார். நாலைந்து வருஷம் ஆங்கிலம் கற்றபின் அவ்வித்யாசாலையிலேயே ஒரு உபாத்தியாயராக அமர்ந்தார். பின்னர்ப் பிலவ வருஷம் (1841) அதாவது, தமக்குப் பத்தொன்பதாம் வயதில், பெர்சிவல் துரைக்கும் தமிழ்ப் பண்டிதராயினர்.

பெர்சிவில் துரைக்குத் தமிழ்ப் பண்டிதராய் இருந்து பைபிளின் தமிழ்மொழிபெயர்ப்பைத் திருத்திக்கொண்டு வருங்காலத்தில், தமது வேலையை இயன்றவரை நன்றாகச்செய்ய வேண்டி, அவர் பைபிளையும் அதற்குக்கிறிஸ்து மதாசாரியர்களாலே செய்யப்பட்ட வியாக்கியானங்களையும் கற்றுக்கொண்டார். அதனால் அவருக்குப் பைபிளிலே சிறந்த ஞானமுண்டாயிற்று. அதிலே அவருக்குண்டான அறிவு கிறிஸ்துமதப் பிரசாரகர்களான பாதிரிமார்களில் பலருக்கு இருந்ததில்லை. இவ்வாறு பைபிளை ஆராயுங்காலத்து அதிலுள்ள குற்றங்களை யெல்லாம் செவ்வனே தெரிந்துகொண்டார். அதனோடு பாதிரிமார்கள் பிறமதத்தினரைக் கிறிஸ்தவர்களாக்குதற்குச் செய்யும் உபாயங்களையுமெல்லாம் நன்றாக அறிந்துகொண்டார். அதனால், யாழ்ப்பாணத்திலே கல்வியறிவில்லாதவர்களிடத்தே கிறிஸ்துமதம் பரவுதலையும், சைவசமயங் குன்றுதலையும் கண்டார். சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும் அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும், யாவரும் எளிதில் அறிந்து சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், சைவசமயம் வரவரக் குன்றுதலையும் கண்டார். ஆதலால், தமிழ் நாடெங்கும் பாடசாலைகளை ஸ்தாபித்துப் பிள்ளைகளுக்குச் சமயநூல்களையும், அவைகளுக்கு வேண்டிய கருவி நூல்களையும் இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைகாரணமாயுள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகீக நூல்களையும் கற்பிக்கவேண்டுமென்றும், திருக்கோயில்கள் தோறும் ஜனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பிக்கவேண்டுமென்றும் எண்ணினார்.

## மும்மொழிப் புலவர்.

இக்காரியங்களைச்செய்பவருக்கும் செய்விப்பவருக்கும் சமயநூலுணர்ச்சி இன்றியமையாதது என்று கொண்டு, தமது நூலுணர்ச்சியை விருத்தி செய்ய விழைந்து, சைவசித்தாந்த சாத்திரங்களை முன்னையிலும் அதிக கவனமாகக் கற்றார். அவைகளைச் சந்தேக விபரீதமறத் தெளிதற்கு அவற்றின் முதனூல்களாகிய சிவாகமங்களைக் கற்றறிதல் அவசியம் எனக் கண்டு, அவைகளைப் படிக்க முயன்று, சிலநாட்களுள் சமஸ்கிருத நூல்களை வாசிக்கவும், அவற்றின் பொருளை விளக்கவும் தாமே கற்றுக்கொண்டார். இவ்வாறு தமதறிவை விருத்தி செய்துகொண்டதனால் ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளுந் தெரிந்தவர் எனவும் சைவசித்தாந்த சாஸ்திரத்தில் வல்லவரெனவும் பெயரெடுத்தார்.

அதனல், யாவரும் இவரை நன்கு மதித்து மரியாதை செய்யவும், தங்களுக்குத் தெரியாத விஷயங்களை அவரிடத்தில் கேட்டறியவும் தலைப்பட்டார்கள்.

இக்காலத்தில் அவர் கருவி நூல்களையும், சமயநூல்களையும் சிலருக்குக் கற்பிக்க எண்ணங்கொண்டு, பிள்ளைகளைச் சேர்த்து, விசுவாவசு வருஷம் (1846) தைமாதம் முதலாகக் காலையிலும், மாலையிலும் கற்பிக்கத்தொடங்கினர். பின்னர்ச் சைவசமயத்தின் உண்மைகளையும், சமயாசாரங்களையும், சநாதன தர்மங்களையும் பொதுஜனங்களுக்குப் போதிக்க விரும்பி, வண்ணர்பண்ணைச் சிவன் கோயிலிலே பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 18-ம் தேதி தொடங்கிப் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் சைவப்பிரசங்கம் செய்து வந்தார். அவர் செய்துவந்த பிரசங்கம் பல நூல்களின் சாரங்களாயும், காதுக்கு இனியனவாயும், கேட்போருக்கு இனிது விளங்குவனவாயும் இருந்தமையால், ஜனங்களெல்லாம் அதிக ஊக்கத்தோடும், அன்போடும் வந்து கேட்பாராயினர். இப்பிரசங்கங்களைக் கேட்டவர் பலர், சைவசமயத்தின் இலக்கணம் இதுவென்றும், சைவசமயிகள் வழிபடுங்கடவுளின் இலக்கணம் இதுவென்றும், சைவசமயிகள் அத்தியாவசியம் தரிக்கவேண்டிய சின்னங்கள் இவை என்றுமறிந்து சமயதீக்ஷை பெற்றுக் கிரமமாக சந்தியாவந்தனம் முதலியவை செய்து, உருத்திராக்ஷந் தரித்துச் சிவாலய தரிசனம் செய்யத் தொடங்கினர்கள்; தேவார திருவாசகங்களைக் கற்றுக் கடவுளைத் தோத்தரிக்கத் தொடங்கினர்கள்;; இவ்வாறு யாழ்ப்பாணம் முழுதும் சைவசமயம் தலையெடுத்தது.

நாவலர்பெருமான் 1848-ம் ஆண்டுக்குச் சரியான கீலகவருஷம் ஆவணி மாதம் 14-ம் தேதி வண்ணர்பண்ணையிலே சிறுவர்களுக்குத் தமிழ்க்கல்வி கற்பிக்கவும், சமயவுணர்ச்சி புகட்டவும் வேண்டி, சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயரிட்டு ஒரு தமிழ்ப்பாடசாலை ஸ்தாபித்தார். இந்த வித்தியாசாலையை முதலில் அவர் ஊரிலே பிடியரிசி தண்டியும், தமது மாணக்கர் சிலரைக்கொண்டு வேதனமில்லாது படிப்பித்தும் நடத்தினர்.

அடுத்த சௌமிய வருஷம் (1849) தமது வித்தியாசாலையிலே, கல்வி கற்கும் சிறுவர்களுக்குப் படிப்பிப்பதற்குச் சில புத்தகங்களைப் புதிதாக எழுதியும், சில பழைய புத்தகங்களைப் பிழையின்றித் திருத்தியும், அச்சிடுவதற்கும், சைவசமயத்தைத் தூஷித்து எழுதிப் பரப்பும் துண்டுப்பத்திரிகைகளுக்கும் புத்தகங்களுக்கும் மறுப்பு எழுதி அச்சிடுவதற்குமாகச் சென்னைவந்து அச்சியந்திரம் வாங்கி வந்து, வித்தியாநுபாலன யந்திரசாலை எனப் பெயர் கொடுத்து ஓர் யந்திரசாலை ஸ்தாபித்தார். இந்த அச்சுயந்திரசாலையிலே அவர்தாம் இயற்றிய பாலபாடம், சிவாலய தரிசனவிதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உரை, திருமுருகாற்றுப் படையுரை, திருச்செந்திநிரோட்டயமகவந்தாதி உரை, பெரிய புராண வசனம் முதலிய நூல்களையும், சைவதூஷண பரிகாரம் வச்சிர தண்டம் முதலிய கண்டனப் புத்தகங்களையும் அச்சிட்டதன்றி, கொலை மறுத்தல் உரை, நன்னூல் விருத்தியுரை முதலியவைகளையும், சுன்னகத்து முத்துக்குமார கவிராசர் இயற்றிய ஞானக்கும்மி முதலிய நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

சில வருடங்களின்பின் வண்ணர்பண்ணையில் ஸ்தாபித்த அச்சுயந்திரசாலை தமது வேலைக்குப் போதாமையால் அதனை விற்றுவிட்டுக் காலயுக்தி வருஷத்தில் சென்னைக்குச் சென்று (1858) அங்கே வித்தியாநுபாலன யந்திரசாலை என ஸ்தாபித்துத் தமது புஸ்தகங்களை அச்சிடுவாராயினர். இந்நாளிலேதான் இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர் விருப்பப்படி, திருக்குறள், திருக்கோவையார், தருக்க சங்கிரகம் முதலியவற்றை அவர் நன்கு பரிசோதித்து வெளியிட்டார். இவ்வேலைக்காக நாவலர் சென்னையில் சிலவருடங்கள் தங்கும்படியாயிற்று.

துர்மதி வருஷம் (1861) யாழ்ப்பாணம் திரும்பினர். யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே மீண்டும் பொதுக்கூட்டங்கள் கூட்டி சைவசமயத்தைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்தார்.

(54ம் பக்கம் பார்க்க)



# புதுக் கற்பனைகள்.

## கடிகாரங்கள்.

(கை. சு. வே.)

நான் சென்றதடவை கிராமத்துக்குப் போயிருந்தேன். (என் வீட்டில் குடியிருக்கிற குத்தகைக்காரருடைய குழந்தை என்னைச் சாப்பிடக் கூப்பிட்ட அன்றைக்குத்தான்.) அங்கு விலைக்கு நெல் பிடிக்க வந்திருந்த ஒரு குடியானவனும் பூசாரியும் பேசிக்கொண்டிருக்கையில், குடியானவன் பூசாரியை "இன்றைக்கு என்ன கிழமை?" என்று கேட்டான். பூசாரி "வெள்ளிக்கிழமை" என்றான். இது என் காதில் விழுந்ததும், "வியாழக்கிழமையல்லவா?" என்றேன். "அதற்கென்ன, பொழுதுவிடிந்தால் தானே வலுவில் வந்து நிற்கிறது; அதுவும் முதல் தை வெள்ளிக்கிழமை: மாரியம்மனுக்கு பூசை போட வேண்டுமல்லவா?" என்றான். இப்படிக் கேள்விமுறையற்றுக் கொள்ளைபோவதுபோல் பொழுது மலிந்து கிடக்கும் எங்கள் கிராமம் இருக்கிற இடம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டால், நகரவாசிகள் எல்லாரும் மோட்டார் வைத்துக்கொண்டு, கடிகாரக் காப்புக் கட்டிக்கொண்டு, கும்பல் கும்பலாய் வந்து விழுந்து, எங்கள் மாரியம்மன் கோயிலைச் சுற்றிப் பந்தயம்விட ஆரம்பித்து விடுவார்கள். பிறகு அங்கும் கடிகாரமுள்ளின் முனையினால் காலத்தைச் சுரண்டிச் சுரண்டி நிமிஷமாத்திரைக்குக் காலணா அரையணா என்று விலை வைத்து விற்பனைக்குக் கொண்டுவந்து விடுவார்கள். இந்தக் கலியுகம் முடிகிறவரையில் இப்படிப்பட்ட இடம் ஒன்றாவது பூலோகத்தில் மிகுதியிருக்க வேண்டுமென்பதே என் நோக்கம்.

செலவு செய்வதில் எப்பொழுதுமே என் கை சற்று தாராளந் தான். நான் என் காலத்தைப் பிடிப்பிடியாய் அள்ளி அள்ளித்தான் செலவழிக்கிறேன். ஒன்றொன்றாய்ப் பட்டாணிக் கடலையைப்போல் எண்ணி எண்ணிக் கொறிக்கிற வழக்கமில்லை. என்ன தட்டுக் கெட்டுப்போகிறது? ஓடுகிற வெள்ளத்தில் அதோ ஓடுகிறதே அந்த உத்தரணி ஜலத்தைத் தான் குடிப்பேன் என்று சுட்டிக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார் உண்டா? நீ தேடுகிற நிமிஷங்கள் வினாடிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்க் காலப்பெருக்கில் முடிவின்றி மிதந்து வந்துகொண்டுதான் இருக்கின்றனவே! இவற்றுள் ஒன்றுக்கொன்று உருவத்தில், நிறத்தில், மணத்தில், சுவையில், யாதேனும் வேறுபாடு உண்டா? வறுக்கும் சட்டியிலிருந்து துள்ளிவிழுந்த கடுகை விளக்கேற்றித் தேடுவாருண்டா? கடுகல்லவென்றால் பட்டா

ணிக்கடலை என்றே வைத்துக்கொள்வோம்;
இல்லை, முந்திரிப்பருப்பாகத் தான் இருக்கட்
டும். நல்ல காரியத்துக்கு எந்த விநாடியும்
நிமிஷமும் மணியும் நாளும் பொருந்தும்; தீச்
செயலுக்கு எதுவும் பொருந்தாதுதான்; இவ்
வளவுதான் ஸூக்ஷ்மம். காலப்பெருக்கென்று
சொன்னேன்; மணற்பாறை, பளிங்குகளின்
மீதோடிவரும் தண்ணீர் தாகத்தைத் தணித்
தற்குரியது. உப்புமண், உவர்மண், சவர்மண்,
ஊர்க்கழிவு இவற்றின் வழியாக வந்தால் அத
னதன் சேர்க்கைக்குரிய குணமே காணலாம்.
நாம் நல்ல நாள், பெரிய நாள், பண்டிகை
எனக் கொண்டாடுவதெல்லாம் கடந்த ஒரு
காலத்திற்றோன்றிய நற்செயல், நன்னிகழ்ச்சி
களை நினைவுறுத்தவே; மாற்றிலாத் துயருறுத்
தும் காலம் தீச்செயலை நினைவூட்டுவதே.

சீமையிலிருந்துவந்து இந்நாட்டில் உத்யோ
கம் பார்க்கும் துரைமார்கள் பவுன் பவுனாகச்
செலவழிக்கிறார்கள், ஆதலால் அவர்களுக்
குச் சம்பளமும் அதிகம்; வாழ்வும் தேவலோ
கத்தவரதை யொத்தது. இறைத்த கிணறே
ஊறுமன்றோ! உங்கள் கடியாரங்கள் காலத்
தை உருப்பட விடாமல் தவிடுபொடியாகத்
துருவித் தள்ளுகின்றன. அத்தூள்களை ஒன்
றொன்றாய்க் கொறித்துக் கொண்டிருப்பவர்
களது ஆயுளும் அற்பமே. நிமிஷத்துக்கு ஒன்
றாக மேன்மேலும் ஒளிந்து காத்துக்கொண்டி
ருக்கும் உங்கள் அலுவல்கள், நம் வீட்டு வாயி
லில் நிற்கும் வெறிநாயை அடுத்த வீட்டுவரை
யில் நாம் துரத்திவிட்டு வருவதுபோல், உங்
களை ஒவ்வொன்றாய் நெட்டிப் பிடித்துத் தள்
ளிக்கொண்டேபோய்க் கடைசியில் எங்கேயோ
ஒரு குழியில் தள்ளிவிட்டு மறுவேலை பார்க்
கின்றன. உங்களை உங்களிஷ்டம்போல்
போகவிடுகிறதில்லை. ஆனால், அதுவுமில்லா
விட்டால், ஓடிவந்த ஜட்காக்குதிரையை இளைப்
பாறவேண்டி ஏர்க்காலைவிட்டு அவிழ்த்துவிட்
டால் பக்கப்பிடிப்பில்லாமல் குதிரை நிற்க
மாட்டாது கீழே விழுந்துவிடுமென்று வண்டிக்
காரன் சொன்ன கதைபோல், இன்றைக்கே
நாம் கீழே விழுந்து மூச்சுப்போய்விடப்போ
கிறதேயென்று உங்களுக்குப் பயம்.

*[சிருஷ்டித்தறியின் பாவும் ஊடுமாய் அமை
ந்துள்ள இடமும் சரி, காலமும் சரி, தனியே
தோன்றுவனவல்ல. பொருள்கள் தோன்றத்
தோன்ற, இடமும், செயல்கள் தோன்றத்
தோன்ற, காலமும், உடன் தோன்றி, சங்
கப்பலகைபோல் ஏற்ற அளவு விரிந்தும் சுருங்
கியும் காட்டும். பொருளில்லாத இடமில்லை;
செயலற்ற காலமில்லை. ஆதலால் "எனக்கு
நிற்க இடமில்லை, வேலைக்குப் பொழுதில்லை"
என்பதெல்லாம் நரம்புத்தளர்ச்சியைக் குறிக்
கும். தீரன் தானும் நுழைந்துகொண்டு பத்
துத் தோழர்களுக்கும் பக்கத்தில் இடந் தரு
வான். 'ஓய்வுறுதல் என்பது அலுவலை மாற்
றிக்கொள்வதே' என்றார் ஜெர்மன் கவிச்சக்கர
வர்த்தி. 'பொழுதில்லையே' என்று குறைந்து
கொண்ட ஒருவருக்குப் பதிலுரைத்தவர்,
"உள்ளதே அவ்வளவுதானென்றால் அதற்கு
மேல் எங்கிருந்து வரும்?" என்றாராம். 'சும்மா
யிருந்தால் பொழுதுபோகவில்லையே' என்று
சொல்வது வழக்கமானாலும், அது உண்மை
யல்ல. ஏனெனில், தாம் சும்மாயிருப்பதாக
நினைத்துக்கொள்பவர்கள், உண்மையாகவே
செயல் மறந்த (மறைந்து) சும்மாயிராமல், செய
லுணர்ச்சியைத் தம்முள்ளத்தில் அமுக்கித்
திணற அடித்து மூடிவைத்துக்கொண்டு, உள்
ளத்துக்கடங்கியுதவமாட்டாத சதையை வள
ர்க்கிறார்கள். (இவர்கள்தான் கீதையில் 'மித்
யாசாரர்' எனப் பிரஸித்தி பெற்றிருப்பவர்.)
அவ்வுணர்ச்சி, தத்தளிக்கும் ஏரித்தண்ணீர்
போல், எங்கேயாவது எப்பொழுதாவது
பீறிக்கொண்டு கிளம்பி, கட்டுக்கு அடங்காது,
தாறுமாறாய் ஓடி ஊரைக் குட்டிச்சுவராக்கு
கிறது. உள்ளுணர்ச்சியும் புறவியக்கமும்
ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்து ஒத்துப்போ
னால், 'கடனுக்கும் ஆஸ்திக்கும் சரியாய்ப்
போயிற்று, ஆள் மிச்சம்; மருந்துக்கும் அபத்
தியத்துக்கும் சரியாய்ப் போச்சு; வியாதி மிச்
சம்' என்பனபோல், நாம் கர்மவலையிற் சிக்கு
றாமல் எஞ்சி நின்று, உண்மையிலேயே சும்மா
யிருக்கலாம், சுகமும் பெறலாம்; செயலலைகள்
தோன்றி விழுந்து குமுறும் காலக்கடலைச்
சளைக்காது நீந்திக் கடக்கலாம்.]

* நாகை நோக்காய்ப் புறப்பட்டு மாயவரம் இருப்புப்பாதைச் சந்தியில் நிற்பவர்போல், இங்கு
நகை நோக்காய்ப் புறப்பட்டவரும் இந்த [ ] முட்கட்டைப் பாலத்தைத் திரும்பிப் பாராமற் கடந்து
அடுத்து நிற்கும் வாக்கிய (வாஹிக)த் தொடரை விரைந்து பற்றுக.

இன்று காலை 6 மணிமுதல் நாளைக்காலை 6 மணிவரையில் வைத்தியர் உதவியினால் அயர்ந்து தூங்கிய நோயாளிக்கும், வேலையில் முனைந்து பசி, தாகம், தூக்கத்தை மறந்தவனுக்கும், கடிகாரம் ஓடியிருந்தாலும் சரிதான், நின்றிருந்தாலும் சரிதான். (குருடனுக்கு விளக்கெரிந்தாலும் ஒன்றுதான். அவிந்தாலும் ஒன்றுதான்.) இரண்டுங்கெட்டான்களுக்குக் கடிகாரத்தைப் பார்க்கப் பார்க்க வேதனையேயொழியச் சுகமில்லை.

இடறிவிழுந்தால் (ஹோட்டல்) கடிகாரத்தின்மேல் விழவேண்டியிருக்கிற இக்காலத்தில் கடிகாரம் (விலைக்கு) வாங்காதவனே புத்திசாலி. எந்த வீட்டில் நுழைந்தாலும், படி தாண்டினதும், எதிர்ச்சுவரில் ஒரு கடிகாரம், உள்ளே போனால், மேஜைமேலொரு கடிகாரம், ஆண் பிள்ளைகள் கையில் 'காப்புக் கடிகாரம்' பெண்கள் கையிலும் கழுத்திலும் கடிகாரச் சங்கிலி, கடைத்தெருவில் சரிபாதி கடிகாரக் கடை. எல்லாரையும் திருப்தி செய்யவே ஏற்பட்டு எல்லா நேரமுங்காட்டுங் கடிகாரக்காடு. மற்றக் கடைகளிலும் இரண்டுக்குக் குறைந்த கடிகாரமுள்ள கடையில் சரக்கு மட்டமாய்த்தானிருக்கும். நமக்கு எப்போதாவது வேலையற்றுத் திரிகையில் மணி தெரியவேண்டுமானால், தெருவில் போகிற எவனைக் கேட்டாலும் கையெடுத்து நெற்றிக்கு நேரே தூக்கிச் சலாம் செய்துகொண்டு, முகத்தில் பெருமை தோன்ற "எட்டு பதினெட்டாகிறது" என்கிறான். வட்டிக்கு வட்டி போட்டுக்கொண்டு போனால் எட்டு பதினெட்டுமாகும், இருபத்தெட்டுமாகும். இந்தக் கடனில் நாமுமொரு கடிகாரத்தை விலைக்கு வாங்கிச்சுமப்பது காதிலணிந்திருக்கும் வைரத்தோடுபோல பார்ப்பவர்க்குப் பயன்படுமேயன்றி நமக்குப் பணச்செலவும் சுமக்கும் பொறுப்புந்தான்.

வீட்டிற்குள் ஒரு கடிகாரமிருந்துவிட்டால், பகல் வேலையைச் செய்யவொட்டாமல் "இதைக் கேள், இதைக் கேள்" என்றும், இராத்தூக்கத்தை வராத்தூக்கமாக்கி "தூக்கு தூக்கு" என்றும் நொடிக்கு நொடி தேள் கொட்டுவதுபோல் கொட்டிக்கொண்டேயிருக்கிறது. அப்படியும் சற்று அயர்ந்துவிட்டால், கன்னத்திலறைவதுபோல் மணி அடிக்கிறது. போதாதற்கு அலறிப்புடைத்தெழ என்றே அலாரமும் வைத்துவிடுகிறார்கள். இந்தக் கருவி ராவணன் கையிலகப்பட்டிருந்தால் யுத்தம் துவக்கின அன்று கும்பகர்ணன் காதண்டை 'அலாரம்' வைத்துவிட்டு வந்திருப்பான். (தம்பி முகத்தில் விழித்தால் ஆகாதென்று அவனுக்குத் தெரியும்.) அவனும் விழித்தெழுந்து அதை அப்படியே வாயிற் போட்டுமென்றிருப்பான். பிறகு அவனுக்குப்பசியே எடுத்திராது. வேறு ஜந்துக்களையும் பலி கொடுத்திருக்கவேண்டியதில்லை. "ஒன்று போச்சு, இரண்டு போச்சு, மூன்று போச்சு" என்று விநாடி விநாடியாக நம் ஆயுளை(விஷ்ணு) சக்கிரரூபமாயிருந்துகொண்டு நிர்தாக்ஷிண்யமாய் சரசரவென்று செதுக்கித்தள்ளி, நம்மை இன்றைக்கே கிழவனாக்கி நாளைக்கே யமனுக்கு அழைப்புப் பத்திரிகை அனுப்பிவிடுகின்றன. (இதற்குப் பரிஹாரம்போலும் இப்பொழுது தோன்றிவரும் சதுரக்கடிகாரங்கள்.)

இக்காலத்தில் ரயில்வே பிரயாணத்திற்குக் கூட கடியாரம் அநாவசியம். நாம் தேடிப் போகிற ரயில் தவறினாலும், கால் மணிக்குள் அடுத்த ரயில் வந்துவிடுகிறது. அது எந்தப்புறம் போனால்தானென்ன? அதிலேறிக் கொண்டுவிட்டால் நம்மூருக்குப் போகும் ரயிலை எந்த ஊரில் சந்திக்கிறோமோ அங்கேயே அவ்வண்டியில் தாவிவிடலாமல்லவா?

# செந்நெறி அல்லது சிந்தையின் நிறைவு.

(ஊ. சா. வேங்கடராமையர்.)

* உலகத் தீரே, உலகத் தீரே!
பலபல பாடுகள் பட்டும் பயன்பெறு
தழலும் பழிசே ருலகத் தீரே!
மன்னென மகிழ்வேன் மனவர சிருந்தேன்
என்னெனி லெனக்கீண் டென்மன மினிதாய்ந்
திணையிலாப் பொருளே இன்பமே இவற்றைத்
தந்துவப் பிக்குமென் றன்பால் விழைபொருள்
இல்லையா யினுமெனை யெய்தவுந் துவதிலை;
அன்றியு மடியேன் ஒன்றும்வேண் டாமையின்
அரசுதரு திருவே அரும்பொருட் பேறே
போர்தரு வெற்றிப் புகழே என்றிவை
தம்மைப் பொருட்டாக் கொள்ளேன் சான்றோர்
தம்முனி லிருந்துஞ் சாற்றேன் றுதிமொழி
பேரழ குற்றோரெளிர் பெண்ணையு மதியேன்;
அல்வழி முயன்றீண் டல்லலுக் காளாய்
விரைந்துயர் பதவியை விரும்பிப் பெற்றோர்
காத்தலுக் கியலார் கலங்கினுங் கலங்குவர்
வல்விரைந் தப்பத மிழப்பினு மிழப்பர்;
ஆதலின் யாண்டும் போதுமென் றிருக்கும்
அடியனே னத்தகு கவலினுக் காட்படேன்;
வேண்டாப் பொருளை விழையே னுயரிய
பதவியை வேண்டேன்; பலரையு மடக்க
வேண்டுவே தின்பமே யீண்டதற் கென்மனம்
தேர்ந்தினி தளிக்குந் திப்பிய செல்வமாம்
சிந்தையி னிறைவே சிறந்ததாக் காண்மின்;
அளவுக்கு மிஞ்சினு லமுதமும் விடமாம்
என்பதன் பொருளையீண் டினிதினுய்ந் துணர்மின்;
அவனியி லாசைக் கடிமைப் பட்டோர்
பெற்றதற் குவவார் பின்னும் பெறுவதற்
கிச்சை கொண் டேல்வ ரேன்னிடத் தினிலோ
ஏதும் பொருளிலை யென்னினு மடியேன்
எதனையும் விழைகுவ தில்லை யிருப்பதே
அதிகமேன் றெண்ணுவ னதனு லதிகம்
பெற்றிருப் பினுமப் பேதைய ரேழையர்
பெறுதவ னுயினும் பெரும்பொரு ளாளன்யான்;

அன்னு ரென்பா லணுகினு மளிப்பேன்;
அயலவர்க் கிழத்தலே ஊதிய மேயிவை
எய்திய காலத் தினிதுள மகிழ்ந்தும்
அழுக்கா றுற்று மவலமாய்ப் போகேன்;
அஞ்சுவ தில்லையவ் வாறே யங்காங்

தேய்த்துநிற் கின்றது மில்லையிவ் வாழ்வில்
வெறுப்பு மில்லை விளிவினிற் பயமிலை
என்று மலையா தென்மனந் துன்றுபேர்
அலைகடற் பாறைக் கற்களை யலைத்தல்
ஒல்லா தாகுமிஃ தோர்ந்துணர்ந் துய்யுமின்;

பொறிகளுக் கின்பம் புணர்ப்பதே"பெரும்பே
றனைவருந் தஞ்சோற் கேட்குமா றுரைப்ப
தொன்றே புகழாம் நன்றிவ ணடைதற்
குற்றது செல்வப் பொருளே என்றெலாம்
உன்னுவர் சிற்சில ரென்மன மெனிலோ

அமைதியுற் றகண்டா காரமாய் நிற்றலின்
பிணியிலா வுடலும் பிழையுறுச் சொல்லும்
செயிரிலா மனமுஞ் செய்தவ மருமையும்
தேடவேண்டிய வெனச் செப்புகின் றதனுல்
என்னிலை தவறெ னிறக்குந் தனையும்

இன்பமே யெனக்குத் துன்பமே யில்லை
இந்நிலை யுணர்ந்தீண் டினிதே
செந்நெறிப் படருமின் சிறந்து வாழ்வீரே.

---

* இது, Sri Edward Dyer என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "To mine my mind a kingdom is" என்று தொடங்கும் பாவடிகளின் கருத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது,

# சந்திரகுப்தன்.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(த்விஜேந்திராய் அவர்களது நாடகத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பைத்தழுவி எழுதப்பட்டது.)

[இரண்டாவது வால்யூம்—770ம் பக்கத் தொடர்ச்சி.]

**அங்கம் 2. காட்சி 2.**

யுத்தமைதானம்; ஸ்திரீகளின் கூடாரம், சாயாவும் அவள் அனுசரிகளும்.

சாயா :—இந்த யுத்தம் எப்படி முடியுமோ? கவலையாக இருக்கிறது. நாமும் யுத்தத்தில் கலந்துகொள்வோமே யென்று அடிக்கடி தோன்றிக்கொண்டே இருக்கிறது.

முதல் ஸகீ :—உனக்குமா யுத்தவெறி?

சாயா :—அவருக்கு ஏற்றவள்தான் நான் என்று அவருக்குத் தெரியவேண்டாமா?

மு. ஸகீ :—யாருக்கு?

சாயா :—சந்திரகுப்தருக்கு.

இரண்டாவது ஸகீ :—அவருக்காக இப்படி உயிரை விடுகிறாயே, திடீரென்று இவ்வளவு ப்ரியமா?.

சாயா :—ப்ரியமோ இல்லையோ எனக்குத் தெரியாது. தூங்கினும் விழிப்பினும் அவர் தியானமே. நேற்று இரவு என்ன ஸ்வப்னம் கண்டேன், தெரியுமா?

2-வது ஸகீ :—சொன்னால்தானே தெரியும்.

சாயா :—நான் ஆகாயத்தில் மேலே மேலே போய்க்கொண்டே இருக்கிறேன்; கீழே பூமியும் சந்திரகுப்தரும் மட்டில் தெரிகிறது; இன்னும் மேலே போகிறேன்; பூமிகூட தெரியவில்லை; சந்திரகுப்தர் மட்டில் ஓர் சூர்யனைப்போல் பிரகாசமாய் காணப்படுகிறார்.

1-வது ஸகீ :—போ; பைத்தியம் பிடித்து அலையாதே.

சாயா :—இது பைத்தியமானால் இந்த பைத்தியத்தில்தான் எனக்கு ஸுகம்.

(சந்திரகேது வருகிறான்)

சாயா :—யுத்த ஸமாசாரம் என்ன?

சந்திரகேது :—என் குதிரை கொல்லப்பட்டது; வேறு ஒன்று வேண்டும். (போகிறான்)

சாயா :—யுத்தம் எப்படி முடியும்?

சந்திரகேது :—நமக்குத் தோல்வி.

சாயா :—தோல்வியா? சந்திரகுப்தர் எங்கே?

சந்திரகேது :—அவர் அவதிப்படுகிறார், உதவிக்குத்தான் போகிறேன்.

சாயா :—சற்று நில்லும், நானும் வருகிறேன்; என் குதிரையும் தயாராகட்டும்.

சந்திரகேது :—சரி வா. (போகிறான்)

சாயா :—(ஸஹசரிகளை) நீங்கள் போங்கள். கூடாரத்தை கவனித்துக் கொள்ளுங்கள். (போகிறார்கள்) பகவானே! எனக்கு ஓர் வரம் அளியும். அவர் ஸங்கடத்துக்குள்ளாகியிருக்கும் இச்சமயம் அவரை நான் காக்கவேண்டும். காப்பதில் என் உயிரே போனாலும் எனக்கு திருப்திதான். அதற்குப் பதிலாக ஒருதடவை ஓர் விநாடி என்னை பிரியமாக அவர் கடாக்ஷித்தால் போதும். ஓர் புன்முறுவல் போதும்; என் ம்ருத்யு ஸார்தகமாகும். (சந்திரகேது இரண்டு குதிரைகளுடன் வருகிறார்)

சந்திரகேது :—சாயா, வா, தயார்.

சாயா :—வாரும். (மண்டியிட்டு) மஹேச்வரீ! தானவபலத்தை ஸம்ஹரித்த உன் சக்தியின் ஓர் துளியை எனக்கு அளி; வாரும் போவோம். (குதிரை ஏறி செல்கின்றனர்)

**அங்கம் 2. காட்சி 3.**

பாலத்தின் அருகில் ஓர்வனம்; ஸந்த்யாகாலம்.

சாணக்யர் :—பசிவெறி கொண்ட வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டது; மனிதரக்தத்திற்கு வெறிபிடித்து பாய்கின்றன; புலி கரடிகள் வயிற்றை நிரப்பிக்கொள்ள மனிதனைக் கொல்லும். மனிதன் எதற்காக மனிதனைக் கொல்லவேண்டும்? வஞ்சம், வஞ்சம்! அதோ

ஸூர்யன் அஸ்தமிக்கிறது; நாளைக்கு முன் போலவே கிளம்பிவிடும். ஆனால், மனிதன் சிந்தின ரக்தம்? (காத்யாயனர் வருகிறார்)

சாணக் :—என்ன ஸமாசாரம்?

காத் :—யுத்தத்தில் நம் கக்ஷி தோல்வியுண்டது.

சாணக் :—தோல்வியா?

காத் :—ஆம். சந்திரகுப்தன் யுத்தபூமியை விட்டு ஓடிவிட்டான். அதைக் கண்டு நமது ஸேனையும் சின்னபின்னமாகிவிட்டது.

சாணக் :—சந்திரகுப்தனா ஓடிவிட்டான்! எங்கே அவன்?

காத் :—கிழக்குப் பக்கமாக ஓடினான்.

சாணக் :—அட கஷ்டமே! அவன் எந்தப் பக்கம் ஓடினான் என்று கேட்கிறேன்? அவன் இப்பொழுது எங்கு இருக்கிறான்?

காத் :—எனக்குத் தெரியாது.

சாணக் :—நான் சங்கித்தபடியே நடந்து விட்டதா? சந்திரகேது எங்கே?

காத் :—அதுவும் தெரியாது; கொஞ்சநாழிகைக்குமுன் குதிரையிலிருந்து கீழே விழுந்தான்.

சாணக் :—உடனே இங்கு வருவதற்கென்ன? இத்தனை நாழிகை என்ன செய்து கொண்டிருந்தீர்?

காத் :—தாங்கள் சொன்னபடியே அந்த பர்வதத்தின்மேல் நின்றுகொண்டு யுத்தகதியைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

சாணக் :—நன்றாய்ப் பார்த்தீர்? ஜயம் கையில் இருந்தபோது விட்டுவிட்டு.........

காத் :—இதோ சந்திரகுப்தனே வருகிறானே!

சாணக் :—எங்கே? ஆ—ஆமாம். (கையைக் கொட்டி) இனியும் நாம் ஜயித்துவிடலாம்; நீர் போய் ஸேனையை ஆச்வாஸப்படுத்தும். சந்திரகுப்தன் ஓடிவிடவில்லை, இதோ வந்துவிட்டான் என்று தெரிவியும். போம், போமே—நிற்கிறீரே, போம். (காத்யாயனர் போகிறார்)

சாணக் :—பாதகமில்லை. ''கண்டகேனைவ கண்டகம்'' முரா, முரா! (முரா வருகிறாள்)

முரா :—என்ன ஆக்ஞை?

சாணக் :—இங்கேயே இருக்கவேண்டும். உனக்கு அழத் தெரியுமா?

முரா :—இது என்ன கேள்வி!

சாணக் :—அதோ சந்திரகுப்தன் வருகிறான், நீ அழவேண்டும்.

முரா :—பையா, பையா! (முன் ஓட யத்தனிக்கிறாள்)

சாணக் :—ச்ச்! இது உன் அன்பைக் காட்டும் தருணம் அல்ல. நீ இப்பொழுது நன்றாகத் திட்டவேண்டும்; கத்தவேண்டும்; கண்ணீரின் சூட்டினால் சுடவேண்டும்; செய்வாயா, சொல்? (சந்திரகுப்தன் தலைகுனிந்து கத்தி ஒளிந்து பிரவேசம்)

சாணக் :—இதோ சந்திரகுப்தரே வந்துவிட்டார். யுத்தத்தில் சத்ருக்களைச் சின்னபின்னமாக பறக்க அடித்துவிட்டு வந்துவிட்டார். ஜயவிஜயியான சந்திரகுப்தரை மார்புடன் அணைத்து வாழ்த்துக்கூறு. வீரபுத்ரன்! வெற்றிமாலை அணிந்தவன்! நகரம் முழுவதும் உத்ஸவம் கொண்டாடவேண்டும்.

சந்திர :—இல்லை குருதேவ, நான் ஜயித்து வரவில்லை.

சாணக் :—பின்?

சந்திர :—யுத்தகளத்தைவிட்டு ஓடிவந்து விட்டேன்.

சாணக் :—அஸம்பாவிதம்! முராவின் புதல்வனா ஓடிவருவான்! ஒருநாளும் இல்லை. ஒன்று ஜயமாலையுடன் திரும்புவான்; அல்லது அவ்விடமே தன் பிராணனை விடுவானே அல்லாமல், ஓடிவிடமாட்டான்!

முரா :—ஓடியா வந்துவிட்டாய்? நிஜமாகவா? நிதானமாக 'ஓடிவந்து விட்டேன்' என்கிறாயே. சே, கோழை! சாகமுடியவில்லை?

சாணக் :—அப்படிச் சொல்லாதே பையனைப் பார்த்து. இது ஓர் க்ஷணிக தௌர்பல்யம், அவ்வளவுதான்; இதோ ஸரியாகிவிட்டதே. போ—போய், யுத்தம் செய்.

சந்திர :—முடியாது, இனி என்னால் யுத்தம் செய்யமுடியாது. (கத்தியை சாணக்யர் காலில் வைத்து விடுகிறான்)

சாணக் :—ஏன் முடியாது?

சந்திர :—என் ஸஹோதரன் சரீரத்தில் என் கத்தி பாயாது.

முரு :—பயங்கொள்ளிப் பதரே!.

சந்திர :—பயம் அல்ல, அவன் என் தம்பி.

சாணக் :—உன்னை தேசத்தைவிட்டுத் துரத்தினவன் தம்பியா?

சந்திர :—ஆயினும் தம்பியே.

முரு :—உன் தாயை, அவமதித்தவனா உனக்குத் தம்பி? மானபங்கம் செய்தவனா உன் ஸஹோதரன்? ஏன்? ஏன் பேசாமல் நிற்கிறாய்?

சாணக் :—அந்த நிஷ்டூரனா உனக்கு தம்பி!

சந்திர :—குருதேவ, ப்ராத்ருஹத்தி செய்யத் தூண்டுகிறீர்கள்!

சாணக் :—ஆமாம், தர்மயுத்தத்தில் குருக்ஷேத்திரத்தில் கிருஷ்ணபகவான் என்ன உபதேசித்தார், தெரியுமா?

சந்திர :—மன்னிக்கவேண்டும். கிருஷ்ண பகவானுடைய யுக்திகள் என் ஹ்ருதயத்தில் நுழையவில்லை.

சாணக் :—(தன் காலால் பூமியை தட்டி) ஆ! இந்த பாபத்தினாலேதானே ஆர்யாவர்த்தம் நஷ்டமானது! சந்திரகுப்தா, கீதையின் மஹத்வத்தை நீ அறியாய். சாஸ்திர சர்ச்சை செய்ய பிராம்மணனுக்குத்தான் அதிகாரம், உனக்கில்லை.

சந்திர :—பிராம்மணனின் அதிகாரத்தை பிராம்மணனே வைத்துக் கொள்ளட்டும்! எனக்கு விடையளியுங்கள்.

சாணக் :—சந்திரகுப்தா! இடையிடையே உனக்கு இம்மாதிரி கோழைத்தனம் வந்துவிடுகிறதே. நிராசையுற்று இரவு முழுவதும் அழத்தொடங்கிவிடுகிறாய். இந்தக் கர்மக்ஷேத்ரத்தில் இம்மாதிரிக் கோழைத்தனம் முற்றிலும் வெறுக்கத்தக்கதேயாகும். ஆயிரம் வருஷங்களாகச் சேர்த்து வைத்தவைகளை பூகம்பம் ஒரு நொடியில் நாசமாக்கிவிடும். ஓர் வாழ்நாளின் ஸாதனையை ஓர் வினாடியில் வீணாக்கிக் கொள்ளாதே. வேண்டாம், இந்த ஆலஸ்யம்; கிழிந்த வஸ்திரமெனத் 'தூ'வென்று தள்ளு; முன்செல், யுத்தத்திற்கு.

சந்திர :—மன்னிக்கவேண்டும் குரோ! என்னால் இயலாது.

முரு :—சே, என் பிள்ளைதானா நீ? எந்த நந்தன் என்னை.........

சந்திர :-ஐயோ அவனை மன்னித்துவிடேன்.

முரு :—மன்னிப்பா? 1000 தேள்கள் சேர்ந்து ஏககாலத்தில் கொட்டினால் எப்படி எரியுமோ அப்படி எரிகிறதே இந்த தேஹம்! இதை சாந்தம் செய்ய வன்மையுடையது நந்தனின் ரக்தத்துளி ஒன்றேதான்!

சந்திர :—அம்மா, அம்மா! குழந்தைப் பருவம் முழுவதும் அவனுடன் விளையாடினேன். எனக்குக் கொடுத்த பக்ஷணத்தையும் அவனுக்கே கொடுப்பேன். தகப்பனார் அவனை அடித்தபொழுது, நான் அவனை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக்கொண்டு முத்தமிட்டு அவன் கண்ணீரை அகற்றினேன். குதிரை வெருண்டு அவனை மிதிக்கத் தெரிந்தபொழுது என் சரீரத்தால் அவன் சரீரத்தை மூடிக்கொண்டு என் முதுகில் அதன் குளம்புகளை ஏந்தினேன். இன்று யுத்தகளத்தில் அவனைக் கண்டதும் இவ்வளவும் எனக்கு ஞாபகம் வந்தது. அவன் தலைக்கு நேராக என் கத்தி சென்றவுடன் தகப்பனாரின் ரக்தம் என் ஹ்ருதயத்தில் ஏறிற்று. கதவைத்தட்டி காதில் ஒலித்தது : "இவன் உன் தம்பி, ஜாக்ரதை!" என்றது. மகதஸாம்ராஜ்யம் என்ன, ஸஹோதரவாஞ்சையைவிட ச்ரேஷ்டமா?

முரு :—அவன் உனக்கு தம்பி, எனக்கு?

சந்திர :—உனக்கும் பிள்ளைதான். கர்ப்பத்தில் காக்காவிட்டால் என்ன? அவன் தாய் இறந்தது முதல் அவனை வளர்த்தது நீதானே. உன் ஸ்தன்யத்தை உண்டு உன் மார்பில் வளர்ந்தவன்!

முரு :—அதை அவன் நினைக்கவில்லை; அந்த நினைவை வெறுக்கிறான்; அதை அவன் அவமானமாகக் கருதுகிறான். "சூத்ரஸ்த்ரீயா எனக்குத் தாயார்?" என்றானே; "ராஜமாதாவாக சொல்லிக்கொள்ளவேண்டியிருக்கிறதா?" என்றானே. வாசாலன் மயிரைப் பிடித்து இழுத்தான். நந்தன் பார்த்துச் சிரித்தான். அவன் உனக்கு அருமைத்தம்பி! ஸரி; உனக்கு தாயார் வேண்டுவதில்லை. அவளுக்கு நேர்ந்த அவமானம் உனக்கு பத்தியமாகப்படுகிறது. அது அவளுக்கு வேண்டியதுதான்! உன்னைப் பெற்றவளுக்கு வேண்டியதுதான், அந்த அவமானம்!

சாணக் :—அண்ணன் தம்பி என்ற உறவே ஓர் தாயின் வயிற்றில் உதிப்பதால்தானே! ஆகையால், தாயார் உயர்ந்தவளா, தம்பியா? தாயாரின் அவமானத்துக்கு பழிவாங்கமறுத்த தனயன் உலகிலேயே நீ ஒருவன்தான், முதல் முதலாக நீதான். (முருவைப் பார்த்து) துர்பாக்யவதி! அழு, அழு. தாயாரை அறியாத தனயன்! ஜகத்திலுள்ள ஸாரமான ஸர்வபதார்த்தங்களின் ஸங்காதமும் தாயாரின் காலின் தூசிபெறுது என்று தெரிந்து கொள்ளாத தனயன்!

சந்திர :—தெரிகிறது, குரோ!

சாணக் :—தெரியவில்லை, தெரியவேஇல்லை! தெரிந்தால் ஏன் தயங்கவேண்டும்? தாயின் தன்மையை நீ கண்டபடி! ஒருநாள் இவள் அங்கத்தினுடன் ஒரே அங்கமாக, இவள் பிராணனுடன் ஒரே பிராணனுகவும், இவள் நிச்வாஸத்துடன் ஒரே நிச்வாஸமாகவும் இருந்தாய். விஷ்ணுவின் யோகநித்திரையில் அபிலீனமான ஸ்ருஷ்டியைப்போலும் பிறகு அக்னியின் ஸ்புலிங்கம் போலும், ஸங்கீதத்தின் மூர்ச்சனை போலும், பின்னப்பட்டு வேறு ஆனுய்! இவள் தன் ரக்தத்தை ஒரே இடத்தில் சேர்ப்பித்து வைத்து ஸ்னேஹம் என்னும் உஷ்ணத்தால் ஹ்ருதயம் என்னும் வாணலியில்இட்டு கொதிப்பித்து பால் என்னும் அமுதைத் தயார் செய்தாள், உனக்காக. உன் உதடுகளுக்கு முறுவலையும், நாவிற்கு பாஷையையும் அளித்தாள். உச்சிமுகந்து பள்ளிக்கு அனுப்பினுள். உன் துக்கத்தையும் சோகத்தையும் தன் மார்பில் தரித்து உன்னைக் களிப்பிக்க, உன் வாடின முகத்தை உல்லாஸிப்பிக்க, தன் பிராணனையும் விடுவாள். இவளுடைய ஸ்வச்சமான ஸ்னேஹம் மந்தாகினியைப்போல் இந்த ஸம்ஸாரமென்னும் மருபூமியில் நூறு கிளையாய் பிரிந்து ஓடி பசுமையாகச் செய்கிறது. இவளது அபாரமான தூயகருணையானது, மானவ ஜீவனத்தின் பிராதக்கால ஸூர்யனைப்போல் மதுர கிரணங்களை பரப்பி, வஞ்சனையின்றி விஸ்தரித்து, விசாரமின்றி வளர்ந்து, ஸ்வப்ரயோஜனத்தையோ பதிலையோ அபேக்ஷிக்காமல் உதாரமாக பிரவஹித்துக் கொண்டு. ஆக்ராஹத்துடன் தன்னையே இருகைகளாலும் அள்ளி அள்ளி தன் பிரஜைகளுக்கு அளித்துக் கொண்டுசென்று தான் மறையவே விரும்புகிறவள் இவள். இவள் தாயார்—சந்திரகுப்தா—தாயார்!

சந்திர :—குருதேவ, காப்பாற்றுங்கள்! ப்ராத்ரு வதத்திற்கு என்னை ஆளாக்காதீர்கள்.

முரு :—சந்திரகுப்தா! உன்னை அறிந்து கொள்ள எனக்கு இவ்வளவு நாட்கள் பிடித்தது. ஸரி, நான் உனக்கு யாதொரு ஸம்பந்தமும் அல்ல! நந்தன் க்ஷத்ரியன்; நீ க்ஷத்ரிய குமாரன். நந்தன் உனக்கு தம்பி! நான் சூத்ர ஸ்த்ரீ! கர்ப்பத்தில் தரித்தது மட்டில் தான் கண்டது! உனக்கு தாயாரல்ல.

சந்திர :—ஐயோ! பிள்ளையிடமே இவ்வளவு கொடூரமா? நீ தாய் தான்! என் தாய் தான்! தாய்மட்டில் அல்ல, என்னுடைய தர்மமே நீதான். என் ஸாதனையும் நீதான், ஈச்வரியும் நீதான். உன்னுடைய இச்சையே எனக்கு ஆக்ஞை, தேவவாணி எனக்கு.

முரு :—இது ஸத்யமானல் செல், நேராக யுத்தத்திற்கு. ஏன்? ஏன் நிற்கிறுய்? சந்திரகுப்தா! (குரல் ஒடிந்து) நான் உன் தாயார்! அவமதிக்கப்பட்ட, பீடிக்கப்பட்ட, காலால் உதைக்கப்பட்ட தாயார்! என் உத்தரவு இது; பிறகு, உன் இஷ்டம்!

சந்திர :—உன் இஷ்டம்தான் என் இஷ்டம். இனி ஸந்தேஹம் இல்லை. பிரசினங்கள் நிறைந்த இக் குடில ஜகத்தில் உன் கட்டளையே எனக்கு வழிகாட்டி. என் ஜீவனம் என்னும் தோணிக்கு உன் கட்டளையே துருவநக்ஷத்ரமாக நம்பி, இச் சமுத்ரத்தில் நிச்சிந்தையாக பயணம் புறப்பட்டுவிட்டேன். அம்மா, ஆசி கூறு! இதோ செல்லுகிறேன், யுத்தத்திற்கு.

முரு :—ஆ, இப்பொழுதுதான் நீ என் பிள்ளை!

சாணக் :—இதுதான் என் சிஷ்யன். இந்த க்ஷணிக மோஹத்தை உன் சித்தத்தைவிட்டு விலக்கு! முழுபலத்துடன் ஓர் தடவை.........

(நேபத்யத்தில் "இந்தப் பக்கமாக" "இப் பக்கமாகத்தான்")

சாணக் :—இதோ அவர்களே வந்துவிட்டார்கள். கிளம்பு, மேகத்திலிருந்து விடுபட்ட ஸூர்யனைப்போல் இரட்டிப்பு வீர்யத்துடன் கிளம்பு. ஸிம்ஹத்தைப்போன்ற வீர ச்ரேஷ்டர்கள் உன்னைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். சந்திரகுப்தன் ஒருவனே ஆயிரம் நந்தர்களுக்கு நிகர். உன் ஸேனையும் வந்துவிட்டது! என் சிஷ்யனை ஜயிக்க உலகில் ஒருவரும் இன்னும் பிறக்கவில்லை! அதோ, சந்திரகேதுவும் வந்துவிட்டான்; இனி என்ன கவலை; வெற்றி நிச்சயம்.

(நேபத்யத்தில் "இந்தக் காட்டிற்குள்ளேதான்")

சாணக் :—த்ருடமாக இரு. ஜய விஜயீபவ! முரு! வா, போவோம். (போகிறார்கள்)

[வேறு பக்கத்திலிருந்து நந்தனும் உருவிய வாளுடன் அவன் அனுசார்களும் வருகிறார்கள்.]

நந்தன் :—பயங்கொள்ளிப் பதரே! இங்கா ஒளிந்துகிடக்கிறாய்! (உருவிய கத்தியுடன் மேலே பாய்கிறான்).

சந்திர :—எங்கே பார்ப்போம்—இதோ! முடிந்தால் தடு. (கத்தியை தலைக்கு நேராகத் தூக்குகிறான்) ஐயோ! ஏன் இப்படி கை நடுங்குகிறது?

(யுத்தம். இரண்டுபேர் விழுகிறார்கள்; சந்திரகுப்தனுடைய வாள் நந்தனுடைய வாளை தள்ளிவிடுகிறது; சந்திரகுப்தன் தன் வாளை ஓங்குகிறான். நந்தன் பயந்து, "என்னைக் கொன்றுவிடாதே" என்று மன்றாடுகிறான்; சந்திரகுப்தன் தன் வாளைக் கீழே எறிகிறான்; "தம்பீ, வாடா" என்று மார்புடன் தழுவிக்கொள்கிறான்; இச்சமயம் நந்தனுடைய ஆள்கள் சந்திரகுப்தன்மேல் பாய்கிறார்கள்; அதே ஸமயம் சந்திரகேதுவும் சாயாவும் வந்து தடுக்கிறார்கள்; சாணக்யர் பின்னால் தெரிகிறார்; "கொல்லாதே, கைது செய்" என்று ஸைனிகர்களுக்கு உத்தரவு இடுகிறார்.)

## அங்கம் 3. காட்சி 1.

சிறை; நந்தனும் வாசாலனும்; இரவு.

நந்தன் :—அப்பா என்ன இருட்டு!

வாசாலன் :—இருட்டு கிடக்கட்டும்; பூச்சிகளும் எறும்புகளும் — இவைகளிடமிருந்து தப்புவதற்கில்லையே!

நந்தன் :—இதே அறையிலா காத்தியாயனரை அடைத்திருந்தேன்?

வாசாலன் :—ஆம், மஹாராஜா.

நந்தன் :—எவ்வளவு பயங்கரம்!

வாசாலன் :—அவருடைய ஏழு புதல்வர்களும் ஒவ்வொருவராக இந்த அறையில்தான் பசியால் துடித்து மரித்தனர்.

நந்தன் :—மஹா பாதகம் செய்து விட்டேன். ஐயோ! இப்பொழுது பச்சாத்தாபப் பட்டு என்ன பயன்!

வாசாலன் :—பயனில்லாயலென்ன? நமக்கு இனி பயமில்லை.

நந்தன் :—ஏன் பயமில்லை? சந்திரகுப்தன் என்னைக் கொல்ல விரும்பமாட்டான். ஆனால் அந்த பிராம்மணன் வஞ்சம் வஞ்சம் என்று பறப்பானே· அன்று அவன் என்னைப் பார்த்த பார்வை—தான். அமர்த்து வீழ்த்திய மனிதனை பார்க்குமே ஸிம்ஹம் — அப்படிப்பட்ட பார்வை!

வாசாலன் :—பின் என்ன பயம்?

நந்தன்:—ஏன் உனக்குப் பயமாக இல்லையோ?

வாசாலன் :—கொஞ்சமும் இல்லை; உங்களை என்னதான் செய்துவிட முடியும்? கொல்லத் தானே கொல்வார்கள்! ஆமாம் அக்கா விதந்துவாகிவிடுவாளே, அதுதான் பாவம்.

நந்தன் :—ஓ! உன்னை மட்டில் விட்டுவிடுவார்களோ?

வாசாலன் :—ஆமாம்.

நந்தன் :—அது வீண் ஆசை.

வாசாலன் :—ம் ம் ம்.

நந்தன் :—சந்திரகுப்தனுடைய தாயாரை மயிரைப் பிடித்து இழுத்தவன் நீ!

வாசாலன் :—நானா? இல்லையே.

நந்தன் :—சாணக்யனை முன் குடுமியைப் பிடித்து இழுத்ததும் நீ.

வாசாலன் :—நானா? எப்பொழுது? இல்லவே இல்லை.

நந்தன் :—அத்துடன் நீ என் மைத்துனன்!

வாசாலன் :—நிஜமாகவா?

நந்தன் :—என்னை விட்டாலும் விடுவார்கள். உன்னை ஒருபோதும் விடமாட்டார்கள்.

வாசாலன்:—மஹாராஜா! (கையைக் கூப்பிக்கொண்டு) மஹாராஜா!

நந்தன் :—என்னைக் கெஞ்சி என்ன பயன்?

வாசாலன் :—ஆமாம்! அது வழக்கமாகி விட்டது. ஒன்றும் தோன்றவில்லையே! என்ன செய்யலாம்?

நந்தன் :—ஏன்? என்னபயம்! கொல்லத் தானே கொல்வார்கள்!

வாசாலன் :—அப்படி என்றால், எனக்குப் புரியவில்லையே!

நந்தன் :—எனக்கு நீ சொன்னதைத் தான் திருப்பிச் சொன்னேன்.

வாசாலன் :—நான் எப்பொழுது அப்படிச் சொன்னேன். எனக்கு ஞாபகமில்லையே.

நந்தன்:—இப்பொழுது தானே சொன்னாய்! உனக்காக இஷ்டமிருந்தால் ஞாபகம் இருக்கும்; இல்லாவிட்டால் இருக்காதோ?

வாசாலன் :—நான் எங்கே அப்படிச் சொன்னேன்? சொல்லியிருந்தாலும், என் அபிப்பிராயம் அதுவன்று.

நந்தன் :—இது எல்லாம் வீண். உன்னைக் கொல்லத்தான் போகிறார்கள்.

வாசாலன் :—(கையைக் கூப்பிக்கொண்டு) மஹாராஜா! வேண்டாம், வேண்டாம்; எனக்கு உயிர்ப் பிச்சை அளிக்கவேண்டும்.

நந்தன் :—கண்டிப்பாய் கொல்லத்தான் போகிறார்கள்.

வாசாலன் :—விதவையாகி விடுவாளே.

நந்தன் :—நீ இறந்தா? உனக்குத்தான் கல்யாணமே ஆகவில்லையே?

வாசாலன் :—ஐயோ! ஓர் மனைவிகூட இல்லையே, விதவையாக.

நந்தன் :—உனக்கு அழக்கூட யாருமில்லை.

வாசாலன் :—என் மனைவி இருந்தால், அழமாட்டாளா?

நந்தன் :—நல்ல முட்டாள்! ஆமாம்! மஹாராணியை யுத்தத்திற்கு முன்பே மந்திரியிடம் ஒப்புவித்து விட்டாயல்லவா?

வாசாலன் :—ஆமாம்! அது என்ன சப்தம்? யாரோ கதவைத் திறந்து கொண்டு வருகிறார்கள்!

(இரண்டு காவலாளியுடன் காத்யாயனர் பிரவேசம்)

காத்யாயனர் :—மஹாராஜா.

நந்தன் :—விசுவாஸ காதகா!

காத்யாய :—நானா?

நந்தன் :—பிறந்தது முதல் என் தகப்பனாருடைய அன்னத்தை புஜித்து வளர்ந்து—

காத்யாய :—அவர் உமக்கும் தான் தகப்பனார்; சந்திரகுப்தனுக்கும் தான் தகப்பனார்!

அவருக்கு விரோதமாக நான் என்ன செய்து விட்டேன்? அவர் ஒரு பிள்ளைக்கு விரோதமாக மற்றொரு பிள்ளையின் கக்ஷியில் சேர்ந்து கொண்டாலும் அவருக்கு விரோதமாக ஒன்றும் செய்து விடவில்லை.

நந்தன் :—அவருடைய தாஸியின் பிள்ளையின் கக்ஷியில் சேர்ந்து கொண்டீர். வெட்கம் இல்லை! பிராம்மணனும்! பிராம்மணன் என்று நீரும் சாணக்யருமாகச் சேர்ந்து கொண்டு சூழ்ச்சிகள் செய்து அனார்யர்களான கிராதர்களின் உதவியை நாடி, ஓர் க்ஷத்ரியனை அவனது தகப்பன் ஸிம்ஹாஸனத்திலிருந்து இறக்கி அந்த இடத்தில் ஓர் தாஸீபுத்ரனை, ஓர் சூத்ரனை, மகத நாட்டுக்கு அதிபதியாக்குகிறீர்களே, உங்களுக்கு வெட்கமுமா அற்றுப்போய் விட்டது! இதுதான் உங்கள் கீர்த்தியோ? ஏன் முகத்தை தொங்கவிடுகிறீர்? இதோ என்னைப் பாரும், விச்வாஸகாதகா!

காத்யாய :—நான் எப்பொழுதுமே விசுவாஸகாதகனாகவா இருந்தேன்? நீர் தானே என்னை விசுவாஸகாதகனாகச் செய்தீர். பச்சைக் குழந்தைகளைச் சிறையில் அடைத்துக் கொன்றீரே! இதே அறையில் இதே இருட்டில் உண்ண உணவின்றி தொண்டையும் வறண்டு தவித்து தவித்து என் கண்முன் ஒவ்வொருவராய் மாண்டனரே! ஒவ்வொருவனும், தான் இறக்கும் முன், தன் கடைசி கபள அன்னத்தை எனக்கு அளித்து, உம்மை மனமாறத்திட்டி, பழிக்குப்பழி வாங்குவதாக என்னிடம் வாக்தானம் வாங்கிக்கொண்டு, உம்மைச் சபித்துவிட்டுச் சென்றனர். ஒவ்வொருவராய் துடித்து துடித்து இறந்தனர்! புத்ர சோகத்தை நீர் அறியீர்! மேகம் இருண்டு வானத்தை மூடி உலகத்தை அந்தகாரம் கபளீகரிக்கும்பொழுது, விருத்த பிதாவின் கண்களுக்கு வெளிச்சம் அளிப்பது குமாரன் தான். விருத்தனுடைய ஸம்பத், புண்யம், பரலோகம்—எல்லாவற்றிற்கும் ஆதாரம் குமாரன் தானே! அப்படிப் பட்ட குமாரர்களை—என் ஏழு குமாரர்களையும் பிடுங்கிக் கொண்டீரே! என் வருங்காலத்தை சூன்யமாக்கினீர்! என்னை ஹாஹா வென்று பறக்க அடித்தீர்! அவர்கள் உம்முடன்கூட விளையாடினவர்களல்லவா! ஒரு பாபமும் அறியாதவர்கள். உமக்கு ஸ்வப்னத்திலும் ஒரு தீங்கும் நினையாதவர்கள்!

நந்தன் :—(சற்று யோஜித்து) ஆம்; நான் செய்தது அநியாயம்தான்; கோரமான பாதகம் தான்! ஐயோ ஸ்வபாவமாக நான் இவ்வளவு பாபியல்ல. ஸங்க தோஷம் தானே?

காத்யாய :—இவ்வளவு கொடியவராக எப்பொழுது ஆனீர்? என் கண்களின் கீழ் வளர்ந்தவர், என் முதுகில் ஏறி விளையாடினவர் என் மடியில் இருந்து மகிழ்ச்சி யுற்றவர் நீர். இவ்வளவு நிஷ்டூரராக எப்படி ஆனீர்?

நந்தன் :—ஐயோ! பாபி நான்; என்னை மன்னிக்க வேண்டும்.

காத்யாய :—மன்னித்தேன்; இந்த ஸம்ஸாரமே வேண்டாம்; நான் ஸன்யாஸியாகி விடுகிறேன்.

வாசாலன் :—அதுதான் ஸரி; இந்த உலகத்தில் எப்பொழுதும் சண்டையும் சச்சரவும் தான்; மனிதன் வஸிக்க யோக்யமில்லை. எங்கள் எல்லோருக்கும் விடுதலை தானே?

காத்யாய :—எனக்கு அதிகாரமில்லை. மந்திரி சாணக்யரிடம் சொல்லிப் பார்க்கிறேன்.

நந்தன் :—அந்த ஒடிந்து விழும் பிராம்மணனா, இப்பொழுது மந்த்ரீ!

காத்யாய :—மந்த்ரி மட்டுமா, சந்திரகுப்தனுக்கு, குருவும்.

நந்தன் :—நன்று! சூத்ர சந்திரகுப்தன் அரசன்! பிக்ஷுக சாணக்யன் மந்த்ரீ! ஸேனாதிபதி யார்?

காத்யாய :—காட்டரசன் சந்திரகேது.

நந்தன்:—ஆஹா! அதுதான் ஸரி! காத்யாயனரே! நான் உமக்குத் தவறு இழைத்தேன். என் குற்றத்தை உணர்ந்து உம்மை மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். அதில் எனக்கு லஜ்ஜையில்லை; அவமானம் இல்லை. ஆனால், நீங்கள் இந்த சூத்ர ஸக்யம் செய்து கொண்டீர்களே! இந்த சூத்ரன் சந்திரகுப்தனையும் சூத்ரஸ்த்ரீ முராவையும் முற்றிலும் வெறுக்கிறேன். விடுதலை அடைந்தேனே—

காத்யாய :—விடுதலைக்கு வேண்டிய பிரயத்தனம் செய்கிறேன்.

வாசாலன் :—எனக்கும் கொஞ்சம் சிபார்சு செய்யவேண்டும்.

காத்யாய :—நீயே அவரிடம் சென்று கேட்டுக்கொள். உன்னை சாணக்யர் வரச் சொன்னார்.

வாசாலன் :—ஐயோ, தெய்வமே!

காத்யாய :—உன்னை அழைத்துக் கொண்டு போகத்தான் நான் வந்தேன்.

நந்த :—எதற்காக? இவனால் அவருக்கு என்ன ஆகவேண்டும்?

காத்யாய :—எனக்குத் தெரியாது. வா, போகலாம்.

வாசாலன் :—மஹாராஜா! (அழுகிறான்) பிராம்மணோத்தமரே!

நந்தன் :—நான் என்ன செய்ய முடியும்? உன்னைப்போலவே நானும் ஓர் கைதி.

வாசாலன் :—ஐயோ, அவரை நினைத்தாலே உடம்பு நடுங்குகிறதே, எப்படி அவர் ஸமீபம் செல்வேன்?

காத்யாய :—என்னுடன் வா; ஒரு பயமும் இல்லை.

வாசாலன் :—நம்பிக்கையும் இல்லையே. (போகிறார்கள்)

நந்தன் :—மகத ஸிம்ஹாஸனத்திற்கு ஓர் தாஸீ புத்ரன்! நான்மட்டில் விடுதலை அடைந்தேனே—

அங்கம் 3 காட்சி 2.

*சாணக்யரின் ஒடிந்த குடிசை—இரவு.*

சாணக்யர் :—(தனக்குள்) இனித் திரும்பி விடலாமா? ஆனால் திரும்பி எங்கு செல்வது? வீண் ஆலஸ்யத்திற்கா? நிஷ்கர்ம நைராச்யத்திற்கா? வேண்டாம், அது என்னால்முடியாது. அது தேங்கி நிற்கும் சாக்கடைத் தண்ணீர்; அதற்கு, இதுவே மேல். இதிலாவது பிரதிஹிம்ஸையின் தீவ்ர ஜ்வாலை நிரம்பி நிற்கின்றது. எங்கு கொண்டுபோய் விடுமோ? பிரும்மா என்னை ஸ்வர்க்கத்திலிருந்து தேசப்ரஷ்டம் செய்து விட்டார்; நரகத்திற்குத்தான் போகப் போகிறேன். ஹே பகவானே! என்னை உம்முடைய கக்ஷியிலேயே வைத்துக் கொண்டிருக்கக்கூடாதா? வைத்துக்கொள்ளவில்லை. அதனாலேதான் உமக்கு எதிரான கக்ஷியில் சேர்ந்து கொண்டு உம்முடைய நியாயத்தை எதிர்க்கத் தயாராக நிற்கின்றேன். பாபம் தான் என் கவசம்; விஷம் தான் எனக்கு அம்ருதம்; நரகமே எனக்கு வாழ்வு; கோரமே எனக்கு அக்ஷய ஸௌந்தர்யம்; பார்ப்போம்.

*(வாசாலனும் காத்யாயனரும் வருகிறார்கள்)*

சாணக் :—யார் அது?

காத்யா :—நந்தருடைய மைத்துனர் வாசாலர்.

சாணக் :—ஓஹோ! (வாசாலனை மிகுந்த பக்தியுடன் நமஸ்கரிக்கிறான்) ஆஹா, என்ன வினயம்! அன்று என்னை குடுமியைப் பிடித்து இழுத்து தள்ளினயே, ஞாபகம் இருக்கிறதா?

வாசால :—நானா? எப்பொழுது? இல்லையே. (பின்னால் பார்க்கிறான்)

சாணக் :—மறந்துவிட்டதா? ஞாபகப்படுத்துகிறேன். இதை முதலில் தெரிந்துகொள்வோம். நந்தன் பரிவாரம் இப்பொழுது எங்கே இருக்கிறது?

வாசால :—எனக்குத் தெரியாதே!

சாணக் :—(பூமியை உதைத்து) உனக்குத் தெரியும்!

வாசால :—(கூடவே) ஆமாம், தெரியும்.

சாணக் :—எங்கே?

வாசால :—(பின்னால் வெருண்டு பார்க்கிறான்)

சாணக் :—பின்னால் என்ன பார்வை? எங்கே நந்தன் பரிவாரம்? உன் தமக்கை, நந்தன் பிள்ளை—எல்லோரும் எங்கே?

வாசால :—மலயபர்வதத்தில்.

சாணக் :—(கோபமாக, பூமியை உதைத்து) பொய்!

வாசால :—(உடனே, கூடவே) ஆமாம், பொய்தான்.

சாணக் :—உண்மையைச் சொல். எங்கே இனும் வேண்டாமா?

வாசால :—பிறந்த வீட்டிற்குச் சென்று விட்டாள்.

சாணக் :—காத்யாயனரே! அவ்விடம் ஓர் ஸைன்யத்தை அனுப்பும்; அதுவரையில் இவனைச் சிறையிலேயே வைவும். அவர்கள் அங்கு அகப்படாவிட்டால் இவனைத் தூக்கி விடும்; போம்.

காத்யா :—(வாசாலனை) வா, போவோம்.

வாசால :—தூக்...கா?

சாணக் :—ஆம்.

வாசால :—என் தமக்கை அங்கு இல்லையே!

சாணக் :—வாசாலா! நீ கால ஸர்ப்பத்துடன் விளையாடுகிறாய்? ஞாபகம் இருக்கட்டும்.

வாசால:—பகவானே! நீர்தான் காப்பாற்ற வேண்டும்!

சாணக் :—கடைசித் தடவையாக கேட்கின்றேன், நந்தன் பரிவாரம் எங்கே?

வாசால :—மந்திரியின் வீட்டில்.

சாணக் :—(சற்று யோஜித்து) உண்மையாகவும் இருக்கக்கூடும். காவல்! (காவற்காரன் வருகிறான்) இவனை அழைத்துச்செல். உண்மையானால், இவனுக்கு உயிர்; அன்றேல், மரணம்; போ.

வாசால :—நா வறண்டுவிட்டது; கொஞ்சம் தீர்த்தம்! (காவற்காரன் வாசாலனை அழைத்துப் போகிறான்).

சாணக் :—உலகில் ஓர் பதார்த்தமும் வியர்த்தமல்ல! குப்பைக் குழியிலும் குணம் உண்டு, குணக்ஞனுக்கு! மலமூத்திரத்தின் துர்க்கந்தத்திலிருந்தும் பாரிஜாதத்திற்கு வேண்டிய ஸுகந்தம் ஸ்ருஷ்டிப்பதில்லையா? என்ன நினைக்கிறீர், காத்யாயனரே!

காத்யா :—மனிதன் இவ்வளவு நீசனா? இவ்வளவு கிருதக்கினனா? கொடும் துன்பத்தைப் பொறுக்கலாம்; கொலையையும் ஸஹிக்கலாம்; கிருதக்கினனை க்ஷமிக்கமுடியாது.

சாணக்ய:—மனிதனுடைய கிருதக்கினதையைக் கொண்டு தான் சாணக்யனுடைய ராஜதந்திரம் தொகுக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய அல்ப குணங்கள் தான் என் தந்திரத்தின் அடிப்படை. மித்ரனைச் சத்ருவாகச் செய்து, அண்ணன் கழுத்தில் தம்பியின் கத்தியைச் சொருகச் செய்து, ஹிம்ஸையை அவிழ்த்துவிட்டு, பேராசையைப் பெருகச் செய்து, 'சாட்யே சாட்யம் ஸமாசரேத்' என்பது தான் சாணக்ய தந்திரம். கழுத்திலே கத்தியை செலுத்தும்போதும் முகத்திலே மதுரமான மந்தஹாஸம், பானத்தில் விஷத்தை கலந்து கொடுக்கும்போதும் மோஹன ஸல்லாபம்!

காத்யாய :—நானும் பிரதி ஹிம்ஸைக்காகவே உயிர் வாழ்கின்றேன். அப்படியிருந்தும் இந்த மார்க்கம் எனக்கு திருப்தி அளிக்கவில்லை.

சாணக்ய:—காலக்கிரமத்தில் எல்லாம் உண்டாகிவிடும். முற்றிலும் விச்வாஸ காதகனாக உம்மைச் செய்து விடுகிறேன். சாட்யத்தையே கலையாக அப்யஸித்து விடுவீர்.

காத்யாய :—இது அநியாயம்; பாணினி ஸுத்ரத்தில் 'நிர்வாணேவாதே' என்றார். அதாவது—

சாணக்ய :—மறுபடியும் பாணினியை எடுத்து விட்டீரா? யார் சொல்வது அநியாயமென்று?

காத்யாய :—ஸமாஜம்.

சாணக்ய :—அதை நான் மதிக்கவில்லை.

காத்யாய :—விவேகம்.

சாணக்ய :—அது ஓர் துரப்யாஸம்.

காத்யாய :—ஈச்வரன்.

சாணக்ய :—அவர் தான் இல்லையே.

காத்யாய :—சாணக்யரே ஜாக்கிரதை! பர்வத சிருங்கத்தின் கோடிக்கு வந்து விட்டீர்; விழுந்து விடுவீர்.

சாணக்ய :—விழுந்தால் ஓர் பெரிய கொள்ளிக் கட்டையைப்போல், ஓர் தூமகேதுவைப் போல், ஜகத்தை நடுங்கச்செய்துகொண்டு விழுவேன். நீர் போம், எல்லாம் தயாராகவேண்டும்.

காத்யா :—எது தயாராகவேண்டும்?

சாணக்ய :—யூபஸ்தம்பமும் கத்தியும்தான். ஆடு தயாராக நிற்கிறது.

காத்யா :—நான் தங்களைக் கேட்டுக்கொண்டேனே, நந்தனை விட்டுவிடும்.

சாணக் :—அதுதான் முடியாது, போம்; எல்லாவற்றையும் தயார் செய்யும்.

## அங்கம் 3. காட்சி 3.

*சந்திரகேதுவின் வீடு; சாயா தனியாகப் பாடுகிறாள், உலவுகிறாள்; சந்திரகுப்தன் வருகிறான்.*

சந்திர :—சாயா!

சாயா :—யார்? மஹாராஜரா?

சந்திர :—உன் தமயனார் எங்கே?

சாயா :—தெரியாதே, போய்ப்பார்க்கிறேன். (போகிறாள்).

சந்திர :—வேண்டாம் வா.

(சாயா திரும்பி வருகிறாள்; சந்திரகுப்தனை உற்றுப் பார்க்கிறாள்)

சந்திர :—யுத்தத்திற்கு அப்புறம் உன்னை நான் கண்டு பேசவே இல்லையே.

(சாயா பேசாமல் நிற்கிறாள்)

சந்திர :—சாயா! நீதான் என்னைக் காப்பாற்றினாய்; எனக்கு உயிரையும் வெற்றியையும் அளித்தாய்.

(சாயா பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள்)

சந்திர :—அதற்காக நான் உனக்கு என் நன்றியைக்கூட அறிவிக்கவில்லை. சாயா! நான் என்றும் உனக்கு க்ருதக்ஞன்.

சாயா :—(பாதி ஸ்வரத்தில்) இவ்வளவுதானா?

சந்திர :—உனக்கு நான் பிரத்யுபகாரம் செய்ய ஸித்தமாக காத்துக்..................

சாயா :—அது ஒன்றும் வேண்டாம். நாங்கள் காட்டு ஜனங்கள்; உபகாரத்தை விலைக்குக் கொடுப்பதில்லை; மஹத்ப்ரவ்ருத்திகளில் வாணிஜ்யம் செய்வதில்லை. தங்கள் உயிரைக் காக்க எனக்கு அவகாசம் கிடைத்ததே, அதுவே எனக்கு பரம ஸௌபாக்யம்! வேறு ஒன்றும் எதிர்பார்க்கவில்லை.

சந்திர :—ஆஹா! இந்தக் குழந்தைப்பெண்ணின் ஹ்ருதயம் எவ்வளவு உதாரம்! அல்லது ஒருவேளை.........

சாயா :—'அல்லதா?' மஹாராஜா! நாங்கள் குழந்தை முதலாகவே வேட்டையாடக் கற்றுக் கொள்ளுகிறோம்; யுத்தம் செய்யக் கற்றுக் கொள்ளுகிறோம்; ஆனால், வஞ்சனை செய்வதை மட்டில் கற்றுக் கொள்வதில்லை நாகரீக மனிதர்களைப்போல, இரண்டு அர்த்தம் கொள்ளும்படி பேசத் தெரியாது. சொல்லுகிற சொல்லுக்கு ஒரு அர்த்தம் தான் உண்டு. அதில் 'அதாவது'க்கு இடமில்லை.

சந்திர :—சாயா! நீ ஓர் புதிர்.

சாயா :—மஹாராஜா! எனக்கு ப்ரத்யுபகாரம் ஒன்றும் வேண்டாம். (போகிறாள்).

சந்திர :—சாயா! சற்று நில்! ஒன்று உன்னைக் கேட்கவேண்டும். ஆமாம், உபகாரம் செய்தபிறகு உபகாரம் அடைந்தவனிடம் உனக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு? சந்திரகேதுவுடன் நீ பேசிக்கொண்டிருக்கும்பொழுது நான் வந்துவிட்டால் நீ பேச்சையும் நிறுத்திவிட்டுப் போய்விடுகிறாயே. ஏன் இவ்வளவு அலக்ஷ்யம்?

சாயா :—அலக்ஷ்யமா! (சற்று தலைகுனிந்து, பிறகு) தாங்கள் எப்பொழுதாவது பர்வதத்தின் சிகரத்தில் நின்றுகொண்டு ஸூர்யோதயத்தை பார்த்திருக்கின்றீர்களா? திகந்தம்

வரையில் பரவி நிற்கும் பர்வத ச்ருங்கங்களின் மேல் சஞ்சலமான ஸூர்யகிரணங்கள் அலை யலையாக விளையாடிக்கொண்டே போவதைக் கண்டு இருக்கின்றீர்களா?

சந்திர :—பார்த்திருக்கிறேனே.

சாயா :—எங்கள் வாழ்வும் அதுவே. ஓர் உஜ்வல கன ச்யாம லதை; ஆவேசத்தால் நடுங் கும் லதை. அதை பர்வத அடியில் வஸிப்ப வன், கீழே இருந்து கண்டு அறிய இயலுமா?

சந்திர:—வாஸ்தவம். அதனால்தான், உன்னை நான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஆயி னும் உன் கனச்யாம ஆவரணத்தின் கீழும் ஹ்ருதயந்தானே இருக்கும்.

சாயா :—(தனக்குள்) மஹாராஜர் தம் நாக ரீகத்துக்கு இணங்க என்னை "கருப்பு" என்று சொல்லிவிடாமல் 'கனச்யாம ஆவரணமெ'ன்று மரியாதையாக மொழிந்தார். மேகம் எவ்வள வுக்கெவ்வளவு ஸலில ஸம்பார ஸம்ப்ருதமாகி றதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் வக்ஷஸ் தலத்தை தீவ்ரமான மின்னல் பிளக்கிறது அன்றோ? (ப்ரகாசமாய்) போகட்டும். ஹ்ருதய மாவது இருக்கிறது என்று தெரிந்துகொண்டீர் களே! எவ்வளவு மஹத் ஹ்ருதயமது! எவ்வ ளவு ப்ரசண்டமான அலைகள் மோதுகின்றன அதில் என்று தாங்கள் கண்டபடி!

சந்திர :—ஆனால் ஒருவேளை என்னை நீ காத லிக்கிறாயோ? அப்படியும் இருக்குமோ?

சாயா :—மஹாராஜ! ஏன் அப்படித்தான் இருக்கக்கூடாது? பகவான் உங்களுக்குச் சற்று அதிக வர்ணத்தை பூசினார்போலும். அதனால் அஹங்காரம் தலைக்கொண்டு தரையில் கால் பதியமாட்டேன் என்கிறது! நான் உங்களை நேசிக்கிறேனா என்று கேட்டீர்கள்? இல்லவே இல்லை. தங்களை நான் முற்றிலும் வெறுக்கி றேன்; மனப்பூர்வமாக வெறுக்கிறேன். தாங் கள் ஒரு பிடி பிரேம பிக்ஷை எனக்கு அளிப் பீர்கள் என்று இரண்டு கையையும் நீட்டி பெற் றுக்கொள்ள ஓடிவரும் ப்ரேமபிக்ஷுகையா நான்? என்ன இறுமாப்பு! மஹாராஜ! தாங் கள் தேவர்கள் கொண்டாடும் மகதாதிபதியா யினும், நான் நாகரீகமற்ற மலையில் வாழும் கருப்புப் பெண்ணாக இருந்தாலும், நான் தங் களை முழுமனதுடன் வெறுக்கிறேன் தெரிந்த தா? (வேகமாகப் போய் விடுகிறாள்.)

சந்திர :—வேடிக்கையாக இருக்கிறதே! என் உயிரைக் காத்து எனக்கு அளித்தாள்; இப் பொழுது வெறுக்கிறாளாமே! புதிராக இருக் கிறதே! ஸெல்யூகஸின் புதல்விதான் என்ன அழகு? வெகுநாள் முன் கண்டது அலெக் ஸாந்தருடன். மஹாஸமுத்ரத்தின் நீலஜல ராசியின்மேல் அவதரிக்கும் உஷஸைப்போன் றும், ரக்தவர்ண ஜபாகுஸுமங்களின் மத்தி யில் நின்று மலரும் ரோஜாவைப்போன்றும்— சே, அதை ஏன் நினைக்கவேண்டும்! அது ஒரு ஸ்வப்னம்.

(சந்திரகேது வருகிறான்)

சந்திரகேது :—பழைய அரசனான நந்தனை இன்றே பலியிடப்போகிறார்களாம். பிராம ணருடைய கட்டளையாம்!

சந்திர :—(ஆச்சர்யத்துடன்) என்ன பலி யா? பிராமணன் கட்டளையா? பின் நான் யார்? மகதாதிபதி யார்? நானல்லவா? இவ் வளவு பிரயாஸையும் பிரயத்னமும் ஓர் பிரா மணனுடைய பிரபுத்வம் என்னும் ஹோமத் தில் சேர்க்கும் நெய்தானா? சந்திரகேது!

சந்திரகேது :—என்ன, அண்ணா?

சந்திர:—நந்தனைத் தூக்கிலிடக்கூடாது. நான் அவனை மன்னித்துவிட்டேன். இதோ க்ஷமா பத்ரம் கையெழுத்திட்டு அனுப்பிவிடுகிறேன். மஹாராஜா சந்திரகுப்தனுடைய ஆக்ஞை இது! பிரார்த்தனையல்ல; தெரிந்ததா? ஆக்ஞை யை நிறைவேற்றுவாயா?

சந்திரகேது :—அப்படியே. (போகிறான்).

சந்திர :—என்ன அஹங்காரம் இந்த பிராம் மணனுக்குத் தான்! என்னிடம் சொல்லவு மில்லை, அனுமதியும் கேட்கவில்லை. இந்த ஸாம்ராஜ்யத்திற்கு நான் யார்? வெறும் பொம் மைதானா? சாணக்யரின் விளையாட்டுக்கருவி தானா?

(சாயா வருகிறாள்)

சாயா :—மஹாராஜ! மன்னிக்கவேண்டும்.

சந்திர :—எதற்கு மன்னிப்பு?

சாயா :—நான் விளையாட்டாகச் சொல்லி விட்டேன்; அது தவறு என்று உணர்ந்தேன்; என்னை மன்னித்தருளவேண்டும்; மன்னிக்க முடியாத குற்றமாயின், அதற்குரிய தண்டனை யை அளிக்கவேண்டும்.

சந்திர :—நீ ஓர் குற்றமும் செய்ததாகத் தெரியவில்லையே! நீ என்னை வெறுக்கிறாய்; அதை வாயைவிட்டுச் சொன்னாய்; அதில் குற்றமென்ன?

சாயா :—நானா வெறுக்கிறேன்? என்னால் வெறுக்கமட்டில் முடிந்தால்! என் ஜாக்ரதாவஸ்தையின் த்யானம், நித்ராவஸ்தையின் ஸ்வப்னம், இஹகாலத்தின் ஸம்பத், பரகாலத்தின் ஸ்வர்க்கம்—இவையெல்லாமான தம்மை என்னால் வெறுக்கமுடியுமா? தம்மைக் காணாத ஒவ்வொருமுஹூர்த்தமும் எனக்கு அபிசாபமாகவே தோன்றுகிறதே. தம்மை உண்மையாகவே வெறுக்கமுடிந்தால், எனக்கு எவ்வளவு ஸுகம்கிட்டும். ஆஹா!

சந்திர :—ஏன்? சாயா. உனக்கு அப்படி என்ன தீங்கு இழைத்துவிட்டேன்?

சாயா :—என்னவா? என்ன செய்யவில்லை என்று கேளுங்கள். எனக்கு ஆஹாரத்திலுள்ள பசியையும், தூக்கத்திலுள்ள விச்ராந்தியையும், ஸர்வஸமயத்திலுள்ள சாந்தியையும் அபஹரித்துக்கொண்டீர்களே. நான் என்னும் என் தனிவ்யக்தியும் தங்கள் சிந்தையிலேயே மறைந்ததே. நான் வாழ்வது ஸ்வர்க்கமா நரகமா என்றும் எனக்குத் தெரியாமல் செய்துவிட்டு கேட்கின்றீர்களே, நான் என்ன செய்துவிட்டேன் என்று. நீங்கள் கொடியவர்; நிஷ்டூரர். (அழுகிறாள்).

சந்திர :—சாயா! (ஸ்னேஹமாக, கையைப் பிடிக்கிறார்)

சாயா:—வேண்டாம், வேண்டாம்; என்னைத் தொடாதீர்கள். தங்கள் ஸ்பர்சத்தால் என் தேஹத்தில் மின்னல் பிரவாஹமாக ஓட ஆரம்பித்துவிடும். என் தலையும் பாறையில் விழுந்த மண் பாத்திரம்போல் சிதறிவிடும்; வேண்டாம்; இந்த உன்மாதத்தை எப்படியாவது அடக்கிக்கொள்கிறேன். (வேகமாகப் போய் விடுகிறாள்).

சந்திர :—என்ன ஆச்சர்யம்! என் தங்கையாக பாவித்து நடந்துவந்த இவள்...இவளா?

## அங்கம் 3. காட்சி 4.

சாணக்யரும், அவரைச் சூழ்ந்து ஸைனிகர்களும். கைதியாக நந்தனும்; உருவிய வாளும் யூபஸ்தம்பமும்.

சாணக் :—பூதபூர்வ மஹாராஜ! தெரிந்ததா, இப்பொழுதாவது பிராம்மணனுடைய பிரதாபம்! இன்னும் இருக்கிறது. முற்றிலும் போய்விடவில்லை. தோள்களுக்குமேல் தலையை அமைத்தாரே ஈச்வரன், அவர் விஷயம் தெரியாதவரா? க்ஷத்ரியனுக்குமேல் பிராம்மணனுக்கு உயரிய பதவியை அளித்தார்களே, ஆர்யரிஷிகள், அவர்கள்தான் விஷயம் தெரியாதவர்களா? பிராம்மணனை அவமதிக்க சக்தி ஒருவரிடமும் இல்லை. இந்த பாரததேசம் பாரததேசமாகவே இருக்கும்வரையில், பிராம்மணனும் இந்த ஸமாஜத்தை அரசுசெய்வான். அதன்பிறகு, எல்லாம் நஷ்டப்ரஷ்டமாகிவிடலாம்.

நந்தன் :—உம்முடைய தற்புகழ்ச்சியைக் கேட்கவா இங்கு தருவிக்கப்பட்டேன்?

சாணக் :—வேண்டாம்; கேட்கவேண்டாம். இதோ உருவிய கத்தி; இதோ யூபஸ்தம்பம். என் வாயால் மேலே சொல்வானேன்? அன்று நான் செய்த பிரதிக்ஞை ஞாபகம் இருக்கிறதா? "உன் ரக்தம் தோய்ந்த என் கைகளால் இந்த அவிழ்ந்த தலைமயிரை முடிவேன்" என்று சபதம் செய்தேன் அல்லவா? தலைமயிர் இன்னும் அவிழ்ந்துதானே இருக்கிறது! ஆகையால் எதற்காக உம்மை வரவழைத்தேன் என்பது புலனாகவில்லையா?

நந்த :—என்னை வதம் செய்வீரா?

சாணக் :—நிச்சயமாக.

நந்த :—நிராயுதபாணியையா? இதுதான் புகழ்பெற்ற தங்கள் ஸநாதன தர்மமோ?

சாணக் :—ஓஹோ! க்ஷத்ரியனுக்கு பாத ஸேவை செய்து, பிராம்மணன் இனி ஸனாதன தர்மத்தின் மர்மத்தைக் கற்றுக்கொள்ளவேண்டுமோ? இது வதம் அல்ல; இது உமக்கு நான் அளிக்கும் ம்ருத்யுதண்டனை. பிராம்மணன் விதிக்கும் ராஜதண்டனை தெரிந்ததா?

நந்த :—எந்த அபராதத்திற்கு?

சாணக் :—ப்ரும்மஹத்திக்கு, ப்ரும்மஸம்பத்தை அபஹரித்ததற்கு, பிராம்மணனை அவமானம் செய்ததற்கு! இது ஹத்யை அல்ல; நியாயவிசாரம். நியாயவிசாரம் செய்ய எனக்கு அதிகாரம் உண்டு; ஆகையால் தயாராக இரும். ஸைனிகர்களே, இவரை யூப ஸ்தம்பத்தில் கட்டுங்கள்.

நந்த :—சாணக்யரே! நான் காத்யாயனருக்குப் பெரும் தீங்கு இழைத்துவிட்டேன்; உமக்கும் நான் தவறு இழைத்தேன்; மன்னியும்.

சாணக் :—(உரக்க, சிரித்துக் கொண்டே) மன்னிப்பா? அதுதான் ஸரி! நான் சொன்னபடியே ஆயிற்று? வார்த்தைக்கு வார்த்தை, அக்ஷரத்துக்கு அக்ஷரம், அப்படியே ஆயிற்று? "இதே பிராம்மண பிக்ஷுகன் காலில் விழுந்து நீ மன்றாடுவாய் உன் உயிருக்கு" என்று அன்றே நான் சொல்லவில்லையா? ஆம், அன்றே 'அந்த பிக்ஷையை உனக்கு அளிக்கமாட்டேன்" என்றும் சொல்லவில்லையா?

நந்த :—பிராம்மணரே! நான் பிராணபிக்ஷை கேட்கவில்லை; உம்மிடம் எதிர்பார்க்கவுமில்லை. நான் க்ஷத்ரியன். ஆகையால் பிராம்மணனுடைய அதிகாரத்தை ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. சூத்ரனை இன்றும் வெறுக்கின்றேன்; அதிலும் என் தகப்பனாரின் தாஸீபுத்திரனை அறவே வெறுக்கின்றேன். மரணத்தைக் கண்டு நான் பயந்துவிடவில்லை; நெருப்பைக் கக்கும் உம்முடைய கண்களை நான் துச்சமாக மதிக்கின்றேன்; ஆனால் நான் செய்தது அநியாயம்தான் என்று உணர்கின்றேன்; அதற்கு பச்சாத்தாபப்படுகிறேன். ஸ்வபாவமாக நான் இவ்வளவு அல்பனல்லன்; தன் பிரஜைகளுடைய பொருள்களைக் கவரும் கள்வனல்லன்; நரஹத்தி செய்யும் நராதமனல்லன்; சேர்க்கை தோஷத்தால் பாபியானேன். என்னை மன்னியும், காத்யாயனரே!

காத்யா :—(குரல் நடுங்க) உம்மை மன்னித்துவிட்டேன். .

சாணக் :—காத்யாயனரே, ஜாக்ரதை! இது மன்னிப்பு அல்ல, பொறுமையுமல்ல. இவ்வுலகில் ஓர் மனிதன் மற்றொருவனை மன்னிப்பதில்லை; மன்னிக்கவும் முடியாது. ஹ்ருதயத்திற்குள் இருந்து கொழுந்துவிட்டு எரியும் வேதனை கண்ணீரின் இருதுளிகளாலா சீதளமாகிவிடும்? ஒருநாளுமில்லை. இது ஸமயோசித தந்திரம்; பச்சாத்தாபமே ஸமயோசித தந்திரம்; க்ஷமையும் ஸமயோசித தந்திரமாகத்தான் கையாளப்படும். கையில் கழியைக் கண்டவுடன்தான், தண்டனைக்கு எதிரில்தான், பச்சாத்தாபம் ஏற்படுகிறது. அதற்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை; பிளந்துபோன மனது க்ஷமையினால் மறுபடியும் ஒன்றாக சேர்ந்துவிடுமா?

காத்யா :—பாவம், நந்தன் குழந்தை!

சாணக் :—குழந்தையானால் குழந்தைக்குரிய காரியங்களுடன் இருந்திருக்கவேண்டும். குழந்தையும் அறிவின்றி நெருப்பில் கையை இட்டால் கொளுத்தத்தான் படும். அக்னி தன் வேலையைச் செய்தே தீரும்.

காத்யா :—பாணினீ சொல்லியிருக்கிறார்...

சாணக் :—(பூமியைத் தட்டி) மறுபடியுமா பாணினீ? இனி பாணினீயை இழுத்தீரோ, உமக்கும் வதம்தான்.

காத்யா:-நந்தன், பாவம், அறியாக்குழந்தை.

சாணக் :—அதுதான் வ்யக்தமாகத் தெரிகிறதே! எடும் கத்தியை! உம்முடைய கையினாலே இவனது தலையைச் சீவி எறியும்.

காத்யா :—ஐயோ நானா?

சாணக் :—ஆம், நீரேதான்; புத்ரஹத்திக்கு பதிலாக. மறந்தாவிட்டீர் உம் ஏழு புதல்வர்களையும்? அன்னமின்றி, தேஹம் வெளிர்த்து, ஓர் பருக்கை சோற்றுக்காக க்ஷீணஸ்வரத்தில், 'ஹா ஹா'வென்று அலறினதையும்,

அவர்களின் ஒளி இழந்த கண்களையும், ஸம்க்ஞையற்று விழுந்ததையும், சில்லிட்டு விறைத்ததையும் மறந்துவிட்டீர்! அசைவு மறந்த தேஹம், மூட மறந்த கண்கள், ம்ருத்யுவின் பயங்கர முத்திரை, ஒவ்வொன்றாக உம் கண் முன் வரவில்லையா? தகப்பனாரான உமக்கு மறக்கவும் இயலுமோ? அரசன் அநீதியை எதிர்க்க பிராம்மணன் ஒருவன்தான் முன்வரக்கூடும். அரசனுக்கும் தண்டனை விதிக்க பிராம்மணனுக்கு மட்டில்தான் அதிகாரம். தீர்த்துக் கொள்ளும் உம் வஞ்சத்தை! (காத்யாயனர் கத்தியைக் கையில் எடுக்கிறார்).

சாணக் :—ஏன் இன்னும் தாமதம்? ஸைனிகர்களே! கட்டுங்கள் இவரை. (யூபஸ்தம்பத்தில் கட்டுகிறார்கள்).

சாணக் :—ஹும் காத்யாயனரே! (காத்யாயனர் கத்தியுடன் யூபஸ்தம்பத்தின் அருகில் வருகிறார்).

சாணக் :—பூதபூர்வ மஹாராஜ! இது பிராம்மணன் செய்யும் காரியமல்ல, புரியும் தொழிலல்ல. என்ன செய்வது? செய்யும்படி நேரிட்டுவிட்டதே. முன்பு இருந்த தவம் இல்லை, பிராம்மணனுக்கு. இரண்டாவது, பரசுராமனைப் இந்த பாரதவர்ஷத்தை நி:க்ஷத்ரியனாக செய்துவிடவேண்டுமென்று விருப்பம் இருக்கிறது; க்ரோதம் பொங்கும் கண்களாலேயே கபிலரைப்போல் இந்த நந்தவம்சத்தையே பஸ்மமாகச் செய்துவிடவேண்டுமென்று அவா இருக்கிறது; முடியவில்லையே. இக்கலியுகத்தில் கத்தியைத்தான் தேடவேண்டியதாயிற்று. இந்தக் கலியுகமும் பிராம்மண பிரதாபத்தைக் காணட்டும். காத்யாயனரே, ஏன் நிற்கின்றீர்? கொல்லும் இவனை. ஆம், சாகும் முன் இதையும் கேட்டுவிட்டு சாகலாம். உம்முடைய வம்சத்தில் இனி தர்ப்பணம் செய்ய ஸந்ததி இல்லை; விளக்கு ஏற்றிவைக்க மனுஷ்யர்கள் இல்லை. நந்தவம்சம் நிர்மூலமாக்கப்பட்டது.

நந்தன் :—ஐயையோ! (என்று அலறுகிறார்)

சாணக் :—போதும், கொல்லும் இவரை.

(காத்யாயனர் நந்தன் தலைக்கு நேராக கத்தியைத் தூக்குகிறார்; வேகமாக சந்திரகேது ஓடி வருகிறார்).

சந்திரகேது :—நிறுத்தும், கத்தியைக் கீழே போடும்.

சாணக் :—ஏன்?

சந்திரகேது :—அரசன் ஆக்ஞை!

(காத்யாயனர் கத்தியைக் கீழே போடுகிறார்.)

சாணக் :—என்ன அது?

சந்திரகேது :—இதோ அரசனுடைய க்ஷமா பத்ரம்; மஹாராஜர் நந்தனை மன்னித்துவிட்டார். இனி விடுதலை!

சாணக் :—ஓ, புரிந்தது! சந்திரகுப்த மஹாராஜாது ஆக்ஞையா? இருந்தாலும் அது எனக்கு இல்லை. வதம் செய்யும், காத்யாயனரே! செய்யும்.

சந்திரகேது :—குருதேவ! இருந்தாலும் இது ராஜ ஆக்ஞையாயிற்றே!

சாணக் :—இது பிராம்மணனது ஆக்ஞை; செய்யும் வதம்.

சந்திரகேது :—அப்படியாயின் மஹாராஜரே நேரில் வரட்டும்; அதுவரையில் கொல்லவிடமாட்டேன்; ராஜ ஆக்ஞையைக் காப்பாற்றுவது என் கடமையாகும்; ஸைனிகர்களே! விலகி நில்லுங்கள்.

சாணக் :—ஒருபோதுமில்லை; நெருங்கி வாருங்கள்.

சந்திரகேது :—வீரபலரே! (ஸேனாதிபதியும் ஐந்து ஸைனிகர்களும் வருகிறார்கள்) வீரபலரே! மஹாராஜரிடம் சென்று தெரிவியும். ஸைனிகர்களே! அரசன் வரும் அளவு கைதியைக் காத்து ஒப்புவிக்கவேண்டியது உங்கள் கடமை. (வீரபலர் போகிறார்)

சாணக் :—காத்யாயனரே! நீர் என்ன மண் பொம்மையா? சித்திரமா? கத்தியை வைத்துக் கொண்டு ஏன் நிற்கிறீர்? கொடும், இப்படி. (முன் செல்கிறார்).

சந்திரகேது :—(முன் வந்து மண்டியிட்டுத் தடுத்து) பிராஹ்மணர் முன் தாழ்ந்து பணிந்தேன். ஆயினும், அரசன் ஆணையைக் காப்பாற்றியே ஆகவேண்டும்.

சாணக்:—காத்யாயனரே! கொல்லும். ஏன் தாமதம்?

[காத்யாயனர் கத்தியைத்தூக்கி வீசப்பார்க்கிறார். சந்திரகேது ராஜாக்ஞைப் பத்ரத்தை நீட்டுகிறார்; "ராஜாக்ஞை" என்கிறார்; கத்தி கீழே விழுகிறது.)

சாணக்.—சந்திரகுப்தனை ஸிம்ஹாஸனத்தில் ஏற்றிவைக்க முடிந்த பிராம்மணனுக்கு அவனை அதைவிட்டு இறக்கிவிடவும் முடியும். காத்யாயனரே! முடியும் உமது வேலையை.

(காத்யாயனர் கத்தியை மறுபடியும் எடுக்கிறார்.)

சந்திரகேது :—வேண்டாம், வேண்டாம்; இதில் பிரும்மஹத்தி ஏற்படுமாயினும், நான் தயங்கமாட்டேன்; ஜாக்ரதை!

(முரு வருகிறாள்)

முரு :—பெண்ஹத்தி ஏற்படுமாயின்? (சந்திரகேதுவுக்கும் காத்யாயனருக்கும் நடுவில் நிற்கிறாள்).

சந்திரகேது :—(திகைத்து) அம்மா! தாங்களுமா இதில்?

முரு :—ஆம், நானும்தான். என் உத்தரவை நிறைவேற்றும்; உடனே கொல்லும் இவனை.

சந்திரகேது :—அம்மா! நந்தரை மன்னித்து விடுங்கள்.

முரு :—(பரிஹாஸமாக, சிரித்து) மன்னிப்பா? என்னால் மன்னிக்கமுடியாது; மன்னிக்கத் தெரியாதே; நான் சூத்ரஸ்த்ரீதானே! மன்னிப்பது பிராம்மணனது இயல்பு; சூத்ர தர்மமல்லவே!

சந்திரகேது :—அம்மா! மன்னிப்பு மனித தர்மம், அம்மா. ஸ்வர்க்கத்தினின்று இறங்கும் பாகீரதியின் பிரவாஹம்போல் யாவரும் ஸ்நானம் செய்ய யோக்யமாய், ஈச்வரனின் க்ஷமையென ஆயிரம் கிளைகளாய் பரவி உலகையே பவித்ரமாக்கி, ஸ்வாஸ்த்யரூபமாகி ரோகத்தில் நம்மை சிகித்ஸித்து, சோகத்தில் ஞாபகசக்தியை மறைத்து, நம்மைத் தேற்றி, தாரித்ரியத்தில் பொறுமையாக இருந்து நம்மை வாழ்விக்கும் இது. இது இன்றேல், குழந்தைப் பருவத்திலேயே ஆயிரம் அபராதங்களையும் தாயார் பொறுத்து மறந்துவிடாவிடில், குழந்தை மீறி பெரியதாக ஆகிவிடமுடியுமா! அம்மா! குழந்தையை மன்னியும்; அம்மா, மண்டியிட்டு மன்றாடுகிறேன்.

முரு :—சந்திரகேது! நீமட்டிலா மன்றாடுகிறாய்? இதோ என் பிராணனே என் கூட்டைவிட்டு கிளம்பி, வெளிவந்து, என் காலில் விழுந்து இவனை மன்னித்து விடும்படி மன்றாடுகிறதே! கைதி அவஸ்தையில், தொங்கின முகத்துடன் காண்கின்றேனே இந்த நந்தனை, என் நந்தனை. காணத்தான் முடிகிறதா? கண்ணீர் பொங்கி எழுந்து கண்ணை இருட்டுகிறது. நந்தா! சூத்ரத்தாயின் பால் க்ஷத்ரியஸ்த்ரீயின் பாலைக்காட்டிலும் மட்டமா, இனிப்பு அற்றதா, அவளுடைய வாஞ்சைதான் அசுத்தமா? நந்தா! வேண்டாம், நான் மன்னிக்கமாட்டேன். நான்தான் சூத்ரஸ்த்ரீயாயிற்றே; தாஸியாயிற்றே; கொல்லும் இவனை.

சந்திரகேது :—அம்மா ராஜக்ஞையாயிற்றே.

முரு :—இது ராஜமாதாவின் ஆக்ஞை! தாஸியாயினும் ராஜமாதா அல்லவா? கொல்லும் இவனை இதே க்ஷணத்தில்.

சந்திரகேது :—நான் தோற்றேன்! ஸ்த்ரீயின்முன் நான் தோற்றுவிடுவேன். (முருவின் காலடியில் கத்தியை வைத்துவிட்டு) ஸ்த்ரீயின் மயிர் நுனியைக்கூடத் தொட எனக்கு சக்தியில்லை.

சாணக் :—கொல்லும்.

(திரை விழுகிறது. பிறகு)

முரு :—ஐயய்யோ, செய்துவிட்டீரா? நானே கொலை செய்துவிட்டேனே! ஐயோ, இவனைக் காப்பாற்ற அன்றோ வந்தேன்.

(முகத்தை மூடிக்கொண்டு அழுகிறாள்; சந்திரகுப்தன் வருகிறார்)

சந்திர :—(நந்தன் தலையைக்கண்டு பின் செல்கிறார்) என்ன இது?

முரு :—இவர்கள் என் நந்தனைக் கொன்று விட்டார்கள். நான் ஸ்தன்யம் கொடுத்த முகம், என் தேஹத்துடன் கட்டிக்கொண்டு கண் வளர்த்திய இந்த தேஹம்; ஐயோ என்ன செய்துவிட்டார்கள். ஐயோ! நானே செய்து விட்டேன், சந்திரகுப்தா!

சந்திர :—யார் வதம் செய்தது?

காத்யா :—நான்.

சந்திர :—யார் உத்திரவு?

முரு :—என் உத்திரவின்மேல் தான். ஐயோ, பிராம்மணு! நான் ஸ்த்ரீ; பெண்; பேதை; அறிவற்றவள். நீர்! நீர் என்ன செய்து விட்டீர்? எவ்வளவு தடவை இந்த முகத்தை நீர் முத்தம் இட்டு இருக்கிறீர். (அவர் கையிலிருந்து தலைகீழே விழுகிறது).

சந்திர :—பிராம்மணனே! நீ அரச ஆக்ஞையை அவமதித்தாய்.

காத்யா :—ஆம்.

சந்திர :—ப்ராம்மணனைக் கொல்லக்கூடாதாம்! உன்னை தேசபிரஷ்டம் செய்துவிட்டேன்; செல், சீக்கிரம் வெளியே.

காத்யா :—மஹாராஜ!

சந்திர :—நான் ஒன்றும் கேட்கமாட்டேன். நான் அரசன் என்று உலகம் அறிய என் ஆக்ஞையை நடத்துவேன். பிக்ஷுகனின் பிரார்த்தனையன்று என் ஆக்ஞை! போ, வெளியே. (காத்யாயனர் போகிறார்)

சந்திர :—சந்திரகேது!

சந்திரகேது :—உலகின் கோடி வீரர்களும் உருவிய கத்தியுடன் எதிர்த்து நிற்பினும் ராஜாக்ஞையைக் காப்பாற்றுவான் இச்சந்திரகேது. தன் உயிரைக் கொடுத்தாவது ஸம்ரக்ஷிப்பான். ஆனால் ஸ்த்ரீயின் முன் முற்றிலும் துர்ப்பலன்; பிறந்த குழந்தையைவிட பலஹீனன்.

சந்திர :—அம்மா நீயுமா?

முரு :-என் அபராதத்திற்கு என்னை தண்டி.

சந்திர :—(மண்டியிட்டு, கை குவித்து) அம்மாவா அபராதம் செய்வாள்? அதுவும் தான் பெற்ற பிள்ளைக்கா? நீ என்னவேண்டுமானாலும் செய்துகொள். என் தாயார் நீ, எப்பொழுதும் என் தாயே. "ஜனனீ ஜன்மபூமி:ச ஸ்வர்காதபி கரீயஸீ"

(நந்தன் சவத்தைக் காண மனம் தாங்காமல் கண்ணைப் பொத்திக்கொண்டு அழுகிறான்)

(தொடரும்)

# உத்தரபூமி—பதுமைகளின் ஓய்வுநேரம்.

## தீமையின் வரலாற்றைக் குறித்த கவிதா விபூதி.

'வேர்க்கல்லி'

*(ஆங்கில ஆசிரியர்கள் ஆர். எல். ஸ்டீவென்ஸனுக்கும் மேரி கொரெல்லி அம்மைக்கும் வணக்கம்.)

பாற்கடலில் சேஷசயனத்தில் தலைமாட்டில் புத்தகக் கட்டுக்களை அடுக்கி வைத்துக் கொண்டு பகவான் யோக நித்திரையில் அமர்ந்ததும், பதுமைகள் ஒன்றென்றாய்ப் புற்றிலிருந்து ஈசல்போல், புத்தகங்களின் ஏடுகளுக்கிடையிலிருந்து ஒருதரம் தலையை நீட்டி எப்படிப் பார்த்துவிட்டு, வளையைவிட்டுக் கிளம்பிவரும் எலிகள் போல், சந்தடி செய்யாமல் வெளியே வர ஆரம்பித்தன.

சாஸ்திரிகள் (பதுமை) அப்பொழுதுதான் பகல்நேரம் உணவு கழித்துத் தூங்கி எழுந்து, பிரம்புப்பாய்க்கு அடியில் தலைமாட்டில் வைத்திருந்த பித்தளை வெற்றிலை (மற்றொரு இலையுள்பட)ப் பெட்டியை மெல்ல எடுத்துச் சாவகாசமாய்ச் சோதித்துக் கொண்டு கூடத்தில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது சுண்ணாம்பு தடவிய வெற்றிலையைக் கிழித்து வைத்துக் கொண்டு வாஸனைச் சீவலைத் தேடிவந்த தீக்ஷிதர் (பதுமை) "என்ன தூக்கமா?" என்று கேட்டுக் கொண்டே நுழைந்தார்.

"வாருங்கள், தூக்கம் முடிந்தது, ஏதாவது ஆட்டம் ஆரம்பிக்கலாம்; அவர்களிருவரும் வருகிற நேரந்தான்" என்றார் சாஸ்திரிகள்.

"நீர் இந்த வெற்றிலையையும் மற்றதொரு இலையையும் அடியோடு மறந்து, வாயில் துளி சிவப்புத் தெரியாமல் 'ஸோப்' ஜலம் விட்டுக் கொப்பளித்ததுபோல் பல்லை வெளுக்கவைத்துக் கொண்டு வாரக்கணக்காய் எப்படிக் காலந்தள்ளினீர்?" என்று கொண்டே தீக்ஷிதர் சீவலை அள்ளி மென்றுகொண்டார்.

"நீர் எப்படி உமது எண்ணெய்ச் சிக்கு வேஷ்டியையும், ஒட்டுப்போட்ட அங்கவஸ்திரத்தையும், அழுக்குப் பூணூலையும், கறவை எருமையையும், பேச்சுத் துணையற்ற வீட்டுக்காரியையும் மறந்து, காஞ்சீபுரம் பத்தாறையும், ஈயக்குண்டுபோன்ற ருத்திராக்ஷங்களையும் வண்ணான் மூட்டைக்குச் சரியான மடிஸஞ்சியையும் சுமந்து கொண்டு ஊரூராய் என்னைக் கெடுக்க நெடுக்கத் துரத்திக் கொண்டே சளைக்காமல் அலுக்காமல் தொடர்ந்து வருகிறீர்?—எல்லாம் பகவான் செயல், அம்பாளின் ஆக்ஞை; யாரங்கே? ஐயரவர்களா, வாருங்கள், இப்படி உட்காருங்கள்; இன்றுமுதல் ஐந்தாறு வாரங்களும் சாவகாசந்தானே?"

வக்கீல்ஐயர் பதுமை (உட்கார்ந்து விசிறிக் கொண்டே):—"இதற்கு முன்னே மாத்திரம் என்ன வேலை வெட்டிப் பிளந்து தட்டுக் கெட்டது! கோர்ட்டில் என்றைக்காவது ஏதாவது விசேஷ நடவடிக்கை நேர்ந்தால் வேடிக்கை பார்க்கவோ, நம் சர்மாவுக்குத் துணையாகவோ அல்லது எதிரே நிறுத்தப்பட்ட ஏழைக் குறவனுக்கு ஸர்க்கார் உதவிக் கொடுத்த வக்கீலாகவோ, கூப்பிட்டால்தான் வேலை; இல்லாவிட்டால், நம் ராமாயண பாராயணம் எங்கே போயிற்று? சாயந்திரம் ஆனால் நீங்கள் இருக்கவே இருக்கிறீர்கள் பேச்சுத்துணைக்கு!"

தீக்ஷிதர்:—"சோர்ட்டில் போனால் நீர் அவனை நிர்தாக்ஷிண்யமாய்ப் பிய்த்திழுத்து விடுகிறீர் என்று அழுகிறானே, பாவம்! நிஜந்தானா? உமக்கு இவ்வளவு உபகாரம் செய்கிறவனை நீர் இப்படிக் கதற அடிக்கலாமா?"

சாஸ்திரிகள்:—"நீங்கள் என்னைச் செய்திருக்கிறதை விடவா?"—

வக்கீல் ஐயர்:—"அடே அப்பா, அவனா! பொல்லாத பயல்; என்னையும் விழுங்குவான்;

*'The Puppet's Holiday' 'Sorrows of Satan' என்ற நூல்களின் ஆசிரியர்கள்.

யமனேயும் ஊறுகாயாய்ச் சேர்த்து விழுங்குவான்! பலே பாசாங்குக்காரன். அன்றைக்கு மாத்திரம் அவனுக்கு யாராவது புத்திசாலியான மாமனார் இரண்டு வருஷப் படிப்பை ஏற்றுக் கொண்டிருந்தாரானல் இன்றைக்கு நாங்களெல்லாம் அவனெதிரே பேர் சொல்ல முடியுமா? அவன் தகப்பனர் அசட்டுப் பிராம்மணன், ஜாதி உயர்ந்தது, ஜாதகம் உயர்ந்ததென்று சொல்லி அகமுடையாளையும் கேளாமல் ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டார். பையன் புத்திசாலியானதால் வாய்திறவாமல் வெகு அடக்கமாய்க் குடித்தனத்தை முன்னுக்குக் கொண்டு வந்துவிட்டான். இப்பொழுது எல்லாம் அவள் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.''

தீக்ஷிதர் :—''இந்தக் காலத்தில் எத்தனை பிள்ளைகள் இரண்டு காசு சம்பாதிக்கத் தெரிந்து விட்டால், மறுபெண் கொள்ளத் துணிந்து விடுகிறார்கள்!''

சாஸ்திரிகள் :—''ஆமாம், உங்களைப் போல் 'கடகர்'களும் சேர்ந்தால்''—

(உள் கட்டில் தாழ்ந்த குரலில் பேச்சுக் கேட்கிறது.)

தீக்ஷிதர் :—பெண்ணிருக்கப் பெண் கொடுக்கத் துணிகிறார்களே அவர்களைச் சொல்லுமேன்! விசாரிக்காமல் கொடுக்கிறவர்களைச் சொல்ல வேண்டாம், விசாரித்தே கொடுக்கிறவர்களைத்தான் சொல்லுமேன்!''

(உள்கட்டில்) செங்கம்மா (பதுமை) :—''ஏண்டி ரமா! நீ அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறாயோ?''

ரமா (பதுமை) :—(அடுப்பில் தோசை வார்த்துக் கொண்டே) ''ஆஹா, நன்றாய்த் தெரியுமே அவளை எனக்கு! காவேரியில் என்னைக் கண்டால் வெற்றிலை குங்குமம் கொடுக்காமற் போக மாட்டாள். ரொம்ப நல்லமாதிரி, அமரிக்கையான பேச்சு.''

செங்கம்மா:—''எனக்கெப்பொழுதும் இந்த வீட்டுக்காரியமே ஸரியாயிருக்கிறது. காவேரிக்கு எங்கே அத்தனை தூரம் நடந்து போக முடிகிறது.—கண்ணுக்கு நன்றாகத் தானே இருப்பாள்?''

ரமா:—நல்ல தீர்க்க லக்ஷணமல்லவா! அதற்கென்ன, ரத்த நரம்பு ஓடிக்கொண்டு வெள்ளைக்காரச் சிவப்பு இல்லையாக்கும்! அவளுடைய சிரித்த முகமும் அமர்ந்த கண்ணுமே போதாதா? குஞ்சலம் குஞ்சலமாகக் குழந்தைகளைத் தான் சொல்லேன்!—அழைத்துக் கொண்டு தினம் வண்டியில்தான் ஸ்நானத்துக்கு வந்து விட்டுப் போகிறாள்.''

செங்கம்மா :—''பின் ஏன் இந்தக் கலகக்காரப் பிராம்மணன் இப்படிச் சொல்ல வேண்டும்?'

ரமா :—''அவர் கிடக்கிறார், பணத்தாசை பிடித்து! காசு கொடுத்தால் எந்தக் கக்ஷியும் பேசுகிற தொழில்தானே!''

செங்கம்மா :—''என்னடி, நீகூட அப்படிச் சொல்லுகிறாய்! மாப்பிள்ளைக்கும் உனக்கும் நேர்ந்த ஆபத்துக்களை யெல்லாம் தவிர்த்து உங்களைச் சேர்த்து வைக்க ஸஹாயம் செய்தாரே, அவர் கூடவா பொல்லாதவர்?'

ரமா :—''பொல்லாதவராவது, நல்லவராவது!—எல்லாரையும்போல் பணத்தாசை பிடித்தவர். என்னவோ பிரிகிறவேளை பிரித்து வைத்து, சேர்க்கிறவேளை சேர்த்து வைத்தது. இவர் செய்த ஸஹாயத்துக்கு ஏதாவது கூலியைக் குறைத்துக் கொண்டாரோ?''

செங்கம்மா :—''பணத்தாசை பிடிக்காதவரைத் தான் ஒருவரைச் சொல்லேன்!''

ரமா :—''ஏன், உன் மாப்பிள்ளையையே சொல்லலாம்.''

செங்கம்மா .—(ஆச்சரியத்துடன்) ''என்ன என்ன! இன்னொருதரம் சொல்லு! போனாலும் போகிறதென்று நன்றாய் ஒருவார்த்தை சொன்னாயடி!''

ரமா:—''இல்லையம்மா, நிஜம்மா! நீ கொடுத்த வரதக்ஷிணை யெல்லாம் அப்பா அம்மா செலவழித்து விட்டாலும், அத்தனையும் தானே

ஸம்பாதித்துத் திருப்பி எனக்கு நகையாகப் போட்டுவிடப்போகிறேன் என்கிறார்.—இது அப்பா காதில் படவேண்டாம்."

செங்கம்மா:—"ஆமாம், நீயொரு பச்சைக் குழந்தை! எல்லாம் இப்போது அப்படித்தான் சொல்லுவார்கள், அப்புறம் குடும்பச் செலவுக்கே போதவில்லையே என்பார்கள்."

ரமா:—"நானும் அதற்காகத்தான் சொல்ல வந்தேன். அப்பாவுக்குத் தெரிந்தால் நிலம் வாங்கவேண்டும், நீர் பாய்ச்ச வேண்டும் தோட்டம் வைக்கவேண்டும் என்று பிடுங்கிக் கொண்டு விடுவார். அவர் 'ஆபீஸி'லிருந்து வந்து விட்டாற் போலிருக்கிறது! நான் தோசையைக் கொடுத்து விட்டு வருகிறேன், நீ அடுப்பைப் பார்த்துக் கொள்."

செங்கம்மா:—"ஆமாம், நீ சீக்கிரம் போ, பார்த்து ஜாக்கிரதையாய் நடந்து கொள்."

ரமா:—"நீ கொஞ்சங்கூடக் கவலைப்படாதே, அம்மா; இப்பொழுதெல்லாம் நான் என்ன தவறிப் போனாலும் அவர் கோபிக்கிறதில்லை."

('பூட்ஸ்' காலுடன் மாப்பிள்ளை நுழையும் சப்தம்கேட்கிறது.)

சாஸ்திரி:—"ரமா, அவர் வந்துவிட்டார்; இரண்டாந்தரத்துக்கு என்ன செய்திருக்கிறது, அம்மா?"

(மாப்பிள்ளை லக்ஷ்மீரதன் மாடிப்படி ஏறுகிறான். சற்றுப் பின்னால் இன்ஸ்பெக்டர் ஸர்வோத்தம சர்மா வருகிறார்.)

ரமா:—"இங்கே உங்களுக்கு ஏதாவது கொண்டுவந்து வைக்கலாமா, அப்பா?"

சாஸ்திரி:—"நாங்களெல்லாரும் வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறோம். இதோ இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார், அவருக்கு மட்டில் ஏதாவது கொண்டுவா, வாருங்கள், அப்படி நாற்காலியில் உட்காருங்கள்;—என்ன இருந்தாலும் இன்ஸ்பெக்டர் என்றால் பயமாகத் தானிருக்கிறது. இப்பொழுதுதான் மாப்பிள்ளையை ஒரு சிக்கலில் மாட்டி வேடிக்கைப் பார்த்து விட்டார். இன்னும் யார்மேல் புள்ளி வைத்திருக்கிறாரோ?"

இன்ஸ்பெக்டர் ஸர்வோத்தமசர்மா (பதுமை):—"பெரியவாள் என்னையே இப்படிச் சொல்லி விட்டால், அப்புறம் நானென்ன சொல்லுகிறது! உண்மையாகவே உங்கள் மேலுள்ள அபிமானத்தினாலல்லவா வலுவிலே விலங்கில் மாட்டிக் கொண்ட மாப்பிள்ளையை நண்பர் ஐயர் அவர்களுடைய ஸஹாயத்தினால் ஆபத்திலிருந்து தப்புவித்தோம். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. ஆபத்தில்லாத வேறு வேலையும் இந்த ஊரிலேயே கிடைத்து விட்டது. எல்லாம் உங்கள் பெண்ணின் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்."

(ரமா உள்ளே போகிறாள்; செங்கம்மா தோசை கொண்டுவந்து வைக்கிறாள்.)

இன்:—இப்பொழுதுதான் பேசிக்கொண்டே வந்தோம், மாப்பிள்ளையும் நானும். கூடிய மட்டும் ஒழுங்கான பையன்தான்; ஏதோ பேராசை பிடித்த பெரியவர்களுடைய தூர்ப்போதனையினால் சிறிது வழி தப்ப நேர்ந்தது. இனி அந்தமாதிரி காரியங்களில் பிரவேசிக்க மாட்டான் என்பது நிச்சயம். அந்த அம்மாளுக்கும் தன் ஒரே பிள்ளை எப்படியாவது நல்ல பெயரோடு காலந்தள்ளினாற் போதுமென்று பீதி ஏற்பட்டுவிட்டது.

சாஸ்திரி:—என்னவோ போங்கள், நிஜமாகவே எனக்கு வர வர எல்லாம் அலுத்துப் போய்விட்டது.

இன்:—(தோசையை மென்றுகொண்டே) எனக்குந்தானென்கிறேன்! வெற்றிலை போட்டுக்கொண்டால் பல் குத்தவேண்டியிருக்கிறது; 'பூட்ஸ்' நிஜார் போட்டுக்கொண்டு வண்டியில் உட்கார்ந்தால் நீட்டின கால் மடக்கமாட்டாமல் மரத்துப்போகிறது; திருடர்களோடு பழகினால் திருட்டுப்புத்தி வந்துவிடுகிறது; குழந்தைகளோடு பழகினால் பக்ஷணங் கேட்கிறதுகள்! போகிற இடத்தில் அகப்பட்டதைத் தின்கிறதென்று தலையிலெழுதிய ஒரு உத்யோகம் நேர்ந்துவிட்டால், ஏன் ஒருவனுக்கு விரக்தி வராது?

சாஸ்திரி :—நாங்களெல்லாருமே முழு யோக்யர்களாகிவிட்டால், நீங்கள் எல்லாம் பிழைப்பதெப்படி?

இன் :—ரொம்ப நல்லதாகப் போயிற்று! நாங்களும் உங்களைப் பார்த்து உங்களைப்போலவே பிழைக்கக் கற்றுக்கொள்ளுகிறோம். அப்பொழுது எங்களுக்கு இந்த அவப்பேரும் வேண்டாம், இந்த உத்யோகமும் வேண்டாம்.

வ. ஐயர் :—இப்பொழுதே பணத்தை வைத்துக்கொண்டு செலவழிக்கத் தெரியாமல் தங்களைப்போல் எத்தனை ஸாதுப்பிரகிருதிகள் நடமாடுகின்றன. அவர்களுடைய தொகை நீங்கள் சொல்வதுபோல் அதிகரித்தால் எங்களுக்குப் பிழைப்பு இன்னும் எளிதாகுமேயொழிய கஷ்டமாகாது. கிரயசாஸனம், மரணசாஸனம், பாகபத்திரம், அதிர்ஷ்டசோதனை, அகாலமரணநிதி, வார்சு நிர்ணயம் போன்ற காரியங்களுக்கு எங்கள் உதவி எப்போதும் தேவையாகும். எங்கள் தொழில் உலகத்துக்கேற்பட்ட தொழில்தான்...

சாஸ்திரி :—ஏற்படாதுதான் எது?

இன் :—என்னைப்பற்றினவரையில் நான் யாரையும் யோக்கியன் அயோக்கியன் என்று பிரிக்கத் தயாராயில்லை. (மேசைத்தட்டை ஒழித்துவிட்டு) பார்க்கப்போனால் எல்லாம் 'சகட்டி'ல் சரியாகத்தான் போகிறது.

தீக்ஷிதர் :—அப்படிச் சொல், ராஜா!

இன் :—(திரும்பிப் பார்த்து) யாரங்கே? தீக்ஷிதர்வாளா? ஜன்னல் கதவண்டை தாங்கள் நின்றதைப் பாராமற் சொல்லிவிட்டேன்; மன்னிக்கவேண்டும். இருந்தாலும் தாங்கள் சாஸ்திரிகளைப் படுத்தியிருக்கிற பாடுமட்டும் தெய்வத்துக்கே அடுக்காது! அவர் தெய்வந்தான்; நானயிருந்தால்.........

தீக்ஷிதர் :—அடுக்காமலா இப்படியெல்லாம் நடந்திருக்கிறது, அப்பனே? சாஸ்திரிகள் சொல்லுகிறதுபோல், ஜனங்களுக்கு தர்மாதர்மம் தெரியாமற் போகவில்லை; ஆனால் அதில் பிரவிருத்தி (ஆவல்) இல்லை; இதில் நிவிருத்தி (ஒழிவு) இல்லை. பிரவிருத்தியும் நிவிருத்தியும் அவரவரிடமிருந்தே ஜனிக்கிறதாக அவரவருக்கே தோன்றினாலும் அவ்வாறில்லை என்பதுதான் என் அநுபவத்திற்பட்ட உண்மை. இந்த உண்மையறிந்தவர்கள் அவசியம் நேர்ந்துவிட்டால் எதுவும் செய்வார்கள்.

சாஸ்திரி :—போதுமே, பையன்களுக்கு விளையாட்டு; தவளைகளுக்கு மரணம்.

தீக்ஷிதர் :—நீர் பேசுவது, தங்கம் உரைகல்லின்மேல் கோபிப்பதுபோலிருக்கிறது! தட்டான் மேலல்லவா கோபிக்கவேண்டும். உரைகல்லிற் படாத தங்கத்தைத்தான் யார் ஏற்றுக்கொள்வார்கள்? உரைகல் தங்கத்துக்குத் தோழனா, பகையா? கூனி ராமனுக்கு உபகாரியா, அபகாரியா?

வக்கீல் :—இந்த உபகாரத்தைச் செய்யும்படி உம்மை யாருங் கேட்டுக்கொள்ளவுமில்லை, செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இன் :—பிரதாப முதலியார் வீட்டில் நாமெல்லாம் ராம நாடகம் போட்டபொழுது கதையைக் கேட்டுவிட்டு, அவர் நம்மையெல்லாம் உதைத்து நொறுக்கி ராமனைக் காட்டிற்குப் போகவொட்டாமல் வழிமடக்கித் திருப்பிக்கொண்டுவந்து ஐந்து நிமிஷத்தில் அபிஷேகம் செய்விக்கவில்லையா?

தீக்ஷிதர் :—ரொம்ப ஸரி. அந்த ஆட்டம் யாருக்காவது பிடித்ததா? முதலாவது, ஸீதாராம வேஷக்காரர்களுக்கே பிடித்ததா? அந்தப் பிரதாப முதலியாரை நீங்களெல்லோரும் வையவில்லையா?

இன் :—தீக்ஷிதர்வாள்! நாமிருவரும் கிட்டத்தட்ட ஒரே கக்ஷிதான். நீங்கள் சொல்வதையெல்லாம் நான் ஒப்புக்கொண்டேன். நீங்கள் செய்வதென்னவோ முடிவிற் சிறந்த பயனைக் கொடுக்கலாம். ஆனால், அதற்குள் இங்கே ஆளுக்குப் பிராணன் போய்விடும்! மேலும், நீங்கள் அந்த முடிவான சுபபலனை உத்தேசித்து எதையும் ஆரம்பித்ததில்லை. ஆனால், அதற்கு மாறான பலனையே கோருகிறீர்கள் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். அதுதான் உங்கள்மேல் பாமர ஜனங்களுக்கு துவேஷம்.

தீக்ஷிதர் :—அப்படியுமில்லை அப்பனே! பிறரைக் கெடுக்கவேண்டுமென்று மட்டுமே கங்கணங் கட்டிக்கொண்டும் நாங்கள் ஒரு காரியத்தில் இறங்குவதில்லை. எங்களுக்கு ஏதோ சுருக்குவழியிற் சிறிது லாபங்கிடைக்குமென்று தோன்றித்தான் பிறரை அது எப்படி பாதிக்கிறது என்பதைப் பொருட்டாகக் கொள்ளாமல் வேலைக்கு ஆரம்பிக்கிறோம். ஆனால் முடிவில் நாங்களும் வெகுவாக ஏமாந்துதான் போகிறோம். கூனியும் கைகேயியும் முடிவில் என்ன திருப்தியடைந்தார்கள்?

செங்கம்மா :—(உள்கட்டில்) கேட்டாயா, ரமா, இந்தப் பிராம்மணன் சொல்லுகிறதை! நான் கைகேயியாம், எங்கள் அம்மா கூனியாம்! இப்படித்தான் ஒரு செய்தி ஊரெல்லாம் சொல்லிக்கொடுத்திருக்கிறார் என்கிறேன் இவர்! என் காதிலும் படுகிறது; உன் தலைத் தீபாவளிக்கு பக்ஷணம் செய்தபோது உன்னைக் கூடத்தில் விளக்கேற்ற அனுப்பிவிட்டுக் குஞ்சாலாடுவை முழுசு முழுசாகக் கூடையிலொன்று வாயிலொன்றாக மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டே யிருந்தாளாம், எங்களம்மா! இதென்ன இடும்பு இவருக்கு! இவர்தான் அடுப்பங்கரைக்கு வந்தாரா? அல்லது, நீதான் கூடத்திலிருந்து எட்டிப்பார்த்தாயா? இரண்டுமில்லை. எங்கம்மா உன் கல்கத்தாக் கடுதாசுகளை வேண்டுமானால் என்ன செய்தாளோ என்னவோ, குஞ்சாலாடுவைத் தொட்டாள் என்பது முழு அபாண்டம். இதெல்லாம் தெய்வந்தான் கேட்கவேண்டும்.

ரமா :—இத்தனைக்கும், விடிந்து கங்காஸ்நானம் விசாரிக்க இவர் நம்மகத்துக்கு வந்தபோது இவருக்கு நான் மைசூர்ப் பாகும் இரண்டு லாடுவுங் கொண்டுவந்து வைத்தேன். எப்படியிருந்தால் இவருக்கென்ன? என் புக்ககத்துக்காரர் திருப்தியாய்ப் போனால், சரிதானே!

தீக்ஷிதர் :—(கூடத்தில்) ஆனால், தனக்கே நேர்ந்த துக்கத்தின் கண்ணீருக்கும் ஸீதை காட்டிற்பட்ட துக்கத்தைக் கவி எடுத்துச் சொல்லும்பொழுது உண்டாகிற கண்ணீருக்கும் சொற்ப வித்தியாசமுண்டு. அது ஸமுத்திர ஜலம்போல் கசந்து உப்புக்கரிக்கும், இது இளங்கரும்புச் சாறுபோல் சற்றுத் தித்திக்கும். பற்பல அநுபவங்களிற் காணும் பற்பல ரஸங்களிலும் பாலில் வெண்ணெய்போல் மறைந்திருக்கிற கருணாரஸம் என்கிற அநுகம்பா (ஒற்றுணர்ச்சி) ரஸத்தைக் கவி கடைந்தெடுத்துக் கொடுக்கும்பொழுது ஸந்தோஷமாய்ப் பருகுவது மாத்திரம் என்ன தயாள ஹ்ருதயத்தைக் காட்டுகிறது? பிறர் துக்கத்தை அலங்கார விஸ்தாரத்தோடு, பக்கவாத்தியங்கள் முழங்க, நாடகங்களில் கண்ணாற் பார்ப்பதிலும் இவர்களுக்கேனோ இவ்வளவு இன்பம்? இதைத்தான் நீங்கள் மலர்ந்த மிருதுவான ஸஹ்ருதய ஹ்ருதய ஹ்ருதயம், ரஸக்ஞர் என்றெல்லாம் கொண்டாடுகிறீர்கள்.

தீக்ஷிதர் முகத்தில் தோன்றியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டு, சற்று விசிறிக்கொண்டார். "குழந்தாய்! கொஞ்சம் வெந்நீர்த் தீர்த்தம் கொண்டுவா" என்று உரக்கச் சொன்னார்.

ரமா வெள்ளிக் கூஜாவில் சுக்கு ஏலக்காய் போட்ட வெந்நீரும், மற்றொரு கூஜாவில் 'காபி'யும் கொண்டுவந்து வைத்தாள். எல்லோரும் பருகியானபிறகு, தீக்ஷிதர் ஆழ்ந்த குரலில் நிதானமாய் அழுத்தந் திருத்தமாய்ப் பேசத்தொடங்கினார் :—"ஆனாலொன்று, இவ்வுலகின் சரித்திரத்தில் சாம்பலைத்தின்று வெண்ணெயைப் பூசிக்கொள்ளும் புண்யவான்களாக நடிக்கத் தெரியாமல், வெண்ணெயைத் தின்று சாம்பலைப் பூசிக்கொள்ளும் முட்டாள் பட்டத்தையேற்று நாங்கள் செய்யும் கைங்கரியத்துக்கு, நன்றிக்குப் பதிலாக உலகத்தவரது சாபத்தையே ஏற்றுக் காலங்கழிக்க எங்களுக்கு விதித்திருக்கிற ஆண்டவனது ஆழமறியாத விந்தைநிறைந்த திருவுள்ளத்தைச் சிந்தையிலெப்படி நிறுத்துவது? இருட்டில் முன்னாற் சென்றவன் கிணற்றில் விழுந்தால் பின்னால் வருகிறவர்கள், "கிணறு, கிணறு ஜாக்ரதை!" என்று சொல்லிக்கொண்டு தம்மட்டில் ஒதுங்கிச் செல்லுகிறார்களேயொழிய, கிணற்றில் விழுந்தவனைத் தூக்கவருவாரைக் காணோமே. 'ஐயோ! அவனெங்கே காணோமே' என்று நினைக்கவும் இவர்களுக்குப் பொழுது கிடைக்கிறதில்லையே!

ஈசுவரன் நிஷ்பக்ஷபாதியாயிருந்தால் நாங்களிங்கே துணிந்தேற்றுக்கொள்ளும் அபவாதத்திற்குப் பரிஹாரம் வேறெங்கேயாவது காட்டித்தானாகவேண்டும் என்கிற ஒரே ஒரு ஆழ்நத திடநம்பிக்கை ஒன்றுதான் எங்கள் வாழ்க்கைக்கு ஓரளவு ஆறுதல் என்னலாம்."

தீக்ஷிதருடைய கறுத்துப் பெருத்த உருண்டை முகத்தில் தோன்றிய வியர்வைத்துளிகள், காளமேகம் உதிர்த்துச் செல்லும் நீர் முத்துக்கள்போல், ஒன்றொன்றாய் உதிர்ந்தன. கண்களிலும் சில துளிகள் தத்தளித்துக்கொண்டிருந்தன. ஆனால் முகத்தில் மட்டும் கொடுமை கடுமையொன்றுமில்லை. பூதேவியின் பொறுமையும் நிர்க்கதியாய் நிற்பவருடைய ஜீவனற்ற பார்வையுமே மேலிட்டிருந்தன. சிறிது நேரம் யாருக்குமே வாய்திறக்கத் தோன்றவில்லை. உள்கட்டில் முணுமுணுத்த குரல்கள்கூட நின்றுவிட்டன. பிறகு வக்கீல் ஐயர் கோர்ட்டில் ராஜி பேசுகிற குரலில் ஆரம்பித்தார் :—"ஏது, இன்றைக்கு தீக்ஷிதர் சரமாரியாகப் பொழிந்துவிட்டார்! இத்தனை நாளாய் எனக்குத் தெரியாதே!"

இன் :—ஆள் உள்ளேயிருக்கிறார் என்கிறேன், அப்படியே கதவைச் சாத்திப் பூட்டிவிடுங்கள்.

வக்கீல் :—இவர் மட்டும் இங்கிலீஷ் படித்திருந்தாரானால், நாமெல்லாரும் ஊரைவிட்டு ஓடவேண்டியதுதான்.

சாஸ்திரி :—அப்பொழுது இங்கிலீஷ் படித்தவர்களுக்கும் துஷ்காலமென்னலாம்; இப்பொழுது இங்கிலீஷ் படிக்காத எங்களைமட்டும் ஊரைவிட்டு ஓட்டுகிறார்."

பகவான் பத்தாவது அவதாரமெடுத்து யோகநித்திரைவிட்டெழுந்து இறகு பேனைப் போன்ற கத்தி ஏந்தித் தூயவெள்ளைக் காகிதம் போற் பறக்கும் "உச்சைச்சிரவஸ்" என்னும் தேவலோகக் குதிரைமீது பாய்கிறார்; குதிரையும் அவருக்கு முன்னதாகவே பாய்கிறது.

பகவான் :—(இடிமுழக்கம் போன்ற குரலில்) என்ன பூலோகத்தில் ஒரே அமர்க்களமாயிருக்கிறது இரைச்சல்? ச்சே, நம்ம தீக்ஷிதரா இவ்வளவு போடுபோடுகிறார்? எப்போது எங்கே கற்றுக்கொண்டார்? சற்று 'பசபச' என்றிருக்குமென்று சொல்லியனுப்பினேன். பரமஸாது சாஸ்திரிகள்கூடவல்லவா பிரமித்து விழிக்கிறார். (பகவான் ஒரு தீர்க்கச் சுவாஸம் விட்டுச் சோம்பல் முறிக்கிறார். காற்றும் மின்னலும் கோடையிடியும் முழங்குகிறது.)

சாஸ்திரி :—தீக்ஷிதரே! இன்றைக்கு நல்ல விருந்து; பகவானைக்கூட எழுப்பிவிட்டீர். 'இங்கே இந்நேரம் ஒழிவிடம் பார்த்து என்ன செய்துகொண்டிருந்தீர்களென்று கேட்டால், சத்காலக்ஷேபம்தான் செய்துகொண்டிருந்தோமென்று பொய்யில்லாமல், கூசாமல் திடமாய்ச் சொல்லலாம்.

தீக்ஷிதர் :—'பிரபோ! இதோ இன்றைக்கு வாங்கின சீட்டுக்கட்டு இன்னும் பிரிக்காமற் கிடக்கிறது, பாருங்கள்' என்று சாக்ஷிகூடக் காட்டலாம். 'பிரபோ! க்ஷமிக்கவேணும்' என்று கேட்டுக்கொண்டு, உள்ளதை உள்ளபடி சொன்னாற் போகிறது!

இன் :—நாங்களும் சதுரங்கப்பெட்டியைத் திறக்கவேயில்லை என்கிறோம்—

ஸரி, ஸரி Squad (தோழர்காள்!) Attention (உஷார்.) Right about turn (பின்புறம் திரும்புங்கள்;) Single file (ஒருவர் பின்னொருவராக) Quick march (கடுநடை.) துரை பார்வையிட வந்துவிட்டார்; அவரவர் இடத்தில் இல்லாவிட்டால் என்னவாகுமென்று எனக்கே தெரியாது! Now double up (இப்பொழுது ஒரு ஓட்டம் ஓடுங்கள்.)

எல்லாப் பதுமைகளும் பகவான் கைப்புத்தகத்தில் ஏட்டுக்கொருவராய் அவரவர் படங்களில் மறைகின்றன.

மாடியில் லக்ஷ்மீரதனும் ரமாவும் மின்னலைக் கண்டு ஜன்னலைச் சாத்துகின்றனர். கீழே செங்கம்மா மழைக்குமுன் தோசைக் கற்சட்டியைச் செங்கற்பொடியிட்டுத் தேய்த்துவிட்டுச் செங்கற்கட்டி அடுப்புக்குட் புகுந்துகொள்ளுகிறாள்.

ரமா :—(மெதுவாய்) விளக்கேற்றலாமா?

லக்ஷ்மீரதன் B.A.,:—ஏதுக்கு? மின்னலைப் பார்த்துவிட்டு விளக்கைப் பார்த்தால் ஒன்றுமே தெரியவில்லை.

ரமா :—ஊஸியைப் பார்த்துவிட்டு என்னைப் பார்ப்பதுபோலவா?

லக்ஷ்மீரதன் B.A., :—ஆம், ரொம்ப ஸரி! மின்னல் நம் கையிலகப்படாது, க்ஷணத்துக்குள் ஓடிப்போம்; பார்த்த கண்ணைப் பறிக்கும்; தொட்டவனைக் கொல்லும். விளக்கு அத்தனையும் எப்போதும் என்னுடையதே! இப்போது ஸரிதானா?

கிரிஜா (பதுமை) :—(அரைத் தூக்கத்தில், புரண்டுகொண்டே) இனிமேல் அப்பா கல்கத்தாவுக்குப் போகமாட்டாரே, அம்மா?

ரமா :—இல்லையம்மா. தூங்கு, தூங்கு! குழந்தையின் ஸ்வப்நத்தைக் கேட்டீர்களா?

லக்ஷ்மீரதன் B.A.,:—'தாபத்தைக் கொடுக்கிறதுங் கோடைதான், அதைத் தணிக்க மேகத்தை அனுப்புகிறதுங் கோடைதான்' என்றார் காளிதாஸகவி. இருந்தாலும் இந்தக் குளிர்ந்த நேரத்தில் அந்தப் பாபிகளை நினைக்கக்கூடாது; ரமா! நல்ல வேளையாய் பகவான் எழுந்தார், தொலைந்தது சந்தைக் கூட்டம்! இப்பொழுது நாம் ஸரியான இடத்தில்தானே இருக்கிறோம், ரமா?

ரமா:—இன்னுமென்ன, ஸந்தேஹம், நாதா.

# பீமனின் சந்திப்பு.

(பாஸ நாடகத்தைத் தழுவியது)

'குழற்கோவலன்'

## நாடகப் பாத்திரங்கள்,

[கேசவதாஸன் என்ற யூபக்கிராமத்து அந்தணனும், அவனது மனைவியும், மூன்று பிள்ளைகளும்; பாண்டு புத்திரனான பீமசேனனும், அவன் மனைவியான ஹிடிம்பை என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயும், மகனான கடோத்கசனும்.]

இடம் — ஓர் பெரிய காடு.

(கேசவதாஸன் என்ற ஓர் வயது முதிர்ந்த அந்தணன், தன் மனைவியுடனும், மூன்று புத்திரர்களுடனும் காட்டில் நுழைந்து போகிறான். அப்பொழுது இவர்களின் முன்பு சற்று தூரத்தில் கடோத்கசன் என்ற ராக்ஷஸன் அவர்களை நோக்கி வருகிறான்.)

கேசவதாஸன்:—(கடோத்கசனைப் பார்த்துவிட்டு பயந்து) அடடா! அதோ வருகிறவன் எவன்? தாம்பிரக் கம்பியைப் போன்ற தலைமயிரையும், நெருப்புப் பொறிபோன்ற கண்களையும், யானைபோன்ற நடையையும் கொண்டு, நம்மை நோக்கி யுகாந்த காலத்துக் கோபித்து வரும் மஹாருத்திரன்போல வருகின்றானே!

முதல் புத்திரன் :—(நடுக்கத்துடன்) தந்தையே! இந்த ராக்ஷஸனைப் பார்ப்பதற்குக்கூட எனக்கு பயமாயிருக்கின்றதே! இந்த உருவத்தைப்போல் நான் இதுவரையில் பார்த்தது மில்லை, இனிப் பார்க்கப் போவதும் இல்லை. இது மாதிரியான உருவத்தை, என் கடவுள்

சிருஷ்டிக்கிறார்! ஐயோ! இதோ! சமீபித்து விட்டானே! (பிராமணனிடம் ஒளிந்து நிற்கிறான்).

இரண்டாவது புத் :—ஐயோ! அப்பா! ஓடி விடுவோம், வாருங்கள். (தந்தையின் கையைப் பிடித்து இழுக்கிறான்).

மூன்றாவது புத் :—(அச்சமும், நடுக்கமும் கொண்டு) கஷ்டம், ஏன் இந்த காட்டிற்கு வந்தோம். நடப்பதே கஷ்டமாயிருக்கிறது. ஓடுவதெப்படி? பிராணனைவிட வேண்டியது தான்.

கேசவதாஸனின் மனைவி:—என்ன கொடுமை; இங்கு வந்தும் இவ்வளவு கஷ்டமாயிருக்கிறதே. இதுவரையில் மிருக உபத்திரவங்கள் இல்லையே என்று பார்த்தால், மிருகத்திற்கும் மேலான மனித மிருகம் வந்துவிட்டதே! எனக்கு, இக்காட்டில் நுழையும்போதே தெரியும், அப்பொழுதே இந்த பிராமணனிடம் சொன்னேனே! ஐயோ! (கடோத்கசன் சமீபித்ததும்) வாருங்கள்! ஓடுவோம்! வந்து விட்டானே! (எல்லோரும் ஓடுகின்றனர்).

கடோத் :—(எல்லோரும் ஓடுவதைப் பார்த்து) ஓ பிராம்மணா! நில்; நில் ஓடாதே. உன்னை அண்டினவர்களான மனைவி, மக்களைக் காப்பாற்ற சக்தியற்றவனே! கருடனின் காற்றால் தாக்கப்பட்ட பாம்புபோல, என்னிடமுண்டான பயத்தால் எங்கு ஓடுகிறாய்? போகாதே, நில். (ஓடிவருகிறான்).

கேசவ :—ஹா! என்ன கஷ்டமிது? ஓட முடியவில்லையே. புத்திரர்களே! நில்லுங்கள்; பிராணநாயகி! ஓடவேண்டாம், நில்லுங்கள். இவனோ, பேசுவதைப் பார்த்தால் அவ்வளவு கடுமையாக இல்லை; எப்படியாவது பேசித் தப்பித்துக்கொள்வோம். ஓடினாலும் இவன் நம்மைப் பிடித்துவிடுவான்; நில்லுங்கள்; என்ன ஆகிறது, பார்ப்போம். (எல்லோரும் நிற்கின்றனர்).

கடோத் :—(சமீபித்து, தனக்குள்) ஹா! என்ன இது! இவர்களோ தவத்திற் சிறந்த அந்தணர்கள்; அந்தணருக்கு மனத்தினால் கூட கெடுதல் எண்ணக்கூடாதே! கஷ்டம் நேர்ந்தால், அதை நிவர்த்திப்பதல்லவா நம்முடைய கடமை. என்ன செய்வது? செய்யக் கூடாத காரியத்தை இன்று நான் செய்தே தீரவேண்டும். இல்லாவிடில் அன்னைக்கு அபசாரம் செய்தவனாவேன்; அன்னையின் கட்டளையை மீறமுடியாது.

கேசவ :—ஏ நாயகி! முன்பே ஒரு முனிவர், 'காட்டில் ராக்ஷஸ ஹிம்சை அதிகம்; ஆனதால் மிகவும் ஜாக்கிரதையுடன் போகவேண்டும்' என்றாரே! அது பலித்துவிட்டதே. ஈச்வரா! நீ விட்ட வழிதான், இனி!

கே. மனைவி :—ஏது தங்களுக்குக்கூட தைரியம் வந்துவிட்டது. இந்த நினைப்பு முன்பே வந்திருக்கவேண்டும்; அதுவும் ஈச்வரன் விட்ட வழிதான்.

கேசவ :—வேறு என்ன பண்ணுவது? கடவுள் தான் துணை.

கே. மனைவி:—என்ன பண்ணுவதா? வேறு யாரையாவது உதவிக்குக் கூப்பிடுங்கள். இல்லாவிட்டால், ராக்ஷஸன் வாய்க்கு நாம் பக்ஷணம்தான்.

மு. புத் :—அம்மா! இங்கு யாரைத்துணை கூப்பிடுவது? இந்தக் காடானது மனோதிடம் வாய்ந்த புருஷர்களே சஞ்சரிக்கக்கூடியது. இங்கிருந்து என்ன சப்தம் செய்தாலும் வெளியில் கேட்காது. பறவைகளின் ஓசையும், மிருகங்களின் ஓசையுமே நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. ஓடுவோம் என்றால், வெளியேறுவதற்கு வழி தெரியவில்லை; ஓடினாலும் பிடித்து விடுவான். என்ன பண்ணுவது?

கேசவ :—நாயகி! பயப்படாதே; புத்திரர்களே! பயம் வேண்டாம். 'மனோதிடம்' என்ற சொல்லைக் கேட்டதும் பயம் நீங்கிவிட்டது. இங்குதான் பாண்டவர்கள் இருப்பார்கள்; கவலை வேண்டாம்.

மு. புத்தி :—தந்தையே! பாண்டவர்கள் இங்கில்லை என்பதாகத் தெரிகிறது.

கேசவ :—(மனமுடைந்து) ஏன்?

மு. புத்தி :—(ஏக்கத்துடன்) தௌம்யர் நடத்தும் யாகத்துக்கு சென்றிருப்பதாக முன்பே ஒரு முனிவர் சொன்னார்.

கேசவ :—ஐயோ! நம் துரதிருஷ்டம்! (ஏக்கத்துடன்) எல்லோரும் ராக்ஷஸனுக்கு பலி தான்.

மு. புத்தி :—தந்தையே! ஆனால் எல்லோரும் போகவில்லை. ஆசிரமத்தின் பாதுகாப்பிற்காக பீமன் (மத்யமன்) மட்டிலும் இங்கு இருக்கிறானாம்.

கேசவ :—என்ன பீமனா? அந்த வீரசிரேஷ்டனான மத்யமன் ஒருவனிருந்தாலே போதும்! பாண்டவர்கள் ஐவரும் இருந்ததுபோலவே ஆகும்!

மு. புத்தி :—அவனும் இப்பொழுது தேகப் பயிற்சி செய்வதற்காக எங்காவது தனியிடத்திற்கு சென்றிருப்பான்.

கேசவ :—அட பாவமே, கடவுள் என்னை நிமிஷத்திற்கு நிமிஷம் மட்டம் தட்டுகிறாரே. என்ன விபரீதம்! எப்படியாகிலும் பீமனைக் கண்டு பிடிக்கலாம். (ராக்ஷஸன் பக்கத்தில் வந்துவிட்டான்; அவனை நோக்கி இரக்கமுடன்) ஐயா! ஏன் எங்களை நிற்கச்சொன்னீர்கள்? எங்களுக்கு விடுதலையுண்டா இல்லையா?

கடோத் :—சமயம் நேர்ந்தால் உண்டு.

கேசவ :—எந்தச் சமயம்?

கடோத் :—ஓ பிராமணரே! என் தாயார் உபவாசம் முடித்துப் பாரணை செய்ய, முதலில் யார் தென்பட்டாலும் அந்த மனிதனைக் கொண்டு வந்துவிடு என்று சொன்னார்கள். அதன்படி தங்களைக் கண்டேன்; உங்கள் ஐந்து பேர்களில் யாராவதொருவர் எனக்கு வேண்டும். பெண் கூடாதாகையால், நீராவது, புத்திரரில் யாராவது ஒருவர் என்னுடன் வந்துவிடுங்கள்.

கேசவ :—ஏ! ராக்ஷஸா? நல்ல புத்திசாலிகளானவர்களும், என்னால் மிக்க அன்புடன் வளர்க்கப்பட்டவர்களுமான இப் புத்திரர்களில் எந்த ஒருவனையும் கொடுக்க முடியாது. எனது உயிர் இருக்கும் வரையில், புத்திரர்களை நான் விடமாட்டேன். யாராவது பிள்ளையைக் கொடுத்துவிட்டு நிம்மதியாய் இருப்பார்களா? இந்த வார்த்தையை இன்னொருமுறை என் காதில் படும்படி சொல்லாதே.

கடோத் :—(மனதிற்குள்) பரிதாபமான நிலைமையாயிருக்கிறதே! (வெளிப்படையாக) ஓய் பிராமணரே! மைந்தர்களில் யாராவதொருவரைக் கொடுக்காவிட்டால் நீர்வாரும். இல்லாவிட்டால் குடும்பத்தோடு நாசமடைய நேரிடும்.

கேசவ .—(மனதிற்குள்) வேறு வழியில்லை; நான்தான் செல்ல வேண்டும். (வெளிப்படையாக) ஏ, மூர்க்கா? கிழவனான நான் வருகிறேன். என் புத்திரர்களுக்காக எனது உயிரை விட்டு அவர்களைக் காப்பாற்றி என் கடமையைச் செய்கிறேன்.

கேச. மனைவ :—நாதா? தாங்கள் போவது தகாது. பெண்களுக்குயிராயுள்ளது மாங்கல்யமே, அதில்லாமல் அவர்கள் எதற்காக பூமியில் இருத்தல் வேண்டும். ஆதலால் கணவனைக் காப்பாற்றுவது என் கடமை. நானே செல்கிறேன், தாங்கள் போவது கூடாது. நான் இவனால் நல்ல புண்ணியமுடையவளாவேன்.

கடோத் :—அம்மா? பெண்கள் கூடாதென்று தான் முன்பே சொன்னேனே. நினைவில்லையோ? நாழியாகிறது; சீக்கிரம்.

முதல் புத் :—தந்தையே? தாய் தந்தையர்களைக்காப்பாற்றுவது, எனக்குக் கடமை. ஆனதால் நானே செல்கிறேன், உத்தரவு கொடுங்கள்.

இரண்டாவது புத் :—தந்தையே, மூத்த புத்திரன் பித்ருக்களில் கடமையைத் தீர்க்கவேண்டியவன். மூன்றாமவனாகியவனோ சிறுவன். ஆதலால் மத்யமனாகப் பிறந்த நானே செல்கிறேன். இந்த பாக்யத்தை எனக்கு அளியுங்கள், உத்தரவு கொடுங்கள்.

மூன்றாவது புத் :—தந்தையே! மூத்தவர்களைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. நானே போகிறேன்; உத்தரவு கொடுங்கள்.

முதல் புத்:-(கடைசித் தம்பியைப் பார்த்து) குழந்தாய், அப்படியல்ல தகப்பனுக்கு வரும் சகல துன்பங்களையும் மூத்த மகனே தீர்க்க வேண்டும். மூத்த மகனாலேயே தகப்பன் தன் பத்தைக் கடக்கிறான். ஆதலால் நானே செல்கிறேன்.

கேசவ :—(மூத்த குமாரனைப் பார்த்து) அப்பா? உன்னை விட்டு நான் கணநேரமும் பிரியமாட்டேன். ஆதலால் நீ போவது கூடாது. உன்னை அனுப்ப எனக்கு விருப்பமில்லை.

கேச. மனைவி:—மூன்றாமவனாகிய கடைசி பிள்ளை எனக்கு முக்கியம். (கணவனைப்பார்த்து) உங்களுக்கு எப்படி மூத்தமகனோ, அப்படியே மூன்றாமவனும் எனக்குப் பிரியமானவன். ஆதலால் நான் இவனை விடமாட்டேன்.

இரண்டா. புத் :—ஹா? என்ன ஆச்சரியம்! பெற்றவர்களுக்குப் பிரியனாகாத நான் யாருக்கு பிரியனாகப்போகிறேன்.

கடோத்:-(இதைக் கண்டு ஆச்சர்யத்துடன்) அப்பா? நான் உன்னிடம் பிரியம் காட்டுகிறேன், என்னுடன் வா, சீக்கிரம் வா.

இரண்டா. புத்:—அப்படியே, இவர்களைக் காப்பாற்றுவதால் நான் கிருதார்த்தனானேன்.

கடோத் :—(வியந்து) ஆஹா? இச்சிறுவனுக்கு பெற்றோர்களிடத்தில் எவ்வளவு வாஞ்சை?

இரண்டா. புத் :—(தந்தையைப் பார்த்து நமஸ்கரிக்கிறான்) தந்தையே, விடைபெற்றுக் கொள்கிறேன்.

கேசவ :—அப்பா ? புத்திரனே உன் உயிரை நீ பொருட்படுத்தாமல் எங்களுக்காக பிராணத்தியாகம் செய்வதால், நீ பிரம்மலோகமடைவாய்.

(தாயை நமஸ்கரிக்கிறான்)

கேசவ. மனைவி:—அப்பா? நீண்டகாலம் ஜீவிப்பாயாக!

இரண்டா. புத் :—ஆசீர்வாதம். தங்கள் அனுக்ரஹம். (கடோத்கசனைப் பார்த்து) ஐயா! நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

கடோத் :—சீக்கிரம் சொல், எனது அன்னைக்கு, ஆஹாரகாலம் சமீபித்து விட்டது.

இரண்டா. புத்:—ஐயா! ரொம்ப தாகமாய் இருக்கிறது. கொஞ்ச தூரத்திற்கு அப்பால் நீர் நிலை இருக்கிறது. தண்ணீர் சாப்பிட்டு சீக்கிரம் வந்து விடுகிறேன், உத்தரவு கொடுக்க வேண்டும்.

கடோத் :—(தனக்குள்) இதென்ன பாபம். (வெளிப்படையாக) ஸரி, சீக்கிரம் சென்று வா.

இரண்டா. புத்:—அப்படியே!

(நீர் நிலையைநோக்கி புத்திரர்களுள் மத்யம புத்திரனாகிய பிராமணச் சிறுவன் செல்கிறான். நீண்ட நேரமாகியும் வரவில்லை.)

கடோத் :—அடடா, பையன் போனான், இன்னும் வரவில்லையே. அம்மாவுக்கு ஆகார காலம் வந்துவிட்டதே என்ன செய்வது? ஓய் பிராமணா? பையனைக் கூப்பிடுமையா? இன்னும் வரவில்லை. சீக்கிரம்.

கேசவ :—ஏ, ராக்ஷஸனே, என்ன இவ்வளவு கோபித்துக் கொள்கிறாய், தண்ணீர் சாப்பிட்டுவிட்டுத்தானே வரவேண்டும்.

கடோத் :—மன்னிக்கவேண்டும்! இது என் இயல்பு. கோபமாய்ப் பேசவில்லை; சீக்கிரம் கூப்பிடுங்கள்; அல்லது அவன் பெயரையாவது சொல்லுங்கள்; நான் கூப்பிடுகிறேன்.

கேசவ :—(தனக்குள்) சிவ சிவ! இதென்ன குலத்தில் ராக்ஷஸனான இவனிடம் எப்படி நம் புத்திரனின் பெயரைச் சொல்வது? சொன்னால் மஹாபாபமே. சரி, இருக்கட்டும். வேறு அறிகுறியால் அவனைக் கூப்பிடுவதற்கு தகுந்த பெயர் சொல்வோம் (வெளிப்படையாக) ஏ ராக்ஷஸா! எனது அந்த மைந்தனது பெயர் ' மத்தியமன் ' என்பது.

கடோத் :—அவனுக்குத் தகுந்த பெயர் தான். (உரக்க) ஏ மத்தியமா! மத்தியமா!! மத்தியமா!!!

[சற்று தூரத்தில் தேகப்பயிற்சி செய்துகொண்டிருந்த மத்தியமனான பீமன், இந்த சப்தத்தைக் கேட்கிறான்.]

பீமன் :—இது யாருடைய குரல்? ஏதோ பழக்கமான மனிதனின் குரல்மாதிரியிருக்கிறது. ஒருவேளை அர்ச்சுனனாக இருக்கலாமோ? அவன்தான் யாகத்திற்கு சென்றுவிட்டானே? தனியான இடத்தில் வந்து தேகப்பயிற்சி செய்வோமென்றால், இங்கும் யாரோ ஒருவன் நம் பெயரை வெகு அலக்ஷியத்துடன் கூப்பிடுகிறானே? யாரவன் இப்படி கூப்பிடுபவன்?

கடோத் :—(மீண்டும்) ஏ மத்தியமா! மத்தியமா!! மத்தியமா!!! இன்னும் தாமதமா? சீக்கிரம் இங்கு வா.

பீமன் :—அடேடா! இதேதடா? வரவரச் சப்தம் அதிகமாக ஒலிக்கின்றதே! இருக்கட்டும், பார்ப்போம். (நடந்து வந்து செடிமறைவில் நின்று கடோத்கசனைப் பார்க்கிறான்.) ஆஹா! உருவத்திற்குத் தகுந்த ஒலிதான். இந்த த்வனி, இவனுக்கு ஏற்றதுதான்; என்ன கம்பீரமான தோற்றம்! துதிக்கையைப்போன்ற கைகளும், அகன்ற மார்பும் உத்தமவீரன் என்பதைத் தெரிவிக்கின்றன.

கடோத் :—ஹே மத்யமா! சீக்கிரம் வருகிறாயா, இல்லையா? மத்தியமா! மத்தியமா!!

பீமன் :—சரிதான். நான் போய்ப் பார்க்கிறேன். (கடோத்கசன் முன்பு சென்று நின்று) இதோ வந்துவிட்டேன், எதற்காகக் கூப்பிட்டாய்?

கடோத் :—(தனக்குள்) இதென்ன விந்தையாயிருக்கின்றதே! இவன் மத்தியமனல்லவே! இவனைப் பார்த்தால் நமக்கு ரொம்ப நெருங்கினவன்போல் தோன்றுகிறதே. (வெளிப்படையாக) நான் மத்தியமனையல்லவா கூப்பிட்டேன். நீர் யாரையா? உம்மை யார் கூப்பிட்டது?

பீமன் :—அதனால்தான் வந்தேன்; நான் தான் மத்தியமன்.

கடோத் :—தங்கள் பெயரும் மத்தியமன் தானோ?

பீமன் :—என்ன? எனக்கும் அப்பெயர் தானா? நன்றாயிருக்கிறது? மத்தியமன் என்ற பெயர் என்னையன்றி வேறு எவருக்கும் கிடையாதே? பிறப்பிலும், எனது ஸஹோதரர்களின் முறைமையிலும், பஞ்சபூதத்திலும், மற்ற எல்லா காரியங்களிலும், நான் தான் மத்தியமன். அப்பெயர் எனக்கேதான் உரிமை.

கேசவ :—(அதைப் பார்த்து மகிழ்ந்து) (தனக்குள்) ஓஹோ, நான் பெயரைச் சொல்லக்கூடாதே என்று ஸஹோதரர்களில் மத்தியமனாதலால் எனது புத்திரனுக்கு மத்தியமன் என்று பெயர் சொன்னேன். அது ரொம்ப ஸௌகர்யமாகிவிட்டதே! பீமனாகிய மத்தியமனல்லவா வந்து விட்டான். இனி நமக்கேன் கவலை?

(இரண்டாவது அந்தண புத்ரனாகிய மத்தியமன் தண்ணீர் அருந்திவிட்டு அங்கு வருகிறான்.)

இரண்டா. புத் :—ஐயா! இதோ வந்து விட்டேன், மன்னிக்கவும்.

கடோ :—இவ்வளவு நேரமா? வா? இப்படி.

கேசவ :—(பீமனை நெருங்கி) பீமரே! எங்களைக் காப்பாற்ற வேண்டும். புத்திரன் அகப்பட்டுக் கொண்டு விட்டான்.

பீமன் :—பிராமணோத்தமரே! நமஸ்காரம். பயப்படவேண்டாம்.

கேசவ :—பீமரே, நீர் வாயுவைப்போல என்றும் ஜீவித்திருப்பீராக.

பீமன் :—பிரபோ? என்ன விஷயம்? ஏன் பயப்படுகிறீர்?

கேசவ :—பீமரே, சற்று நான் சொல்வதைக்கேளும்:—நான், யூபக்கிராமத்தில் வசிப்பவன். எனது பெயர் கேசவதாஸன். வேதங்களைக் கற்றவன். என் தம்பி உத்தியாமக் கிராமத்தில் இருக்கிறான். அங்கு அவனுடைய புத்திரனுக்கு உபநயனம். அதற்காகப் போகப் புறப்பட்டேன். நடுவழியில் என்னையும், புத்திரர்கள் மனைவி இவர்களையும் இந்த ராக்ஷஸன் கண்டு கொல்லுவதற்காக முயற்சிக்கிறான். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.

பீமன் :—பயப்பட வேண்டாம், நான் காப்பாற்றுகிறேன். (கடோத்கசன் மத்தியமச் சிறுவனை அழைத்துக் கொண்டு புறப்படுகிறான். இதைக் கண்ட பீமன்) ஏ ராக்ஷஸ ஸிம்மமே; நில். அவ் வந்தணச் சிறுவனை விட்டுவிடு. ஒரு குற்றமும் புரியாத இவர்களை ஏன் துன்புறுத்தி இவனைக் கொலை செய்யப் போகிறாய்? எவ்விதக் குற்றம் செய்த போதிலும் அந்தணர்கள் கொல்லத் தகுந்தவரல்லர். ஆகையால், விட்டுவிடு.

கடோத் :—உன்னை யார் கேட்டது? இவனை விடமுடியாது. நீ சொன்னதனால் நான் விட்டுவிட மாட்டேன். தடை செய்யாமல் திரும்பிச் செல்.

பீமன் :—(ஆச்சரியமடைந்து, தனக்குள்) என்ன தைரியம்! இவன் சிறந்த வீரனே! இவன் பாண்டவர்களாகிய எங்களுக்குள் யாரைப்போலிருக்கிறான்? ஆமாம், அபிமன்யுவின் ஞாபகம் வருகிறது. அர்ச்சுன புத்திரனாகிய அபிமன்யுவே இவனுக்கு நிகர். (வெளிப்படையாக) ஏ ராக்ஷஸவீரனே? நான் சொல்வதைக்கேள்; அச்சிறுவனை விட்டு விடு.

கடோத் :—விடமுடியாது. என் தந்தையே வந்து விட்டுவிடு என்றாலும் விடமாட்டேன். என் அன்னையின் உத்தரவு அப்படியிருக்கிறது; நான் என்ன, செய்யமுடியும்?

பீமன் :—(தனக்குள்) ஆஹா! என்ன! தாயின் கட்டளை! தாயைக் காப்பாற்றுவதில் எவ்வளவு அன்பு! (வெளிப்படையாக) ஏ ராக்ஷஸா! அன்னை என்றனையே; அவ்வன்னையின் பெயர் என்ன, சொல்?

கடோத் :—என் அன்னையா? பாண்டவ திலகனாகிய பீமசேன மஹாராஜாவின் மனைவி, ஹிடிம்பை என்று பெயர்.

பீமன் :—ரொம்ப ஸரி. (தனக்குள் மனம் மகிழ்ந்து) ஹிடிம்பையின் புதல்வனா? அதனால் தான் இவ்வளவு தைரியம், பலம், உருவம், பேச்சு—எல்லாம் நம்மை ஒத்திருக்கிறான். (வெளிப்படையாக) ராக்ஷஸா! இவனை விட்டு விடு.

கடோத் :—அது முடியாத காரியம்; வீணுகத் தடை செய்யாதே!

பீமன் :—அந்தணரே! உமது புத்திரனை நீர் அழைத்துக்கொள்ளும். நான் அவனுடன் போகிறேன்.

இரண்டா. புத்தி :—ஐயா! அப்படி ஒன்றும் வேண்டாம். நான் ஒப்புக்கொண்டு விட்டேன்.

பீமன் :—அப்பா! இது தகாது! க்ஷத்திரியனாகிய நானிருக்க உன்னை விடமாட்டேன். நீ உன் தந்தையிடம்செல்; எங்களுடைய கடமை உங்களைக் காப்பாற்றுவது. (மத்தியமன் தந்தையிடம் செல்கிறான்)

கடோத் :—ஓஹோ! க்ஷத்திரியனா? அதனால் தான் இவ்வளவு கர்வம் நிறைந்த பேச்சு. இருக்கட்டும், இவனைக் கொன்று சிறுவனைக் கொண்டுபோகிறேன். (சிறுவன் தந்தையிடம் நிற்பதைக் கண்டு) யார் சிறுவனை அங்கழைத்துச் சென்றது?

பீமன் :—நான்தான்.

கடோத் :—நீதானா? ஆனால் அவனுக்குப் பதிலாக, நீ வா.

பீமன் :—சக்தியிருந்தால் என்னை அழைத்துச் செல்; என்னால் வரமுடியாது.

கடோத் :—(கோபச் சிரிப்புச் சிரித்து) ஓஹோ! என்னை யாரென்று நீ அறியவில்லை போலும்?

பீமன் :—நன்றாக அறிவேன். நீ எனக்கு சிசுதானே!

கடோத் :—(கோபம் கொண்டு) என்ன, யாரைப் பார்த்து என்ன உளறுகிறாய்? யார் யாருக்கு சிசு? ஏதாவது சித்தப்பிரமை உண்டோ?

பீமன் :—(தான் சொன்னதை மறைத்து) உன்னை நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே! கோபங்கொள்ளாதே; குடிகள் எல்லாம் க்ஷத்திரியர்களுக்குக் குழந்தைகள் அல்லவா? அந்த முறைப்படி நீ என் சிசுத்தானே என்று சொன்னேன்.

கடோத் :—ரொம்ப நன்றாயிருக்கிறது. நீ சொல்வது எப்படியிருக்கிறதென்றால், கொல்லன் பட்டரையில் ஊசி விற்பதுபோல் இருக்கிறது.

பீமன் :—என்ன? ஏதோ சிலேஷையாகப் பேசுகிறாயே. விஷயம் என்னவென்று விளங்கவில்லையே.

கடோத் :—சிலேஷை ஒன்றுமில்லை; நானே க்ஷத்திரிய புத்திரன். அப்படியிருக்க என்னை உனக்கு சிசுவென்று உளறுகின்றனையே! சிறந்த க்ஷத்திரியனான பீமராஜனின் புதல்வனல்லவா யான்? நீ இப்படிப் பேசுவது பயந்தவர்களின் பேச்சாயிருக்கிறது.

பீமன்:—(மனம் மகிழ்ந்து) அப்பா! எனக்கு பயம் என்பது எப்படியிருக்குமென்றே தெரியாது. உன்னிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்.

கடோத் :—சரி, கற்றுத்தருகிறேன்; ஆயுதம் எடுத்துக்கொள்.

பீமன் :—(கையை நீட்டி) அப்பா! இது தான் எனக்கு எல்லாவற்றினும் சிறந்த ஆயுதம்; இதை ஜயிக்க யாவராலும் முடியாது.

கடோத் :—ரொம்ப நன்றாயிருக்கிறது; இப்படிச் சொல்வது என் தந்தை பீமசேனருக்கு மட்டிலும் தான் தகும்.

பீமன் :—(மனம் மகிழ்ந்து) ஓஹோ! அப்படியா? அந்த பீமனை பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன், ஸுப்ரமண்யர், யமன் என்ற இவர்களுக்குள் யாருக்கு ஒப்பிடலாம்?

கடோத் :—இந்த ஆறுபேரும் சேர்ந்த கூட்டத்திற்கே அவர் ஒப்பாவார். நீ அவர் பெயரைக் கேட்டதில்லைபோலும்.

பீமன் :—நீ சொல்வது பெரும் பொய்யாக அல்லவா இருக்கிறது.

கடோத் :—(கோபம் கொண்டு) உனக்கு எவ்வளவு துணிவிருந்தால், இப்படிப் பொய் என்று என் தந்தையை என் முன்பே அவமதிப்பாய்? இதோ நீ யமலோகம் போகப்போகிறாய், பார்! (பெரிய ஒரு மரத்தைப் பிடுங்கி பீமனை அடிக்கிறான்; இதனால் பீமன் அசையாமல் இருப்பதைப் பார்த்து ஒரு மலையைத் தூக்கிப் போடுகிறான்; அதனாலும் அசையவில்லை; உடனே மிக்க ஆச்சரியமடைந்து நிற்கிறான்.)

பீமன் :—அடே! உன்னால் முடிந்ததைச் செய்துபார்! யானைக்குக் கோபம் வருமானால் வேங்கையுடன் சண்டை செய்யப்போகுமா, என்ன? அதற்குத் தகுந்த யானையிடமே போகும்.

கடோத் :—இதோ பார்! குத்துச்சண்டையில் உன்னை ஜயிக்கிறேன். (வலுவில் சென்று பீமனை இறுகக்கட்டுகிறான்)

பீமன் :—உன் பலம் கொண்டவரையில் கட்டிக்கொள்.

கடோத் :—எங்கே, திமிறமுடியுமானால் திமிறிப் பார்!

பீமன் :—உன் கட்டு தளராமல் பார்த்துக்கொள். (தனக்குள், கடோத்கசன் பலத்திற்கு ஆச்சரியப்பட்டு,) ஏ தூரியோதனா! உன் பகைவர்கள்பக்கம் பலம் அதிகரித்து வருகின்றது. இதுபோன்றவன் இருக்கிறான் என்பதை மறந்துவிட்டாய்போலும். ஜாக்கிரதை! (திடீரென்று கடோத்கசன் கட்டினின்று மீறிவிடுகிறான்).

கடோத் .—(ஆச்சரியப்பட்டு) ஏ வீரா! இப்பொழுது நீ வெற்றியடைந்தபோதிலும், நான் உன்னைச் சும்மாவிடமாட்டேன். என் தாயினிடம் போகாமலிரேன். இதோ பார், மாயா பாசத்தை ஏவுகிறேன். (என்று ஜபம் செய்து ஏவுகிறான்.)

பீமன் :—ஏ தைர்யவானே, உன் வலிமை எனக்குத் தெரியும்; அதற்கு நான் அடங்கினவன் அல்ல. மாயாபாசத்தைமீற எனக்கும் மந்திரசக்தி உண்டு. (மனதில் மந்திரம் ஜெபித்து மாயாபாசத்தை வென்றுவிடுகிறான்).

கடோத் :—(ஆச்சரியமடைந்து, தனக்குள்) என்ன, எவராலும் மீறமுடியாததான மாயா பாசத்தையுமல்லவா இவன் மீறிவிட்டான். இவனைக் கண்டால், எனக்கு ஏதோ நெருங்கின பந்துவைப்போல் தெரிகிறது. இவனிடம் நம் வேலை பலிக்காது; பணிந்து நடத்தலே முறையாகும். (வெளிப்படையாக) ஏ வீரபுருஷரே! உம்மால் நான் வெல்லப்பட்டேன். ஆனால், தாங்கள் கூறிய மொழிப்படி, என் தாயிடம், அந்தணச் சிறுவனுக்குப் பதிலாக வரவேண்டும்.

பீமன் :—(சிரித்து) இந்தப் பணிவுடன் முன்பே சொல்லியிருந்தால், அப்பொழுதே யாதொரு தடங்கலுமில்லாமல் வந்திருப்பேனே! இப்பொழுதுதான் தெரிந்ததோ? ஸரி, வருகிறேன்; முன்செல். (அந்தணர் முதலியோரையும் அழைத்துக்கொண்டு போகிறான்; எல்லோரும் ஹிடிம்பையின் வீடு செல்கின்றனர்.)

கடோத் :—(பீமனைப் பார்த்து) ஐயா! இங்கேயே இரும்; உள்ளேசென்று உங்களுடைய வரவைத் தாயிடம் தெரிவிக்கிறேன். (ஹிடிம்பையிடம் சென்று) அம்மா! நமஸ்காரம். ஒரு மனிதனை ஆஹாரத்திற்கு கொணர்ந்து, வாசலில் நிறுத்தியிருக்கிறேன்.

ஹிடிம்பை :—மகனே! ரொம்ப நல்லது, நீ சிரஞ்சீவியாய் இருப்பாயாக! அந்த மனிதன் எப்படிப்பட்டவன்?

கடோத் :—அம்மா! வாயினால் மனிதன் என்று சொல்லலாமே தவிர, வலிமையைப் பார்த்தால் அவனுக்கு இணை ஒருவருமேகிடையாது. தாங்கள் பீமசேனராஜரைப்பற்றிச் சொன்ன அமைப்பெல்லாம் பொருந்தியிருக்கிறது. அதனால், அவருக்கிணையாக மட்டிலும் சொல்லலாம்.

ஹிடிம்பை :—ஓஹோ! அப்படியானால் அம் மனிதன் அந்தணனா? க்ஷத்திரியனா?

கடோத் :—க்ஷத்திரியன் என்று சொல்கிறான்.

ஹிடிம்பை :—(கொஞ்சம் ஐயம் கொண்டு) அப்படியானால் நானே வந்து பார்க்கிறேன்; நீயும் வா. (பீமனிருக்குமிடம் வருகின்றனர்; பீமனை ஹிடிம்பை பார்க்கின்றாள்.)

ஹிடிம்பை :—(பீமனை பார்த்துவிட்டு, ஆச்சரியங் கொண்டு, பீமனைச் சுட்டிக்காட்டி) கடோத்கசா! இந்த மனிதரையா நீ அழைத்துக்கொண்டு வந்தாய்?

கடோத் :—ஆமாம். ஏன்? இவர் யார்?

ஹிடிம்பை :—குழந்தாய்! அறியாமையினால் செய்துவிட்டாய்; போனதுபோகட்டும்; இவர் யார் தெரியுமா? இப்பொழுது தெரிந்துகொள். (பீமனுக்கு நமஸ்காரம் செய்கிறாள்.)

பீமன் :—ஆஹா! இன்றையதினம் மிக்க மங்களகரமான தினமாயிற்று. (ஆசீர்வாதம் செய்கிறான்.)

ஹிடிம்பை :—கடோத்கசா! என்ன நிற்கிறாய்? இன்னும் தெரியவில்லையா?

பீமன் :—ஏ சிசு! நான் உன் தந்தைதான். முன்பே சொல்லவில்லையா? நமஸ்காரம் செய்து, ஆசீர்வாதம் பெற்றுக்கொள். நான்தான் பீமன், தெரிந்ததா?

கடோத் :—(ஆச்சரியமடைந்து) தந்தையே! நமஸ்கரிக்கிறேன். சிறுபிள்ளைத்தனமாகச் செய்த குற்றத்தை மன்னியுங்கள்.

பீமன் :—(அவனைக் கட்டிக்கொண்டு) குழந்தாய்! நீ செய்ததெல்லாம் எனக்கு இன்பத்தையே தந்தன. என்னுடையவும், எனது ஸஹோதரர்களுடையவும் ஆகிய பூர்ண ஆசீர்வாதம் உனக்கு உண்டு. சிரஞ்சீவியாய் இருக்கக்கடவாய்.

கேசவ :—(இதைப் பார்த்து) ஹா! பீமசேனரின் மகனா கடோத்கசன்?

பீமன் :—குழந்தாய்! பிராமணரை நமஸ்காரம் செய். (கடோத்கசன் நமஸ்காரம் செய்கிறான்.)

கேசவ :—தந்தையைப்போலவே ஆகக்கடவாய்.

கடோத் :—தங்கள் ஆசீர்வாதம்.

கேசவ :—ஐயா, பீமசேனரே! எங்கள் குலத்தைக் காப்பாற்றியதோடு உம் குலத்திற்கும் கீர்த்தி தேடிக்கொண்டீர். நல்லது, நாங்கள் ஊர்போய் வருகிறோம்.

பீமன் :—சுவாமி! தாங்கள் என்ன இவ்வளவு சீக்கிரம் கிளம்பிவிட்டீர்கள். தங்களால் தானே இவர்களின் சந்திப்பை எதிர்பாராத விதமாய் அடைந்தேன்; என் ஆச்சிரமம் பக்கத்திலேதான் இருக்கிறது; சற்று இளைப்பாறிப் போகலாமே.

கேசவ :—பீமசேனரே! எங்களுயிரைக் கொடுத்ததே பெரிய உபகாரம். அவசரமாகச் செல்லவேண்டும்; நாங்கள் போய்வருகிறோம். உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். (அந்தணன் மனைவிமக்களுடன் புறப்படுகிறான்).

பீமன் :—(அவனைப் பார்த்து) அப்படியே; தங்கள் சித்தம். ஹிடிம்பா! குழந்தாய்! வாருங்கள்; கேசவதாஸரை கொஞ்சதூரம் வழியனுப்பி வருவோம். (போகிறார்கள்)



# கீதப் பகுதி

## மாரிமுத்துப் பிள்ளை.

(காலஞ்சேன்ற இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை பண்டித ச. சோமசுந்தர தேசிகர்.)

தில்லை விடங்கன் தனில்வாழும் தேய்வப்பெருமா டிருப்புதல்வன்
தெளிந்தமனத்தன் முத்தமிழோர் தினமும் புகழும் குறுமுனிவன்
முல்லை நகையார் மதன்மாரி முத்துப்புலமைத் திறம்போல
முயன்றசுகுண மதுபோல முழுதுந்தெளிந்த மனம்போல
எல்லையிகந்த பாரதல மெழில்வான்றனிலு மேகாண
இதயத்தெண்ணி விழிதுயிலா திருந்துமதுவே நினைவாகி
ஒல்லையரன்மா லயன்பிச்சைக் குழன்றும்பன்றி வடிவெடுத்தும்
ஓங்கிப்பறக்கு மோதிமமா யுயர்ந்துதிரிந்துங் காணரே.

என்று பாலபாரதியார் புகழ்ந்தனர் தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை என்ற புலவர் பெருமானை. மாரிமுத்துப் பிள்ளை சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரே யாயினும், அவரது சரிதமும் பிறவும் இதுபொழுது அறிவதுங் சிறிது காலத்தில் மறைந்து விடுமெனத் தோற்றுகிறது.

'துளக்கிலா விளக்கை மிக்க பெரும்பொருளைப் பெரும்பெற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' என்று வாகீசப் பெருமானால் வாயாரப் புகழப்பட்ட சிதம்பரத்திற்கு ஈசானதிக்கிலேயுள்ளது தில்லை விடங்கன் என்னும் ஊர். அவ்வூரிலேயுள்ள ஒரு சைவப் பெருங்குடியிலே தெய்வப்பெருமாள்பிள்ளை யென்று ஒருவர் இருந்தார். அவருடைய அருந்தவப்பயனாய்ப் பிறந்தவர் மாரிமுத்துப் பிள்ளை. இவர் உரிய பிராயத்திலே இலக்கிய இலக்கணங்களோடு இசைக்கல்வியும் நிரம்பப் பெற்றார். நடராசப் பெருமாளிடத்து இடையறா அன்புடையவர். அதனாலே நடராசர்மேல் சிதம்பரேசர் விறலிவிடுதூது, புலியூர் வேண்பா,

சிதம்பரப்பள்ளு, நடராசர் கீர்த்தனை, வண்ணம் முதலாயின பாடினர். தனிக் கவிகளாக வெறி விலக்கல் என்னுந் துறையில் நடராசர்மேல் பல இயற்றினர். வெறிவிலக்கலென்னுந் துறையில் கவிகள் பாடுவது துக்க சாத்தியமான காரியமென்று அறிஞர் கூறுவர். இவரோ அத் துறையிலே பல கவிகளைச் சர்வசாதாரணமாக இயற்றியுள்ளார். அவற்றுள் இரண்டு பாக்களைக் கீழே கொடுக்கின்றேன்.

அங்கையினெல் லிக்கனிபோ லாகுமிவ ளாசைதெரிந்
திங்கிருக்க நீயுமிதை யெண்ணுமல்—மங்கையரே
சத்துருவை யேன்சேர்த்தாய் தாண்டவச பேசருடன்
இத்திருவைச் சேர்ப்ப தினிது.
மின்னரசி காம வெறிபிடித்தா லுன்னையிந்தச்
சின்ன வெறிபிடிக்கச் செய்ததார்—இன்னவெறி
தீராது தில்லைச் சிவன்வந்து சேர்ந்துமுத்தம்
தாராத நாளளவுந் தான்.

இவர் கூத்தப் பெருமான்மீது பாடிய கீர்த்தனைகளெல்லாம் நிந்தாஸ்துதியாகவே அமைந்துள்ளன. ஆயினும் அவை சொற்சுவை பொருட்சுவை ததும்புவன. அவற்றிரண்டு மாதிரிக்காகக் கீழே கொடுக்கிறேன்.

இராகம் : காம்போதி தாளம் : ஆதி

*பல்லவி*

வீடேமம் பலமாகி நீரு மந்தர மானீர்
வேளை போல்லாப் பாகியோ

*அனுபல்லவி*

காடுகோணி யாகியோ ரோடேங் கையிற் கொண்டீரே
கனகசபை நாதரே பனக பூஷணரே வீடு

*சரணங்கள்*

1. உளக்களியாய் பலவுயிர் களிக்கும்படி—தா
னளக்கிற மைத்துனன்வந் தருகிலிருந்தும்
இளக்கறியா மற்சேந்நெல் ஈராழியா—லறத்தை
யளக்குஞ்சீ மாட்டி சோந்தமனை யாட்டியாயிருந்தும் வீடு

2. ஈட்டும் பற்பல நிதிக்கெல்லாந்—தலைவனகச்
சூட்டுங் குபேரன் நீங்காத்தோழ னென்றிருந்தும்
பூட்டகம் வெளியாச்சே புலிபாம்புக்குள்ளே யுறை
நாட்டமெல்லா மடங்கியரை யுடம்பானீர் ஐயா வீடு

3. வெள்ளைப் பிலுக்கைப் பார்த்தால்மேல் பூச்சல்லாமல்
உள்ளிலும் புறம்பிலு மொன்றிலு மில்லையே
எள்ளி லெண் ணெய்போலெங்கு மிருப்பேனென் றேருக்காலே
துள்ளிக்கூத் தாடினீரே சொர்ணசபை நாதரே வீடு

இராகம் : சௌராஷ்டிரம் தாளம் : ஆதி

பல்லவி

என்ன பிழைப் புன்றன் பிழைப்பையா—இது
எண்ணிப் பார்த்தா லார்க்கும் பழிப்பையா

அனுபல்லவி

ஆனனங் கண் டறியாமற் சோரூப மாறினீர்
ஆட்டை யெடுத்துத் துணிந் தம்பல மேறினீர் என்ன

சரணங்கள்

1. கூடை மண்சுமந் துண்ணப் பரிந்தீரே முனிவர்
கொண்ட பெண்களைத் துகிலுரிந்தீரே
ஓதிடத் திரந்துண்டு திரிந்தீரே பசியா
லொருவன் பிள்ளையைக் கழுத்தரிந்தீரே
வேடனாகி விஜயன் வில்லா லடிபட்டீரே காடேகுடி
யிருப்பாகக் கல்லாலடி பட்டீரே என்ன

2. பெண்டாட்டி முழுநீலி தானாச்சே
பிள்ளை தகப்பன் சாமியாய் போச்சே
பண்டர மத்துள்ள தாகனேனும் பேச்சே
யாரும் பழிப்புக் கிடமாச்சே
அண்டர்க் கரிய கூத்தையாடியு முமக்கிங்கே
எண்டிக்கடியர் மூவாயிரத்தினில் ஒருபங்கே என்ன

3. மலைவேட னெச்சிலைத் தின்றீரே குதிரை
மாறுடி மழுவேந்தி நின்றீரே
விலைமாதிடத் திற்றூது சென்றீரே வெட்கம்
விட்டுச்சடை நாகம் வென்றீரே
கலையிற்கோ வணந்தனைக்களவு செய்தீரே—தலையிலெய்தி
சோமனைத் தரித்துக் கெடுத்தீரே என்ன

முதற்பாட்டில் அம்பலம் சபையைக் குறிப்பதாய் சிவபெருமான் பஞ்சாட்சர மந்தர சொரூபியாய் நிற்றலைக் குறிக்கும். இப் புலவர்சிகாமணி இதனை கெட்டகாலமோ அன்றி மன்மதனை எரித்ததாலுண்டாயிற்றோ என்று வினயம் பொருந்தப் பாடுகின்றார். மேலும், நீர் பொற்சபைக்கே தலைவனாக விருந்தும் உமக்கு காணியாகவிருப்பது காடு அதற்குத் தகுந்தவிதமாகக் கையிலே ஓடு என வர்ணிக்கிறார். சரணங்களின் பொருளை ஆழ்ந்து பார்ப்போமானால், எத்துணை ஏளனஞ்செய்ய முடியுமோ அத்துணை ஏளனத்துக்கிடமாகப் பாடுகிறார். இவ்வாறு பாடிய கீர்த்தனங்கள் பலவாகும்; அவை திருத்தமுற அச்சேறல் வேண்டும்.

மாரிமுத்துப் புலவர் இவைகளையேயன்றி வருணபுரி குறவஞ்சி ஆதிமூலேசர் நொண்டி முதலிய நூல்களையியற்றி வாழ்ந்திருந்து, தமது முதுமைப் பருவத்தில் கி. பி. 1787 பிலவங்க ஆண்டு சித்திரை மாதம் பதினொலாந்தேதி சோமவாரத்தன்று குஞ்சிதபாதப் பெருமானது சரணாரவிந்தங்களை யடைந்தார்.

# சங்கீத கட்டுக்கதைகள்

'வில்லன்'

### தீபகலதா :

மூசுகர் அல்லது தீபகலதா என்னும் ஒரு விநோத பட்சி காகேஷிய மலைகளில் சுமார் ஆயிர வருஷகாலம் வசித்து வந்தது. அதன் மூக்கில் ஏழு துவாரங்கள் இருந்தன. ஒவ்வொரு துவாரத்தின் மூலமாகவும் ஒரு ஸ்வரம் பிறந்தது. ஒவ்வொரு பருவத்திலும் இந்த ஸ்வரங்களை இசைத்து, அந்தந்த பருவம் திதி நாழிகை இவைகளுக்கொப்ப, ஒரு ராகத்தை ஆலாபனை செய்தது.

அதன் மரணகாலம் நெருங்கியபோது, மிகவும் பரவசமடைந்து சுற்றுப் பக்கத்திலிருந்த உலர்ந்த சருகுகளை யெல்லாம் ஓரிடத்தில் சேகரித்து, பருவத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி பல ஸ்வரங்களிலும் ராகங்களிலும் பாடிக்கொண்டே வெறியுடன் அதைச் சுற்றி வந்து கூத்தாடியது. அது ராக தீபக ஸ்வரத்தை ஆரம்பித்தபோது சருகுகள் குப்பென்று பற்றி எரிந்தன. கடைசியாக அந் நெருப்பிலேயே விழுந்து அது உயிர்விட்டது.

அதன் சாம்பலிலிருந்து ஒரு முட்டை தோன்றியது. அதுவே தீபகலதை யாயிற்று.

இவ்விதம் ஆதிகாலந்தொட்டு ஒரு பட்சி பிறந்தும், விநோதமாக வாழ்ந்தும் சாம்பலாய் எரிந்தும், அச்சாம்பலிலிருந்து மற்றொன்று தோன்றியும் வந்தது. இப்போது அப்பட்சியினமே நிர்மூலமாய் அழிந்து விட்டது.

### சங்கீதகலையின் பிதா :

மனிதன் பேசத்தெரியாமல் சமிக்ஞைகளால் தனது உள்ளக் கருத்தை வெளியிட்டு வந்த காலம். ஒரு நாள் மாலை ஒருவேடன் கடலோரத்தில் ஒரு மணல் திட்டின்மீது உட்கார்ந்திருந்தான். அலைகள் இடைவிடாமல் கரைமீது அடித்து ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தன. காற்று இன்னிசை ஒலித்தது. வேடன் இவ் வரவங்களுக்குச் செவிசாய்த்தான். அவனது உள்ளத்தில் அன்பு ஒரு புறமும் ஏக்கம் மற்றொரு புறமும் கிளர்ச்சி செய்யவாரம்பித்தன. ஆ, ஏ, ஊ, ஹூம், என அழைக்கவோ பயமுறுத்தவோ மட்டும் கத்துவதற்குக் கற்றுக் கொண்டிருந்த தொண்டையிலிருந்து ஒரு புலம்பல் கிளம்பிற்று. இதுவரையில் ஒழுங்கின்றி யிருந்த அவனது தொனிகள் இதுசமயம் ஒருவித ஒழுங்குடன் கூடியிருந்தன. அவைகளினின்றும் இன்பமான, சுத்தமான, பல சாயைகள் கொண்ட இசை ஏற்பட்டது. ராகம் பிறந்தது.

இந் நிலையிலிருக்கையில், அவன் மனைவி அவனைத் தேடிக் கொண்டு வந்தாள். வேடன் அவளது தோள்மீது சிறிதுநேரம் சாய்ந்திருந்தான். அது சமயம் அவளது இதயநாடி கிரமமாகத் துடிப்பதைக் கேட்டான். அவனுக்கு தாளஞானம் ஏற்பட்டது.

இன்னுமோர் நாள் ஒரு ஆமையோட்டைக் கண்டெடுத்து அதற்குத் தொளைகள் குத்தி ஒரு நரம்பைக் கட்டி தனது விரலால் மெல்ல மீட்டினான்; நரம்பு நீண்ட நேரம் ஒலித்தது. ஓசை அடங்கினவுடனே, இன்னுமோர் தடவை மீட்டினான்; மற்றுமோர் தொனி கேட்டது. அதைப்போலவே பலதடவைகள் பல விதமாக மீட்டினான். ஒன்றுக் கொன்று மேன்மேலும் உயர்ந்துபோகும் சப்த ஸ்வரங்கள் பிறந்தன.

### நாரதர் கானம் :

வேதரிஷியாகிய நாரதர் பிரம்மதேவரின் குமாரராவர். அவர்தான் அற்புத இசைக் கருவியாகிய வீணையைக் கண்டு பிடித்தது. அவரது பெரிய வீணையின்முன் ஒருநாள் உட்கார்ந்து அதைப் பார்த்த வண்ணமாக இருந்தார். மந்த மாருதத்தில் கம்பிகள் பல்வேறு ராகங்களில் ஒலிக்கவாரம்பித்தன. நாரதர் இசைப் புலவரானார்.

ஒருநாள் மகாதேவர் நாரதரைப் பார்த்து, "ஓய், நாரதரே, மிகப்புனிதமான இசைக் கருவியாகிய வீணையை வைத்துக் கொண்டே எங்கும் செல்லுகிறீரே. வீணாகானத்தைப் பற்றி உமக்கென்ன தெரியும்?" என்று கேட்டார். அதற்கு நாரதர், "எனக்கு முன்பாக வந்து வீணை வாசிக்க எவனுக்கேனும் தைரியம் இருக்குமாயின், நான் அவனுக்கு அடிமை" என்று இறுமாந்து கூறினார். மகாதேவர்

உடனே சரஸ்வதிதேவியை அழைத்து நாரதர் முன்பாக வீணையை வாசிக்கச் சொன்னார். நாரதர் சரஸ்வதியின் மகாமேதையைக் கண்டு திகைத்து அவளை இசைமகள் என அடிபணிந்தார்.

## அனுமான் கர்வபங்கம் :

அனுமார் தமது சங்கீத ஆற்றலைப் பற்றி மிகவும் பெருமையடித்துக் கொண்டார். இதைக் கண்ட ஸ்ரீராமபிரான் அதைப் பொறுக்க முடியாது அவரது கர்வத்தைப் பங்கப்படுத்த ஒரு சூழ்ச்சி செய்தார்.

வனாந்தரத்தில் இசைக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்ற ஒரு முனிபுங்கவர் வசித்து வந்தார். அவரது ஆற்றலால் சப்த ஸ்வரங்களும் சப்த கன்னிகைகளின் ரூபம் எடுத்துக் கொண்டிருந்தன.

ராமன் வேட்டையாடுவதற்கெனச் சொல்லி அனுமாருடன் அக் கானகத்தில் நுழைந்து, முனிபுங்கவரின் ஆச்சிரமத்தினருகில் சென்று அங்கு அனுமாரைப் பாடச்சொன்னார். அனுமாரும் மிகப் பெருமையுடன் வீணையைமீட்டி பாடத்தொடங்கினார்.

அது சமயம் சப்த கன்னிகைகளுள் மிகவும் ரூபவதியான ஒருத்தி தண்ணீர் கொண்டு வருவதின்பொருட்டு அவர்களிருக்கும் வழியாகச் சென்றாள். அனுமாரது பாட்டு காதில் விழுந்தவுடன் அவளுக்கு தலை சுற்ற வாரம்பித்தது. உடனே ஸ்மரணையற்று கீழே பிணமாக விழுந்தாள். அனுமார் மிகவும் அபஸ்வரமாகப் பாடியதே இதற்குக் காரணம்.

அவளுக்குப் பின்னால் வந்த இதர கன்னிகைகளும் கீதத்தைக் கேட்டவுடனே நிலைகுலைந்து அலறி அழுது விழுந்து உயிர் துறந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்த ரிஷி, புன்னகை புரிந்துகொண்டே, தமது வீணையை எடுத்துக் கொண்டு சரியான ஸ்வரங்களுடன் பாடினார்: இறந்துகிடந்த கன்னிகைகள் ஒவ்வொருவராக உயிர்பெற்று எழுந்தனர்.

அனுமார் மிகவும் வெட்கித் தலைகுனிந்து தமது கர்வத்தைப்போக்கக் கடுந்தவம் புரிந்தார்.

ஒருநாள் அவர் இலங்கையை வென்ற பின் ஸ்ரீராமபிரான் கொலுவில் இருக்கையில் அவரைப் புகழ்ந்து பாட்டுக்கள் பாடினார். அவர் பாடிய ராகம் அனுமத் ராகமெனப் பெயர் பெற்றது. அவர் ஒருசமயம் குண்டக்கிரியை ராகத்தை பாடும்போது கல்லும் உருகியதாம்.

## தீபக ராகம்:

ஒரு புராதன கோவிலின் மூலஸ்தானத்தில் பல ஆண்டுகளாக இடைவிடாது ஒரு விளக்கு எரிந்து வந்தது. கோவில் பூசாரி அதற்கு ஒருநாள் எண்ணெய்விட மறந்துவிடவே, அது திடீரென அணைந்தது. அதைக்கேட்ட ஊரார் மதிகலங்கினர். அணைந்ததின் உண்மையான காரணத்தை யறியாமல், அது பிசாசின் வேலையென நம்பி, அதனால் ஊருக்குத் தீமையேற்படுமென்று பெரிதும் அஞ்சினர்.

இதைக்கேட்ட ஒரு இசைவாணன் தனது சங்கீதவன்மையினால் விளக்கு மீண்டும் எரியும்படி செய்வதாகச் சொன்னான். அவ்வூர் அரசன் அவனை மிகவும் மரியாதையுடன் ஊருக்கு வரும்படி அழைத்தான். இசைவாணன் தனது ராகத்திற்கேற்ற நேரத்தில் அதைப் பாடவும், மூலஸ்தானத்திலுள்ள விளக்கு மீண்டும் சுடர்விட்டெரிய ஆரம்பித்தது.

இந்த ராகம் ஆதியில் குணதிசையை நோக்கியிருந்த மகாதேவரின் திருவாயினின்றும் உதித்தது. கோடைக்காலத்தில் மாலைநேரத்தில் இதைப் பாடினால், அணைந்த விளக்கு உடனே எரியும்; அதற்கு அவ்வளவு சக்தியுண்டு.

இந்த ராகத்திற்கு நெருப்புண்டாக்கும் சக்தியுமுண்டு. மொகலாய சக்கிரவர்த்தியின் ஆஸ்தான பாடகராகிய தான்சேனர் இதை முழு இதயத்துடன் பாடும்போது அவரைச் சுற்றியுள்ள இடத்தில் நெருப்பு கிளம்பி எரியவாரம்பித்தது. அதுசமயம் அவ்வழியாக தண்ணீர் கொண்டுசென்ற ஒரு ஸ்திரீ தீப்பற்றியதைக் கண்டு கடவுளைத் துதித்து மேகராகத்தில் ஒரு பாட்டுப் பாடினாள். அவள் மிகவும் உண்மையாக மனமுருகிப் பாடவே, வானம் இருண்டு மழைபொழிந்து தீயை அணைத்தது.

அதுமுதற்கொண்டு இந்த ராகத்தை எவரும் பாடுவதில்லையாம்.

பொதுவாக சங்கீதத்தைப்பற்றியோ, ராகங்களைப்பற்றியோ பல கட்டுக்கதைகள் இருக்கின்றன. இவை கட்டுக்கதைகளாயினும், சங்கீதத்தின் பல அம்சங்களையும் உண்மைகளையும் எடுத்துக்காட்ட உதவுகின்றன என்பதில் ஐயமில்லை.



# சில்பப் பகுதி

## சோளஸிம்ஹபுரம்.

(ஸ்ரீமதி கே. எம். ஸௌந்தரவல்லி அம்மாள்.)

### ஸ்ரீ நரஸிம்மன் ஸந்நிதி.

சோளங்கிபுரம் (ஸம்ஸ்க்ருதத்தில்) கடிகாசலம் என்றும் பெயர் கொண்ட இத்திருப்பதி திருத்தணி என்னும் சிவஸ்தலத்துக்கு அருகேயுள்ளது. இத்திவ்விய க்ஷேத்திரத்தில் ச்ரிய:பதியான, ஸர்வேச்வரன் சேதனர்களைக் காக்கும் பொருட்டு, ஸ்ரீநரஸிம்ஹ மூர்த்தியாய், யோகத்திலெழுந்தருளி யிருப்பதால் யோக நரஸிம்ஹன் என்ற ஒரு நாமத்துடன், சதுர்ப் புஜமும் சங்குசக்ரமும் தரித்தவனாய், சாந்த ஸ்வரூபியாய் அம்ருதவல்லி என்ற தாயாருடன் கடிகைகிரி உச்சியில், ஹேம கோடி விமானத்தில், ஸப்த ரிஷிகள் தன்னை நோக்கி எப்போதும் துதிக்க வீற்றிருக்கும் திருக்கோலம், கண்டோருள்ளம் களிப்படையும்படி, வெகு மனோகரமாக விருக்கிறது. தன்னை நாடிவந்த பக்தர்கள் செய்யும் ஸேவையினால் திருப்தி யடைந்து அவர்களுக்குற்ற தேகவியாதி, மனோவியாதி, பேய், பிணி, சூனியம் முதலிய ஸகலவித பாதைகளையும் தீர்த்து, அவரவர் மனோபாவத்துக்கேற்ப கனவில் தோன்றி பக்தர்க் கருள்புரியும் பரந்தாமனை, இக் கலியுகத்தில் பேசும் தைவமென புகன்றால் மிகையாகாது.

### கடிகை யென்று பெயர்வந்த காரணம்.

ச்லோகம்.

கடிகா மாத்ரதோயஸ்மாத், மகர்ஷீணாம் காஸ்திதா
முக்த்திரஸ்மா முதம் ப்ராம்ஸ்ச சம்ஸந்தி கடிகா
சலம்

என்று ஒரு முஹூர்த்த காலம் இந்த க்ஷேத்திரத்தின்மேல் பக்தி செய்யும் மஹான்களுக்கு முக்தி கிடைப்பதால் இந்த ஸ்தலத்திற்கு கடிகாத்ரி என்று நாமம் ஏற்பட்டதென்பர்.

### மலைகள்.

இந்தவூரில் பெரியமலை சின்ன மலை என இரண்டு மலைகள் இருக்கின்றன. பெரிய மலையில் ஸ்ரீயோகநரஸிம்ஹரும் அம்ருதவல்லி தாயாரும் வீற்றிருக்கின்றனர்.

இந்த மலையில் நடுமத்தியில், ஒரேசிலையால் பெரிய தொட்டிபோலவும் அதன்மேல் ஒரு பெரிய பாறையினால் மூடியிருப்பது போலவும் இருக்கிறது. அதற்கு தனகுண்டு என்று பெயர் சொல்லுகிறார்கள். இந்த மலையின் அடிவாரத்தில் நரஸிம்ஹ தீர்த்தம் என்ற தடாகம் இருக்கிறது. மலைமேல் திவ்யமான தீர்த்தத்துடன் கூடின சுனை ஒன்று இருக்கிறது. இந்த மலையில், ஸ்ரீநரஸிம்ஹனுக்கும் அம்ருதவல்லிக்கும் ப்ரதி வெள்ளிக்கிழமையும் பால்,

தயிர், தேன் வாழைப்பழம் சர்க்கரை முதலியவை சேர்த்து பஞ்சாம்ருத திருமஞ்சனம், மூலவருக்கே வாத்திய கோஷத்துடனும் வேத பாராயணத்துடனும் வெகு விமரிசையாக செய்யப்படும். மலைமேல் மூலவர் மாத்திரம் தான் வீற்றிருக்கிறார். கார்த்திகை மாதத்தில் இந்த க்ஷேத்திரத்தில் ஸேவார்த்திகள் மிகவும் ஏராளமாக வருகிறார்கள். இந்த மாதம் முழுதும் திரள்திரளாக பக்தர்கள் பகவானை ஸேவிக்க மலை யேறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாக ஜனசமூகங்களால் நிறைந்து பார்க்க ப்ருஹ்மானந்தமாக விருக்கும். இந்த பகவான் ஸப்தரிஷிகளுக்கு ப்ரத்யக்ஷமென்று சொல்கிறார்கள்.

## சின்னமலை.

இது நரஸிம்ஹன் மலையைக் காட்டிலும் சிறியது; அழகிய சிறு குன்றம் என்றால் பொருந்தும். இதில் ஸ்ரீ ஆஞ்சநேயன் யோகத்தில் வீற்றிருக்கிறார். இவர் சதுர்ப் புஜமும் சங்குசக்கரமும் தரித்திருக்கிறார். முன்னொருகாலம் இந்திரத்யும்ன மஹாராஜனுக்கு அஸுரர்களால் பயங்கரமான யுத்தம் ஏற்பட்டதாகவும், அந்த ஸமயத்தில் இந்திரத்யும்ன ராஜன் ஸ்ரீ நரஸிம்ஹனை அடைக்கலம் அடைந்து சத்துருபயம் தீர்க்கவேண்டி பிரார்த்திக்க பக்தனைக் காக்க ஸ்ரீ நரஸிம்ஹன் ஆஞ்சநேயனிடம் சங்குசக்கரங்களை யளித்து சத்துரு ஸம்ஹாரம் செய்யும்படி கட்டளையிட்டருளினார். அதன்படி, ஆஞ்சநேயர் இந்த்ரத்யும்னனின் பகைவரை யழித்து ராஜ்யத்தை நிஷ்கண்டகமாக்கி இந்த்ரத்யும்னனுக்கு அளித்து சங்கசக்கரங்களை சின்னமலையில் உள்ள தடாகத்தில் சுத்தம்செய்து ஸ்ரீநரஸிம்ஹனிடம் கொடுக்க பக்த பராதீனனான பகவான் ஹனுமானது சக்திக்கும் பக்திக்கும் உகந்தவனாய், "ஆஞ்சநேயா, நீ இன்றுமுதல் என்னைபோலவே சதுர்ப்புஜமும் சங்குசக்கரமும் தரித்து, எனக்கெதிரில் யோகஞ்செய்துகொண்டு வீற்றிருந்து என்னை நாடிவரும் பக்தர்கள் உன்னையும் போற்ற அவர்களுக்கு அனுக்ரஹித்துக் கொண்டிருப்பாய்" என்று சங்குசக்கரங்களை அவருக்கே யளித்தார். அன்றுமுதல் ஆஞ்சநேயன் யோகாஞ்சநேயனாக ஸேவை யளிப்பதாக புராணங்கள் கூறுகின்றன. இந்த மலையிலிருக்கும் தீர்த்தத்திற்கு சக்கரதீர்த்தம் என்று பெயர்.

இந்த மலையில் ஆஞ்சநேயனுக்கு குலதைவமான ராமபிரானும் ஸ்ரீராமனுக்கு ஆராதனப் பெருமானான ரங்கநாதனும் ஆக மூவரும் வீற்றிருக்கின்றனர். இந்த மலையில் ஞாயிற்றுக்கிழமையில் பஞ்சாம்ருத திருமஞ்சனம் விமரிசையாக நடத்தப்படும். இந்த இரண்டு மலைகளிலும் வீற்றிருக்கும் ஹரியும் (நரஸிம்ஹனும்) ஹரிநாதனும் (ஆஞ்சநேயனும்) உருவத்தில் வேறுபாடொழிய தம்மை வந்தடுத்த பக்தர்களிடம் அருள் செய்யும் விஷயத்தில் வேறு பாடில்லாது மிகவும் போற்றத்தக்கது.

## தீர்த்தங்கள்.

இந்த ஸ்தலத்தில் 108 திவ்ய தீர்த்தங்கள் இருப்பதாகத் தெரிகிறது. முக்ன்மையானது ப்ருஹ்மதீர்த்தம், அதாவது தக்கான் குளம் என்று சொல்லப்படுவது, மிகவும் அழகாகவும், குளிர்ந்த நிர்மலமான ஜலத்துடன் கூடியிருக்கிறது. அதன் கரையில் ஸ்ரீவரதர் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கிறார். இதைத் தவிர பாண்டவதீர்த்தம், லக்ஷ்மீ தீர்த்தம் சேஷ தீர்த்தம், வஜ்ரதீர்த்தம் முதலிய பல நாமம் கொண்ட தீர்த்தங்களும் அவை யுண்டான காரணங்களும், அதன் மஹத்வங்களும் கேட்கக்கேட்க மனதிற்கு மிக உற்சாகமாக விருக்கின்றன.

## சோளிங்கபுரம் ஊர்.

இது அரக்கோணம் ஸ்டேஷனிலிருந்து 16 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தவூர் அனேக விப்ரோத்தமர்கள் மாளிகைகளால் சூழப்பட்டு மத்தியில் ஸ்ரீ உத்சவர் நரஸிம்ஹமூர்த்தி ஆலயத்துடன் சேர்ந்து அழகாக இருக்கிறது. மலையடிவாரம் இங்கிருந்து 3 மைல் இருக்கும். அனேகமாக ஸேவார்த்திகளெல்லோரும் மலை யடிவாரத்திலிருக்கும் கொண்ட பாளையம் என்று இடத்திலேயே தங்குவார்கள். அவர்கள் வசிக்க அங்குஅனேக சத்திரங்கள் உள்ள. இந்தவூரில் பிரமோத்சவ காலத்தில் மலைமேல் நரஸிம்மன் ஸன்னிதியில்தான் கொடியேறும் த்வஜாரோகணம் அவரோகணம் முதலிய முக்கிய நாட்களில்

உத்சவர் வாத்திய கோஷத்துடனும் வேத பாராயணத்துடனும் மலைமீதேறி வரும் காட்சி மிகவும் மனோகரமாக இருக்கும். இந்த உத்சவருக்கு பக்தவத்சலரென்று திருநாமம். இத்தகைய தீர்த்த மகிமையும், ஸ்தான மகிமையும் உள்ள திவ்வியதேசத்தை ஒரு முறையாவது ஸேவித்து வந்தவரின் பாக்கியத்தை என்னென்று புகல்வது!

*இந்த ஸ்தலத்தை*

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள் சோலை வண்பூங் கடிகை
இளங் குமரன் தன் விண்ணகர்

என்று பேயாழ்வாரும்

*மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்*
*புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை*
*தக்கானை கடிகை தடம் குன்றின்மிசையிருந்த*
*அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே*

என்று திருமங்கை மன்னனும் மங்களாசாஸனம் செய்தருளி யிருக்கின்றார்கள்.

---

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு ருத்ரோத்காரி (1863)-ம் ஆண்டு சென்னைக்கு வந்து, ரத்தாக்ஷி வருடம் ஐப்பசி மாதம் 22-ம் தேதி ஆனந்த தாண்டவ அற்புத நடனமூர்த்தி எம்பெருமான் நடராஜர் கோயில் கொண்டுள்ள சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்துவிட்டுச் சென்னை சென்று சில நூல்களுக்கு உரைகள் எழுதியும் சில நூல்களைப் பரிசோதித்தும் அச்சிடுவாராயினர். இக்காலத்தில்தான், சேதுபுராணம், தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலிய நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டதும், சைவ சமய நெறி, கோயிற் புராணம் முதலியவைகளுக்கு உரை எழுதி அச்சிட்டதும். சென்னையில் வசிக்கும்போது, சைவப்பிரசங்கங்களும் முறையாகச் செய்துகொண்டிருந்தனர். சென்னையில் ஐந்து வருடங்கள் கழித்துவிட்டுச் சுக்கில (1869) வருஷம் ஊருக்குத் திரும்பினார்.

பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு நன்னூற் காண்டிகையுரை, சைவ வினாவிடை முதலிய நூல்களை இயற்றியும், கோப்பாய் புலோலி முதலிய இடங்களில் வித்தியாசாலைகள் ஸ்தாபித்தும், கோவில்களைச் சீர்திருத்தியும், நாட்டுக்கு நன்மை பயக்கும் பல காரியங்களைச் செய்தும், பிரமாதி வருஷம் மாசி மாதம் 12ம் தேதி சிவபதம் அடையும்வரை எப்போதும் பொதுநன்மைக்காகவே பாடுபட்டு வந்தார்.

நாவலரிடத்தில் சமயாபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் முதலிய பல நற்குணங்கள் சிறந்து விளங்கின. நாவலர் பெருமான் நாமம் வாழ்க!





# அனுஷ்டானப் பகுதி

## *திருவாதிரை.

(டாக்டர் வே. ராகவன்.)

போர்முகத்தில் தன் நண்பனுக்கு வழங்கிய கீதோபதேசத்தில், இந்த பிரபஞ்சத்தில் நாற்புறமுள்ள பொருள்களில் பெருமையும், சிறப்பும், அழகும் வாய்ந்தவைகளை, பகவானுடைய அம்சம் நிரம்ப வாய்ந்தனவாக தியானஞ்செய்யும் முறையான விபூதியோகம் என்ற அத்தியாயத்தில் "மாதங்களுள் நான் மார்கழி மாதமாயிருக்கிறேன்" (மாஸானாம் மார்கசீர்ஷோஸ்மி) என்று பகவான் சொல்லுகிறார். இதன் ரஹஸ்யம் எவ்வாறிருப்பினும், மிகப் பழைய காலம் முதற்கொண்டே நாம் மார்கழி மாதத்தை கடவுளை வழிபடுவதற்குச் சிறந்த மாதமாகக் கருதி வருகிறோம். வால்மீகியின் ராமாயணத்திலும், பஞ்சவடியில் சரத் ருது முடிந்து ஹேமந்த ருது ஆரம்பிக்கும் இம் மார்கழியில் ஒருநாட் காலை பொழுது புலர்ந்ததும் ராமன், ஸீதையுடனும், லக்ஷ்மணனுடனும் அழகிய கோதாவரி நதி தீரத்திற்கு நீராடச் செல்லுகிறான். அப்பொழுது இந்த ஹேமந்த காலத்தையும் மார்கழி மாதத்தையும் லக்ஷ்மணன் புகழ்ந்து வர்ணிக்கிறான். இந்த வர்ணனை ஆரம்பிக்கும் முன்னே, வால்மீகி, "பகவானான ராமசந்திரனுக்கு மிகவும் இஷ்டமான ஹேமந்தருது வந்தது" என்று சொல்கிறார். லக்ஷ்மணனும் "ராமா, உனக்கு ப்ரியமானதான காலம் வந்திருக்கிறது" என்று ஆரம்பிக்கிறான். இந்த வால்மீகியின் சொற்கள் கீதையில், மார்கழியைப் புகழ்ந்த சொல்லோடு ஒன்றுபடும்.

லக்ஷ்மணன் தன் வர்ணனையை ஆரம்பிக்கும்போது 'இந்த மார்கழியினால் ஆண்டு முழுதுமே அலங்கரிக்கப் பட்டதுபோல விளங்குகிறது" என்கிறான். மார்கழி என்ன அலங்காரத்தைக் கொடுக்கிறது என்று சற்று யோசித்தால், அயோத்தியில் தாம் அனுபவிக்கக்கூடிய நகர அழகு ஒன்றை இளையபெருமாள் நினைத்துக் கொண்டார் என்பது தோன்றும். மார்கழியில் விடியும்பொழுதே எழுந்து பெண்கள் தம் தம் அகங்களுக்கு முன் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஆச்சரியமான கோலங்களைப் போட்டு தெருக்களுக்கே ஒரு அலங்காரத்தை கொடுத்தனரே, அவ்வலங்காரத்தைக் காட்டில் நினைத்துக் கொண்டான் போலும், லக்ஷ்மணன். லக்ஷ்மணன் மார்கழி வர்ணனையை முடிக்கும்போது, அயோத்தியில்

* 27—12—1939 அன்று சென்னை அகில இந்திய ரேடியோ நிலயத்தில் பேசியது. அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

இரவின் கடையாமத்திலேயே விழித்து வையிற்கு சென்று நீராடிவரும் பரதனின் ஒழுக்கத்தைப் புகழ்கிறான். இங்கும் பகவானை மார்கழியில் விடியும்போதே வழிபடும் பாகவத தர்மமே குறிக்கப்பட்டதுபோலும். இன்றும் தமிழ் நாட்டில் மார்கழியில் பஜனை செய்யும் ஸம்பிரதாயம் நடந்து வருகிறது. நம் கர்னாடக சங்கீதத்திற்கே உயிரான தியாகராஜ ஸ்வாமியும் இவ்வாறு பஜனை செய்து வந்தவர் தான். இந்த பஜனை ஸம்பிரதாயம் குன்றாமலும் புத்துயிர் பெற்று எல்லா ஊர்களிலும் மார்கழிக் காலைகளில் நடக்குமானால், நம் தமிழகத்திற்கே எவ்வளவோ சிறப்பும் அழகும் ஏற்படும்.

இப்படிப் பொதுவாய் 'கடவுளின் வழிபாட்டிற்கு எடுத்தது இம் மார்கழிமாதம்' என்ற சிறப்பைத் தவிர, மார்கழி மாதத்திற்கும் பெண்மணிகள் வழிபடுவதற்கும் தனியே தொடர்பொன்று இருக்கிறது. விஷ்ணுதர்மோத்தர புராணத்தில் அழகை அடையும் பொருட்டு மார்கழி மாதத்தில் லாவண்யாவாப்தி விரதம் என்று ஒரு ஒழுக்கம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இந்த விரதத்தில் ஹவிஸ் அன்னத்தையே உட்கொள்ள வேண்டும். இன்றும் மார்கழியில் மலையாள தேசத்தில் திருவாதிரை பெண்டு கொண்டாடப்படும் விசேஷ நிகழ்ச்சிகளைப் பார்த்தோமானால், அதில் மன்மதனின் கதையே மூலமாயிருக்கிறது புலப்படும். திருவாதிரையன்றே முக்கியமாய் இக் கொண்டாட்டம் நடப்பினும் இது திருவாதிரைக்கு சில நாட்கள் முன்னதாகவே தொடங்கிவிடும். இக் கொண்டாட்டத்தை நடத்துபவர் பெண்களே. அவர்கள் அதிகாலையிலேயே எழுந்திருந்து கூட்டமாய் பாடிக்கொண்டே குளத்திற்குச் சென்று, பாடிக் கொண்டே நீராடுவர். பாடும்போது ஜலத்தை தம் கையால் எழுப்பி மிருதங்கத்தின் சப்தத்தைச் செய்துக் கொண்டிருப்பர். வாத்ஸ்வாயன மஹரிஷி தம் காம சூத்திரத்தில் சொல்லிய 64 கலைகளில் உதகா காதம் என்பது ஜலக்ரீடையின் அங்கமான கலை ஒன்று. அது ஜலத்திலேயே மிருதங்கம் வாசிப்பது. இக்கலையைத்தான் இன்றும் திருவாதிரை நீராட்டத்தில் கோள சுந்தரிகள் நடத்தி வருகின்றனர். இந் நீராட்டமானதும் வீடுவந்து வெற்றிலை போட்டுக்கொண்டு ஊஞ்சலாடி விட்டு குதித்துப் பாடுவர். இதே மலை நாட்டுத் திருவாதிரைக் களி.

தமிழ் நாட்டின் திருவாதிரையும் முன் இதுபோலவேதானிருந்திருக்க வேண்டும். விஷ்ணு தர்மோத்திரத்தில் அழகடைவதற்கான நோன்பாகப் பொதுவாய் ஆணுக்கும் பெண்ணுக்கும் சொல்லியிருப்பினும், இது நாளடைவில் சிறு பெண்களால் மட்டும் செய்யப்படும் நோன்பாகி இருக்கவேண்டும். பழம் சங்க நூலான பரிபாடலிலே வைகையாற்றை வர்ணிக்கும்போது அவ்வாற்றங் கரையில் மார்கழித் திங்களில் மதிமுதிர்ந்த நாளாகிய திருவாதிரையன்று கன்னிப்பெண்கள் சூரியன் உதிக்கும் தருணத்தில் நீராடி, தங்கள் தாய்மார்களும் நோன்பு முறையறிந்த வயதான மாதரும் சொல்லிய முறையில், திருவாதிரை நோன்பை நடத்துவதாக கவியால் பாடப் பட்டிருக்கிறது. சந்திரமானப்படி பௌர்ணமியுடன் தைமாதம் வந்துவிடுமாகையால் இந்த நோன்பைத் தைநீராடல் என்றும் தமிழ் நூல்களில் காண்கிறோம்.

மேற்சொன்ன பரிபாடற் செய்யுளில் இப்படிப்பட்ட திருவாதிரை நோன்பை நோற்ற புண்ணியத்தால் தலைவி உத்தமத் தலைவனை யடைந்தனள் என்றும் காணப்படுகிறது. ஆகையால் கன்னிகள் நற்கணவனை வேண்டி நடத்தும் நோன்பு இதுவென ஏற்படுகிறது. அழகை வேண்டும் நோன்பின் தொடர்பே அழகனைவேண்டும் நோன்பும். இப்படி நீராடிய மகளிர், பாவைகளை, அதாவது பொம்மைகளை, வைத்து விளையாட்டை நடத்தினர் என்றும் தெரிகிறது. "பாவையாடல்" என்று பிங்கலந்தையில் "பனிநீர் தோய்தலோ"டு கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. வடமொழி நூல்களிலும் "பாஞ்சாளானுயானம்" என்று விளையாட்டுப் பேச்சுகள் பேசிக்கொண்டு பாவையூர் வலம் நடத்தி அதைப் பெண்டிர் பின் தொடர்வதென்று ஒரு கொண்டாட்டம் சொல்லப் பட்டிருக்கிறது. இப்பாவையாட்டம் நேற்று வரை நம் நாட்டில் நம் கன்னிகள் நடத்திவந்த 'பசுவனு'யிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஸ்ரீமத் பாகவதத்திலே மார்கழி மாதத்தில் காலைகளில் கண்ணனைக் கணவனாய்

பெறவேண்டி ஆயர்மகளிர் காத்யாயனி தேவியைப் பூஜை செய்து ஹவிஷ்யமான உணவைமட்டும் உண்டு ஒழுகினர் என்று காணப்படுகிறது. இப்பொழுதும் திருவாதிரையில் நாம் சமைத்துண்ணும் களியிலும் இந்த ஹவிஷ்யமான உணவு உட்கொள்ள வேண்டும் என்ற விதியின் சிதைந்த தொடர்பையே நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். இந்த கன்னிகளின் நோன்பை யாதாரமாய்க் கொண்டுதான் ஆண்டாளும் லௌகிக பாவத்தை பாரமார்த்திக பாவமாக்கித் தன் திருப்பாவையைப் பாடினாள். அதுகாரணம் பற்றியே அத்திருப்பாவை மார்கழியில் காலைகளில் நாளுக்கொன்றாய் முப்பது நாளும் வைஷ்ணவர்களால் ஓதப்பட்டு வருகிறது. வைஷ்ணவருக்குமட்டும் மார்கழியில் கடவுளை வழிபடுவதற்குத் திருப்பாவை போன்ற சிறந்த நூல் இருக்கிறதென்று கருதலாகாது. சிவனடியார்க்கு இதுபோல் மார்கழியில் சிவனை வழிபட திருவாதவூரரின் திருவெம்பாவை இருக்கிறது. இந்நூலும் பெண்டிர் லௌகியமாய்க் கணவனை வேண்டும் திருவாதிரை நோன்பையே பாரமார்த்திகமாய் ஜீவ ஆத்மாக்கள் பரமாத்மாவான சிவபிரானை வேண்டும் பாவமாய் உத்பிரேக்ஷை செய்து பாடப்பட்டது. மார்கழித் திங்களில், அதுவும் விசேஷமாய் திருவாதிரை நாளில், சிவபெருமானை வழிபடுதலில் ஒரு தனிப்பொருத்தமிருக்கிறது. ஆதிரை நக்ஷத்திரத்தின் அதிட்டான தேவதை சிவனென்று நூல்களில் சொல்லப்படுகிறது. முற்கூறிய பரிபாடற் செய்யுளிலேயே திருவாதிரையில் ஆகமங்களை யுணர்ந்த அர்ச்சகர் தைவத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பரிமேலழகர் இறைவனது விழா அதாவது தற்போது நடக்கும் ஆருத்ரா தர்சனம் போன்ற விழாவென்று பொருள் கொண்டதிலே யாதொரு பிசகும் இல்லை. சிவாலய விழாக்களைப்பற்றிய நூல்களிலொன்றான பூர்வ காரணகமத்திலே 114வது படலத்தில் மார்கழி மாதத்தில் ஆருத்ரா விழா கோயில்களில் நடத்தப்படவேண்டிய முறை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நூலில் திருவாதிரை விழாவில் முதல் முதல் தேவி பூஜை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தேவி பூஜையின் தொடர்புதான் பாகவதத்தில் கண்ணனையடைய விரும்பிய கோபியர் காத்தியாயனி தேவியை மார்கழியில் பூஜைசெய்தனர் என்று காணப்படுகிறது. இதே தேவியின் தொடர்புதான் பழம் தமிழ் நூல்களிலும் அம்பாவாடல் என்று மார்கழி நோன்பைச் சொல்லுமிடத்தும் காணப்படவேண்டும். இந்த தேவி பூஜைக்குப் பிறகு சிவபெருமானின் பூஜையும், அதற்குமேல் விசேஷமாக நடராஜமூர்த்தியின் பூஜையும் நடக்கவேண்டும் என்று காணப்படுகிறது. இதிலிருந்து தற்போது நமக்கு அனுபவத்தில் தெரியும் திருவாதிரைக்கும் நடராஜ தரிசனத்திற்கும் இருக்கும் ஸம்பந்தம் ஒருவாறு புலப்படலாம்.

சிவனின் நக்ஷத்திரமான ஆதிரையில் சிவபிரானின் அவசரங்களில் நிகரற்றதான நடராஜமூர்த்தியின் உபாஸனை மிகவும் பொருத்தமானதே. சிதம்பர க்ஷேத்திரத்தில் கனகஸபாபதி செய்யும் பஞ்சகிருத்ய பரமானந்த தாண்டவ வைபவத்தை இன்று கோடிக்கணக்கான சிவனடியார் தரிசனம் செய்து கிருதார்த்தராய்க் கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டின் சிறப்புகளின் நிகரற்ற சிறப்பு சிதம்பரமும் நடராஜமூர்த்தியும். நடராஜ உருவைக் கண்ட சிற்பயோகிக்கு நிகரான பேர் உலகிலே இல்லை. நம் திருக்கோயில்களான க்ஷேத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு ஆத்மதத்துவத்தின் சிற்பாவதாரம் என்று சொல்லவேண்டும். தத்வத்தை உருப்படுத்தி திருவாரூரென்றும் சிதம்பரமென்றும், அஜபா நடனமென்றும், ஆனந்த நடனமென்றும் ஏற்படுத்தினர். சிதம்பர வரலாற்றையும் பெருமையையும் சொல்லும் புராணமும் இந்த தத்துவத்தையொட்டியே எழுதப்பட்டிருக்கிறது. வினை சகிக்கவில்லையே அதிகப்படுத்திக்கொண்டு போகும் கர்மமார்க்கத்திலிருந்து ஓய்ந்து அறிவுவழியால் ஞானமார்க்கத்தைக் காட்டும் மறைமுடிகளிலே சாந்தோக்கியம் என்ற ஸாமகான ரஸிகர்களின் உபநிஷத்தில் எட்டாவது அத்தியாயத்தில் தகரவித்யை என்ற அரிய நுட்பமான உபாஸனம் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முள் கோவில் கொண்டிருக்கும் பிரம்மத்திற்கு இருப்பிடமாதலால் நம் சரீரம் பிரம்மபுரம் என்று சொல்லப்படுகிறது. இந்த சரீரமான பிரம்மபுரத்தின் உள்

சிறியதான, அதாவது தகரமென்று சொல்லப்படும், தாமரை போன்ற வீடு இருக்கிறது. அந்த தகரபுண்டரீகத்தினுள்ளிருப்பது வெளி, ஆகாசம்; அதே ஆனந்தம்; அதே பரம்பொருள். இந்த ஆகாசமாயும், ஆனந்தமாயும், அருளாயும் நம் ஹிருதய கமலங்களுக்குள்ளேயே இருக்கும் சிவமான பரம்பொருள் எப்பொழுதும் தன் ஆனந்தத்தில் நடனமாடிக் கொண்டிருக்கிறது. அந்தப் பரம்பொருளையே நாம் யோகத்தினால் காணவேண்டும். மேற் சொன்னது பிண்டாண்ட சிதம்பரம். இந்த "மெத்த கடின"மாயுள்ளதான நமக்குள்ளிருக்கும் சிதம்பர உபாஸனைக்கு உபாயமாகவே பிரம்மாண்ட சிதம்பரம் யோகசில்பிகளால் தில்லையில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. பிரம்ம புரமான இப்பிரபஞ்சத்தை யாக்கிய விராட் புருஷனுக்கு ஹிருதய ஸ்தானமாயுள்ளது புண்டரீகபுரம் என்ற சிதம்பர க்ஷேத்திரம். இப்படிப்பட்ட விராட்புருஷனின் ஹிருதய புண்டரீகத்தினுள்ளே இருக்கும் ஆயிரம் ஸூர்ய வெளிச்சமுள்ள வெளியே சிதம்பரத்தின் கனகசபை; அதனுள் ஆனந்தமும் அருளுமாயிருந்து நடனம் செய்து கொண்டிருக்கும் பரம்பொருளே நடராஜமூர்த்தி.

இந்த உபநிடத தத்துவத்தை உபாஸனையினாலும் ஞானத்தாலும் நாம் காணலாமே ஒழிய கருமமார்க்கத்தில் காணமுடியாது. ஆனது பற்றியே இந்த சிதம்பர மாஹாத்ம்யத்தைப் புராணத்தில் கருமகாண்டத்தை வளர்த்த ஜைமினி மஹரிஷிக்கு ஞானகாண்டத்தை வளர்த்த வியாஸமுனி சொல்லிக்கொடுப்பதாய் எழுதப்பட்டிருக்கிறது. இதே ஞானவழியில் தான் முன் தில்லையில் நடனஸபாபதியின் நடனத்தை வியாக்ரபாத முனிவரும், பதஞ்சலியும் கண்டனர். பதஞ்சலி கண்ட கதையைப் பார்த்தாலும் இதே உண்மை விளங்குகிறது.

முன் தாருகாவனம் என்றவிடத்தில் கருமமார்க்கத்தில் ஈடுபட்டு, 'யாகங்கள் ஒன்றே உள; தைவம் வேறு இல்லை' என்று கர்மமே தைவமாகக்கொண்டவர் இருந்தனர். அவருடைய அறிவீனத்தைக்கண்ட திருமால் கைலாஸத்திற்குச் சென்று சிவபெருமானை "நம்மை அடியோடு இல்லை" என்று சொல்லிக்கொண்டு சிலர் தாருகாவனத்தில் கர்மமார்க்கிகளாய் இருந்துகொண்டிருக்கின்றனர். நாம் அவர்களை வழிக்குக் கொண்டுவரவேண்டாமா?" என்று கேட்க, சிவனும் விஷ்ணுவும் தாருகாவனம் வந்து சேர்ந்தனர். விஷ்ணு பார்ப்பவர் பரவசப்பட்டு சரணம் புகும்படியான மோஹன அழகுடன்கூடிய ஸ்திரீவேஷம் பூண்டு, தாருகாவன ஆண்மக்களனைவரையும் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு ஒருபக்கமாய் போனார். பார்த்த பெண்மணிகள் அனைவரும் பின் தொடர்ந்துவரும் மோஹன ரூபமுடைய ஆணாய் சிவன் "பிக்ஷாம் தேஹி" என்று வீடு வீடாகப்போக, வீட்டில் இருந்த மனைவியர் அனைவரும் சிவனைத்தொடர்ந்து ஒருபக்கமாய் போனார்கள். மூர்த்தி விசேஷம் (Personality) ஒன்றைக்காணாத குறையாலன்றோ, 'மூர்த்தியில்லை, கர்மந்தானிருக்கிறது' என்று கர்மமார்க்கிகளாயும், நிரீச்வரவாதிகளாகவும் அக் காட்டுமனிதர் இருந்து வந்தார்கள். அவர்கள் மனதைப் பற்றிக்கொண்டு போகும் அழகுடனும், காம்பீர்யத்துடனும், இருமூர்த்தி விசேஷங்கள் தோன்றியதும் அவர்கள் அடிமைகளானது இயல்பே. இப்படி அந்த ஆச்ரம ஸ்தானத்தில் உள்ள ஆண்களும், பெண்களும் விஷ்ணுவையும், சிவனையும் பின்தொடர்ந்து போனபிறகு அந்த ஆச்ரமங்களில் தினந்தோறும் பிக்ஷையெடுக்கும் பிரம்மசாரியொருவன் வந்து, வீடுகளில் ஒருவரும் இல்லாததைக் கண்டான். பின்பு தன் யோகதிருஷ்டியினால், தனக்குமுன் வந்துபோன பெரிய பிச்சைக்காரன் ஒருவன், பிக்ஷையைமட்டுமல்லாமல், ஆத்மாவையும், உடலையுமே பிக்ஷையாய் வாங்கிக்கொண்டு எல்லா ஸ்திரீகளுடனும் போய்க்கொண்டிருக்கிறான் என்று கண்டு அந்த பிச்சைக்காரனைத் தொலைக்கக் கொடுமையான 'ஆபிசாரம்' என்ற யாகமொன்றை ஆரம்பித்தான். ஆபிசார யாகத்தினின்றும் சிவனைக் கொல்ல புலியொன்று பாய்ந்து வந்தது. அதைக் கிழித்து சிவன் லங்கோடு கட்டிக் கொண்டார்; பரசு என்ற ஆயுதம் வந்தது; மான் ஒன்று கொம்பால் குத்திவிட வந்தது. இவற்றை அலங்காரமாய் இருகைகளில் தூக்கி வைத்துக்கொண்டார்; ஸர்ப்பங்கள் வந்தன; ஒன்றை 'பில்டா'கக் கட்டிக்கொண்டு மற்றவையை மாலையாக இட்டுக்கொண்டார். ஆபிசார மந்திரங்களும், தீயும் வந்தன; தீயைக் கையி

லேயே ஏந்திக்கொண்டார்; நல்ல ஒலியோடு கூடிய மந்திரங்கள் சிவனின்காலில் கஜ்ஜையாய் மாறிச் சூழ்ந்துகொண்டன. கடைசியாய் அபஸ்மாரம் கிளம்பிவரவே, அதை உதைத்துத் தன் காலின்கீழ் வீழ்த்திக்கொண்டார். உடனே "அஷ்டதிசையும் கிடுகிடென சேஷன் தலை நடுங்க, அண்டமதிர" தன் ஸம்ஹார தாண்டவத்தைக் காண்பித்தார் சிவபெருமான். அதைக்கண்டு நடுங்கிப்போன தாருகாவனத்தினர் வேண்டிக்கொள்ள, தனது அருள் நிரம்பிய ஆனந்தநடனத்தைக் காட்டினார். அந்த ஸமயத்தில் அவர் ஆடிய அம்பல நாடகத்தின் பெருமை ஆருக்குத்தான் தெரியும்?

இதை யனுபவித்துவிட்டுப் பாற்கடலில் தனது சேஷசயனத்தில் விஷ்ணு சாய்ந்ததும், "பிரபோ! என்ன உம் உடல் இன்று கனம் தாங்கவில்லையே! என்ன ஆனந்தத்தை எனக்குச் சொல்லாமல் தனியாய்ப்போய் அனுபவித்துவிட்டு வந்தீர்?" என்று கேட்க, விஷ்ணு தான் கண்ட நடராஜனின் பரமானந்த தாண்டவத்தை வர்ணித்தார். உடனே, தானும் அதைக் காணவேண்டி தில்லையிலே, அதே தாண்டவத்தையே காணுவதற்காக அங்கே தனக்கு முன்னேயே தவம் செய்துகொண்டிருக்கும் மத்யந்தின மகரிஷியின் புதல்வனான வியாக்ரபாதனோடு ஆதிசேஷன் என்ற பதஞ்சலமுனி தவஞ்செய்தார். அத்தவப்பயனாய் அவ்விருவருக்கும் தைப்பூசத்தில், பகவான் தன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்ற ஐந்து தொழிலையும் விளக்கும் ஆனந்தத் தாண்டவத்தை "வெகு நாகரீகமாகவே கனகசபையில்" செய்து காண்பித்தார். "சடையாட, அரவபடமாட, தோம்தோம் என்றும், பதவிகள் தந்தோம் என்றும், தோம் தகிட தகஜம் என்றும்" பகவானாட, பதஞ்சலியும் புலிப்பாதரும் கண்டு களித்தனர்.

அந்த நடனமே தில்லையில் இன்று அனைவரும் கண்டு கடைத்தேறுகின்றனர். நாம் குண்டலினி என்ற சேஷசர்ப்பத்தை கிளப்பி நித்திரைபோல் நிச்சலமாயும், நிம்மதியாயுமிருக்கும் நிலையான யோகத்தில் அந்த நடனத்தைப் பார்க்கலாம் என்ற உண்மையைத்தான் சிதம்பரத்தில் நடராஜனுடைய ஸபையின்முன் இருக்கும் கோவிந்தராஜனின் சன்னிதி விளக்குகிறது. "மார்கழி மாதத்தில் ஆதிரை நாளையில்வந்து சிதம்பர தேசிகனை பாராத பாவிகட்கு எதுமில்லை; இந்த பாரினில் வந்து பிறவாதவரே."





# மொழிபெயர்ப்புப் பகுதி.

## கதைக் கடல்.

### மதனமஞ்ஜூகா என்ற ஆறாவது லம்பகம்.

(சில்பஸ்ரீ இரண்டாவது வால்யூம் கடைசி பகுதி 794ம் பக்கத் தொடர்ச்சி.)

(டாக்டர். வே. ராகவன்.)

#### உபகதை 2

முன் கங்கைக்கரையில் ஒரு பிராம்மணனும் ஒரு சண்டாளனும் ஒரே ஸமயத்தில் உணவை நீத்துத் தவஞ்செய்துகொண்டிருந்தனர். கங்கையில் மீன்களைப் பிடித்துத் தின்றுகொண்டிருந்த செம்படவரைப் பார்த்துப் பசிகொண்ட மூடப்பிராமணன் நினைத்தான்: "ஆகா! இந்த செம்படவரே உலகில் அதிர்ஷ்டசாலிகள்; இவர் தம் இஷ்டப்படி தினமும் மத்ஸ்ய மாம்ஸத்தைத் தின்கின்றனர்." அதே செம்படவரைப் பார்த்துச் சண்டாளன் நினைத்தான்: "ஜீவன்களைக் கொன்று மாம்ஸத்தை புஜிக்கும் இவர் நாசமாய்போக. நான் இங்கிருந்து கொண்டு இவருடைய முகங்களைப் பார்த்துக் கொண்டிருப்பானேன்?" இப்படி யோஜித்துத் தன் கண்களை மூடிக்கொண்டவனாய் தன் ஆத்மாவிலேயே நிஷ்டையடைந்தான். நாளடைவில் உணவில்லாததால் அந்தப் பிராம்மணன், அந்தச் சண்டாளன் இருவரும் உயிர் துறந்தனர். பிராமணனின் உடலை நாய்கள் தின்றன; சண்டாளனுடைய உடல் கங்கையில் விழுந்தது. புலன்களை வெல்லாத பிராம்மணன் செம்படவ குலத்திலேயே பிறந்தான்; ஆனால் கங்கைக்கரையில் மரித்த புண்ணியத்தால் முற்பிறப்பின் நினைவோடு பிறந்தான். அந்தச்சண்டாளனும் அந்த கங்கைக்கரையிலேயே அரண்மனையில் தன் முன்பிறப்பின் நினைவோடு கூட, பெரிய புத்தியுடையவனாயும் ஆத்மசக்தி குன்றாதவனாயும் பிறந்தான். இப்படி முன் பிறப்பின் நினைவுடன் பிறந்த இவ்விருவரில் செம்படவனை ஒருவன் வருந்தினான்; அரசனை மற்றொருவன் இன்புற்றான். இப்படியாக அறம் என்ற மரத்தின் வேர் போன்ற மனம் எவனுக்கு சுத்தமில்லையோ, அவன் அசுத்தமான பயனையடைகிறான்; எவனுக்கு சுத்தமோ, அவன் தூயபயனைப் பெறுகிறான்; இதற்குச் சந்தேகமில்லை.

இப்படி தேவி தாராதத்தையிடம் சொல்லி, மறுபடியும் ராஜன் களிங்கதத்தன் பேச்சிடையே அவளிடம் சொன்னான்: "தேவி! மேலும் அதிக தைரியத்தைக்காட்டும் செயலொன்று செய்யப்படுமானால், அது (அவச்யம்) பலனைக் கொடுக்கும்; ஏனெனில், ஐச்வர்யங்கள் தைர்யத்தைப் பின்தொடர்ந்தோடுகின்றன. இவ்விஷயத்தில் ஆச்சரியமான இந்தக் கதையைச் சொல்லுகிறேன், கேள்:

## உபகதை 3

அவந்திதேசத்தில் உலகுமுழுதும் அறியும் உஜ்ஜயினி என்ற நகரம் இருக்கிறதல்லவா? அது மஹாகாலன் என்ற சிவமூர்த்தியின் இருப்பிடம்; அங்குள்ள வெண்மாளிகைகள் மஹாகாலசிவனைத் தொழவேண்டி அவ்விடம் வந்த கைலாஸ சிகரங்களோவென்று தோன்றும். நல்ல வேந்தன் என்ற நீர்; நூற்றுக்கணக்காய் போய்க்கொண்டிருக்கும் ஆறுகள் போன்ற சேனைகள்; மலைபோல் தாங்கக்கூடிய மித்திர ராஜாக்கள்; இவற்றுடன் உஜ்ஜயினி கடல்போல் ஆழம் நிலைக்காததாய் கிடந்தது. அவ்வுஜ்ஜயினியில் விக்ரமஸிம்ஹன் என்று பொருள்கொண்ட பெயரோடுகூடிய அரசன் இருந்தான்; அவனுக்குமுன் பகையர் என்ற சிறு மிருகங்கள் ஓரிடத்திலும் நில்லா. பகையரின்றி, போர்விழாவற்று, தன் தோள் வலியிலும் தன் அஸ்திரங்களிலும் பெருமை குறைந்தவனாய் தனக்குள்ளேயே தவித்துக்கொண்டிருந்தான். அரசனின் எண்ணத்தையறிந்த மந்திரி அமரகுப்தன் பேச்சிடையே அரசனிடம் சொன்னான்: "அரசே! தம் தோள்வலியின் கர்வத்தாலும் தம் அஸ்த்ரவித்தையின் மதத்தாலும் அரசர் சத்ருக்களை விரும்பினால் தீங்குவரும். அப்படியே, முன் பாணாஸுரன் தன் ஆயிரம் புஜங்களின் கர்வத்தால் தன்னோடு சண்டைபோடக்கூடிய சத்ரு வேண்டுமென்று சிவனை வழிபட்டு வேண்டினன்; அவன் வேண்டிய வரம் கிடைக்க அவனுக்குச் சத்ருவாய் வாய்த்து, விஷ்ணுவே காடாய்க்கிடந்த அவன் கைகளை வெட்டினார். ஆகையால், நீரும் சண்டையில்லாததால் அதிருப்திகொள்ளக்கூடாது; தீமையையும் பகைவனையும் விரும்பலாகாது. உமக்கிருக்கும் சஸ்திரப்பயிற்சியையும் வீர்யத்தையும் காண்பிக்கவேண்டுமென்று ஆசையிருந்தால் அதற்குத்தகுந்த இடமான காட்டில் வேட்டை செய்து காண்பியும். தேகப்பயிற்சி முதலியவற்றிற்காக அரசர்களுக்கு வேட்டை எடுத்ததே; காட்டுவிலங்குகளும் பூமியை சூன்யமாய் செய்துவிட விரும்புகின்றன; ஆகையால் அரசன் அவைகளைக் கொல்லவேண்டும்; இதனாலேயும் வேட்டை விரும்பப்படுகிறது. ஆனாலும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதில் அதிகமாகவும் ஈடுபட்டு விடக்கூடாது; அப்படி அதிகமாக வேட்டையில் ஈடுபட்டே பாண்டு முதலிய பண்டையரசர்கள் மாண்டனர். இப்படி நன்மதியுள்ள மந்திரி அமரகுப்தன் சொல்ல, 'அப்படியே' என்று அரசன் விக்ரமஸிம்ஹனும் ஒப்புக்கொண்டான். மறுநாள் விக்ரமஸிம்ஹன் வேட்டைக்காக நகரத்திலிருந்து கிளம்பினான். தரைமுழுதும் குதிரை, காலாட்கள், வேட்டை நாய்கள்,—இதன்மயமாயிற்று; திக்குகள் பற்பலவகையில் போடப்பட்ட வலைமயமாயின; வான்முழுதும் குதூஹலத்தோடுகூடிய வேட்டையாட்களின் கூக்குரல் மயமாயிற்று; யானைமீது வந்துகொண்டிருக்கும் அரசன் நகரத்திற்கு வெளியில், பாழடைந்த கோயிலொன்றில் தனிமையில் நின்றுகொண்டிருக்கும் இரண்டு மனிதர்களைக் கண்டான். மிகவும் ரஹஸ்யமாய் தமக்குள் தம்மிஷ்டப்படி ஏதோ மந்திராலோசனை செய்துகொண்டிருப்பவர்களாக அவ்விருவரையும் தூரத்திலிருந்து தீர்மானித்தவனாய் அரசன் வேட்டையாடும் காட்டிற்குச் சென்றான். அங்கு, உருவிய கத்திகளோடுகூடிய வேட்டையாட்களையும், கிழம்புலிகளையும், ஸிம்ஹங்களின் கர்ஜனைகளையும், காட்டுப்பிரதேசங்களையும், மாங்களையும், மலைகளையும் கண்டு அரசன் திருப்தியடைந்தான். யானைகளைக்கொன்ற சிங்கங்களை அரசன் கொல்ல, அச்சிங்கங்களின் நகத்துவாரங்களிலிருந்து விழுந்த முத்துக்கள் அரசனின் வீரியத்தின் வித்துகள்போல பூமியில் பரப்பப்பட்டன. குறுக்கே துள்ளியோடும் மான்கள் அவனைக் குறுக்கிட, அவற்றை எப்பொழுதும் நேராகவே நடக்கும் அரசன் பாயும்முன்னேயே லகுவாய் பிளந்து களித்தான். வெகுநேரம் வேட்டையாடிவிட்டு, ஸேவகர் களைத்துப்போக, நாணைத் தளர்த்திக்கொண்டு அரசன் உஜ்ஜயினிக்குத் திரும்பி வந்தான். முன் போகும்போது பார்த்த இருவரும் அப்பொழுதும் அந்த கோயிலிலேயே நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். "இவ்விருவரும் யார்? இவ்வளவுநேரம் இவர் என்னதான் யோஜனை செய்கின்றனர்? ஏதோ பெரும் ரஹஸ்யத்தைப் பேசிக்கொண்டிருக்கும் இவர்கள் நிச்சயம் ஒற்றராயிருக்கவேண்டும்." இப்படி நினைத்துக் தன் வாசற்காப்போனை அனுப்பி, அவ்விருவரையும் அழைத்துவந்து, கைதி செய்தான்.

மறுநாள் அவ்விருவரையும் ஆஸ்தானத்திற் கழைத்து அரசன் கேட்டான்: "நீர் யார்? அவ்வளவு நேரம் நீர் செய்த மந்திராலோசனை யாது?" என்று. அப்படி அரசன் கேட்க, இருவரும் அபயத்தை வேண்டிக்கொண்டனர். இருவரில் இளைஞன் பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தான்:

'நடந்ததை நடந்தபடி சொல்லுகிறேன், கேளும், அரசே! இந்த உம்முடைய நகரத்திலேயே கரபகன் என்று பிராம்மணன் ஒருவன் இருந்தான். மேலான வீரன் ஒருவன் மகனாய் பிறக்கவேண்டுமென்று அவன் அக்னி பகவானைத்தொழ, அந்த வைதிகவித்வானுக்கு நான் பிள்ளையாய் பிறந்தேன். அந்த என் தகப்பன் தாயுடன் பரலோகம் சென்றுவிட, சிறுவனாயிருந்த நான் படித்திருந்தும், கவனிப்பாரில்லாததால், பிராம்மணமார்க்கத்தை விடுத்து சூதாடுவதிலேயும், சஸ்த்திரம் பயிலுவதிலும் ஈடுபட்டேன். பெரியோரின் அடக்குமுறையில்லாமற்போனால் எவனுடைய இளம்பிராயம்தான் கட்டுப்பாடின்றிப் போகாது? அதனால் நாளடைவில், இளமையைத் தாண்டியதும், தோள்வலி மதம் உண்டாகி, காட்டில் அம்புதூவி விளையாடச் சென்றேன். அப்பொழுது அவ்வழியே நகரத்திலிருந்து ஒரு மாது வந்தாள். வேண்டியவர் பலரால் சூழப்பட்டு அவள் பல்லக்கில் வந்துகொண்டிருந்தாள். திடீரென அத்தருணம் சங்கிலியை முறித்துக்கொண்டு எங்கிருந்தோ வந்த யானையொன்று அவளைக்குறித்து மதத்தோடு ஓடிற்று. அந்த யானையைக்கண்ட பயத்தால் அவளுடைய கணவனும் பின்தொடரும் மற்றவரும் பேடிகளாய் அவளை விட்டுவிட்டு இங்குமங்குமாய் ஓடிவிட்டனர். அதைப் பார்த்து பரபரப்புடன் நான் நினைத்தேன்: "அந்தோ! பயந்தவர்களால் இவள் ஒண்டியாய் விடப்பட்டுப்போனாளே! பாவம்! கதியற்ற இவளை யானையிடமிருந்து நான் காக்கிறேன். ஆபத்திலுள்ளவரைக் காப்பாற்றாத உயிரும் ஆண்மையும் எதற்கு?" இப்படி கர்ஜித்துக்கொண்டு நான் அப் பெரும் யானையைக் குறித்தோடினேன். யானை ஸ்திரீயை விட்டுவிட்டு என் பக்கம் ஓடிவந்தது. பயந்த அந்தப்பெண் என்னைப் பார்த்துக்கொண்டிருக்க, நான் ஓடிக்கொண்டே யானையை வெகுதூரம் அவ்விடம் விட்டு இழுத்துக்கொண்டு போய்விட்டேன். பிறகு முறிந்துகிடந்த இலைகள் நிரம்பிய மாக்கிளையொன்றின்பின் மறைந்துகொண்டு, மரத்தின்மேல் ஏறி, அவ்வொடிந்த கிளையை குறுக்கே யானையின்வழியில் லகுவாய் நிறுத்திவிட்டு நான் ஓடிவிட்டேன். யானை அக்கிளையைப் பொடிசெய்துவிட்டுப் போய்ச் சேர்ந்தது. அதன்மேல் நான் வேகமாய் அம்மங்கையிடம் வந்தேன். யானையால் பயந்திருந்த அவளை 'உடம்பிற்கு தீங்கொன்றுமில்லையே' என்று விசாரித்தேன். துன்புற்றிருந்த அவளும் என்னைப்பார்த்து இன்புற்றவளாய் சொன்னாள்: "இந்த பயந்தாங்குளிக்கு மனைவியாய் அளிக்கப்பட்ட எனக்கு க்ஷேமம் ஏது? என்னைக் காப்பாற்றிய ப்ரபுவே! இப்படிப்பட்ட ஸங்கடத்தில் அவன் என்னை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டானே! தீங்கொன்றும் நேராமல் ஸௌக்யமாய் உம்மை மறுபடியும் கண்டேனே, இதே எனக்கு க்ஷேமம். அவன் எவ்வாறான கணவன்? நீரே எனக்கு இப்போது பதி. நீரே உம் உயிரைப் பொருட்படுத்தாது, மிருத்யுவின் வாயிலிருந்து என்னை வெளியிழுத்தீர். இதோ என் கணவன் வேலைக்காரருடன் வருகிறான்; ஆகையால் நீர் தைர்யமாய் எங்கள் பின்னால் வந்துகொண்டிரும். ஸமயம் நேர்ந்ததும் நான் உம்மிடம் வருகிறேன்; இருவரும் எங்கேயாவது போய்விடுவோம்." இப்படி அவள் சொல்ல, 'அப்படியே' என்று நான் ஏற்றுக்கொண்டேன். "ரூபவதியாயிருப்பினும், தானாய்த் தன்னை நமக்கு அர்ப்பணஞ்செய்தவளாயினும் இவள் பரஸ்த்ரீயன்றோ" என்பது மனோதைர்யத்தின் போக்கு; இன்பங்களில் ஈடுபடும் யௌவனத்தின் போக்கல்ல. மறுக்ஷணம் கணவன் அவளை அடைந்தான். அவனுடனும் வேலையாட்களுடனும் அவள் சென்றாள்; மறைவாய் அவள் கொடுத்த உணவை வைத்துக்கொண்டு, நான் மற்றொரு பாதைவழியாய் அவள் பின்னாலேயே ஒருவருக்கும் தெரியாமல் வெகுதூரம் சென்றேன். யானையின் பயத்தில் பல்லக்கிலிருந்து விழுந்ததால் உடம்பெல்லாம் வலியென்று பொய் சொல்லி, வழிமுழுதும் தன்னைக் கணவன் தொடாதபடி அவள் செய்துகொண்டாள். தன்னிடம் ஆசை

கொண்ட பரபுருஷனொருவனை எதிர்பார்த்தவளாயும், தாங்கமுடியாத நஞ்சுநெஞ்சில் நிலைத்திருப்பவளாயும், மாறுபட்ட மனமுள்ளவளாயுமிருக்கும் எந்த ஸ்திரீதான், கோவிந்தப் பாம்பு போல், தன்கணவனிடம் பழிக்குப்பழி வாங்க மாட்டாள்?

கிரமமாய் நாங்கள் லோஹநகரம் வந்து சேர்ந்தோம். அவ்வூரிலேதான் அந்த மாதின் கணவன் வியாபாரஞ்செய்துகொண்டு வஸித்து வந்தான். அங்கு ஒரு பகற்போது நாங்கள் எல்லோரும் ஊருக்கு வெளியேயுள்ள கோயிலில் தங்கியிருந்தோம். அவ்விடத்தில்தான் இந்தத் தோழன், இரண்டாவது பிராம்மணன் என்னுடன் கூடினான். நாங்கள் இருவரும் அப்பொழுதே புதிதாய் ஸந்தித்தவராயிருந்தும், எங்கள் இருவருக்கும் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. பூர்வஜன்மத்திலிருந்து சேர்ந்திருக்கும் அன்பை ஜீவன்களின் மனது தெரிந்துகொண்டுவிடும். ஆகையால் என் சொந்த ரஹஸ்யம் முழுதையும் நான் அவனிடம் சொன்னேன். அதை அறிந்து கொண்டதன் மேல் அவன் என்னிடம் சொன்னான்: "சும்மாயிரு; நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாயோ, அதற்கு வழியொன்று இருக்கிறது. இந்த வியாபாரியின் மனைவிக்கு நாத்தியொருத்தி இங்கு இருக்கிறாள். விஷயத்தைத் தெரிவித்தால் அவள் என்னுடன் இங்கு வந்துவிடத் தயாராயிருப்பாள்; அவளுடைய ஸஹாயத்தைக்கொண்டு உன் விருப்பத்தை நடத்திவைக்கிறேன்." இப்படி என்னிடம் சொல்லிவிட்டு அந்த பிராம்மணன் வணிகன் வீட்டிற்குச்சென்று ரஹஸ்யமாய் வணிகனுடைய ஸஹோதரி (அப்பெண்ணின் நாத்தி)யிடம் விஷயத்தை உள்ளபடி சொன்னான். ஏற்பாடு செய்துகொண்டு மறுநாள் நாத்தி தன் ஸஹோதரனின் மனைவியை ஊருக்கு வெளியிலுள்ள கோயிலிற்கு அழைத துவந்தாள். நாத்தி என் நண்பனுக்குத் தன் ஸஹோதரன் மனைவிபோல் வேஷத்தைப் போட்டாள். எங்களிடம் தான் யோஜித்திருக்கும் ஏற்பாடுகளை சொல்லிவிட்டு, ஸ்திரீ வேஷம் பூண்ட என் நண்பனை அழைத்துக் கொண்டு நாத்தி நகரத்திற்குள் நுழைந்து, தன் வீட்டிற்குள்ளும் சென்றாள். நானோ, என் காதலிக்கு ஆண்வேஷம் பூட்டி அவளுடன் இந்த உஜ்ஜயினிக்கு வந்து சேர்ந்தேன். அன்றிரவு வணிகன் வீட்டில் கொண்டாட்டம்; ஜனங்கள் மயங்கித்தூங்கிக்கொண்டிருந்தனர்; நாத்தி என் நண்பனுடன் வெளியே வந்துவிட்டாள். பிறகு, மறைந்து மறைந்துப் பிரயாணஞ் செய்து கொண்டு இந்த உஜ்ஜயினிக்கு அவ்விருவரும் வந்தார்கள்; இங்கு நாங்களிருவரும் கூடினோம். இந்தவிதத்தில் புதுயௌவனத்திலுள்ள இருமனைவிகளை நாங்கள் அடைந்தோம். அந்த நாத்தியும் அவள் ஸஹோதரனின் மனைவியும் தமக்கு எங்களிடமிருந்த காதலால் தம்மைத்தானே எங்களுக்கு அர்ப்பணஞ்செய்துகொண்டனர். எங்களுக்கு வஸிக்கஇடம் வேண்டும்; எந்த இடத்தை நினைத்தாலும் ஸந்தேஹமும் பயமும் வருகின்றன; ஸ்வயேச்சையாய் ஸாஹஸத்தைச் செய்துவிட்ட எவனுடைய மனதுதான் ஓரிடத்தில் நிம்மதியடையும்? ஆகையால் வஸிக்கக்கூடிய இடத்தைப்பற்றியும், வஸிப்பதற்குவேண்டிய பொருளைப் பற்றியும்தான் நாங்கள் இருவரும் வெகு நேரம் ரஹஸ்யமாய் யோஜனை செய்துகொண்டிருந்தோம். அப்பொழுதுதான் தேவரீர் எங்களை தூரத்திலிருந்து கண்டது; கண்டு எங்களை அழைத்துவரச் சொல்லி, ஒற்றர் என்ற ஸந்தேகத்தால் சிறையில் வைத்தீர்கள்; இன்று தாங்கள் கேட்டதும் எங்கள் வரலாற்றைச் சொல்லிவிட்டேன்; இனி தங்களுடைய ஆக்ஞை."

அந்த யுவா இவ்வாறு கூறியதும் அரசன் விக்ரமஸிம்ஹன் அவ்விரு பிராம்மணர்களையும் பார்த்துச் சொன்னான்: "உங்களிடம் எனக்குத் திருப்தியுண்டாகிறது; பயப்படவேண்டாம்; இந்த நகரத்திலேயே தங்குங்கள்; உமக்கு வேண்டிய பொருளை நானே அளிக்கிறேன்." இப்படிக் கூறிவிட்டு, அரசன் அவர்களுக்கு விரும்பிய அளவு பொருளை வழங்கினான். அவர்களும் தம் மனைவியரோடுகூட அரசனின் அருகாமையிலேயே சுகமாய் இருந்துவந்தனர்.

இப்படியாக பெரிய வீரியத்தால் ஸாதிக்கப்பட்ட காரியங்களில் மனிதர்களுக்கு ஐச்வர்யங்கள் குடிகொண்டிருக்கின்றன. இப்படியே ஸாஹஸம் செழித்த புத்திமான்களிடம் அரசர்கள் ஸந்தோஷித்து அவர்களுக்கு தானங்கள் கொடுத்து வருகின்றனர்.

தேவர் அஸுரர் உட்பட இந்த ஸ்ருஷ்டியில் எல்லோருமே இந்தப் பிறப்பிலோ, முன்பிறப்புகளிலோ தம்மாலேயே செய்யப்பட்ட நற்செயல்களாலும் தீச்செயல்களாலும் அததற்கு ஒத்த பலவித அனுபவங்களையுடையவராக ஆகின்றனர்.

தேவி! ஆகையால், கனவில் ஆகாயத்திலிருந்து விழுந்து உன் கர்ப்பத்தில் நுழைவதாக நீ கண்ட ஜ்வாலை தேவஜாதியைச் சேர்ந்த ஒருத்தி தன் கர்மத்தின் பயனாய் உன் கர்ப்பத்தை யடைந்திருக்கிறாள் என்பதை நிச்சயமாய் தெரிவிக்கிறது. இப்படித் தன் கணவன் களிங்கதத்த ராஜனிடமிருந்து கேட்டு கர்ப்பிணியாயிருந்த ராணி தாராதத்தை மிகவும் மகிழ்ந்தாள்.

முதலலை முற்றிற்று.

# காலஞ்சென்ற நண்பர் ஸ்ரீ சோமசுந்தர தேசிகர்.

## ஸ்ரீ சோமசுந்தர தேசிகர்.

இலக்கண விளக்க ஆசிரியரின் பரம்பரையிலே உதித்த சோமசுந்தர தேசிகர் என்னும் தமிழ்ப்புலவர் சென்ற மார்கழி மாதம் 10-ம் தேதி சோமவாரத்தன்று மறைந்தார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறோம். இப்பெரியார் தமிழ் கற்பிப்பதில் மிகவும் ஆர்வமுடையவர். தஞ்சாவூர் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் பல ஆண்டுகள் தமிழ்ப் போதகாசிரியராக இருந்து பல சிறுவர் சிறுமிகளுக்கும் தமிழ் கற்றுக்கொடுத்து வந்தார். சென்னை சர்வகலாசாலையார் பதிப்பித்த தமிழ்ப்பேரகராதிக்கு பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் ஒரு தமிழ்ப்பண்டிதர் தேவையாயிருந்தபோது, இவர் ஜில்லாபோர்ட்டரால் அனுப்பப்பட்டார். அகராதிவேலை முற்றுப்பெற்றதும் பெருததுமாக இருக்கையிலே இவர் திடீரென காலஞ்சென்றது மிகவும் வருந்தத்தக்கது.

தேசிகர் தமிழாராய்ச்சியிலும் சாசன ஆராய்ச்சியிலும் வல்லவர்; சோழவம்ச சரித்திரத்தில் பல நுட்பங்களையும் ஆராய்ந்தறிந்தவர்; பிறர் கண்டறியாத சாசனங்களைக் கண்டுபிடித்தும், சாசனப்பொருளை விளக்கியும் பல கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார். சங்கநூல்களிலும் அதிகப் பயிற்சியுண்டு; சங்ககாலத்து அரசர்களின் சரிதைகளையும் கோவைப்படுத்தி எழுதியுள்ளார். சைவசித்தாந்தத்தில் அதிக ஊற்றம் படைத்தவர்; சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி ஆகிய இருவர்களின் காலத்தையும் சரிதங்களையும் ஆராய்ந்து நிருணயித்துள்ளார். பதினாறு பதினேழு நூற்றாண்டுகளிலே விளங்கிய புலவர்களை சாசனவாயிலாகவும் பிற ஆதாரங்களாலும் அறிந்து அவர்களது சரிதங்களை இரண்டு நூல்களாக வெளியிட்டுள்ளார். இவர் சென்ற வருஷம் வருஷம் பதிப்பித்த திருவாரூர்ப்பட்ளு 'சில்பஸ்ரீ'யில் முதற்பகுதியில் விமர்சனம் செய்யப்பெற்றது. 'சில்பஸ்ரீ'க்கு ஆதிமுதற்கொண்டே இவர் அரியசேவை செய்துவந்தார். தமிழிலே இசைப்பாட்டுகள் பாடிய பெரியோர்களின் சரிதங்களையும் பாடல்களையும் முறையே 'சில்பஸ்ரீ'யில் பதிப்பிப்பதாக உத்தேசித்து அவ்வாறு எழுதியனுப்பிவந்தார். அவர் மார்கழிப் பகுதிக்கென்று அனுப்பிய கட்டுரையை அப்பகுதியிற் பதிப்பிக்க இயலவில்லை; அதனை இப்பகுதியிலே பதிப்பித்துள்ளோம். தமிழ்ச்செல்வங்களை தானே அறிந்து அனுபவிப்பதோடு நில்லாமல் பிறருக்கும் அவற்றை அளித்து அவர்களோடு பகிர்ந்து அனுபவிக்கவேண்டுமென்ற பேரவாக்கொண்டு பல பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் எழுதியும் பல நூல்கள் இயற்றியும் உதவிய பெரியாரின் பிரிவு தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருநஷ்டமாகும்.

எமது அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்கு அறிவித்துக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.